வசமானது
லிபிய விமான
நிலையம்



பக்கம் 07

உதயன்

சுடர்: 29 கதிர்: 272 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 9, திங்கள் 25.08.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

25 AUG 2014



## தேர் மீதேறி வந்து அருள் தந்தான் வேலன்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் முருகன் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது. நாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அலங்காரக் கந்தன் தேரேறி வ்ரும் காட்சியைக் கண்டு களித்தனர். (22ஆம் பக்கம் பார்க்க)

தேர்த்திருவிழா படத் தொகுப்பு 2 ஆம் பக்கத்தில்

# கூட்டமைப்பு உறுப்பினர் மூவர் தமிழகத்துக்கு திடீர் பயணம்

## டில்லியில் இருந்து நாடு திரும்பும் திட்டத்தைக் கைவிட்டு

புதுடில்லி, ஓக.25

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் சந்திப்புக்களை முடித்துக் கொண்டு, நாடு திரும்பத் திட்டமிட்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறுவர் குழு, தமது பயணத் திட்டத்தை மாற்றிக் கொண்டுள்ளது. அவர்களில் மூவர் தமிழகத்துக்கு திடீர் பயணத்தை மேற்கொள்ள, ஏனைய மூவரும் நாடு திரும்பியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடா ளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரே தமிழகத்துக்குப் பயணமாகி யுள்ளனர் ஏனைய மூவரும் நேற்றிரவு நாடு திரும்பினர்.

தமி ழக முதலமைச்சர் செல்வி ஜெய லலிதாவுடன் சந்திப்பு மேற்கொள்வதற்கான சாத்தியங்கள் காணப்பட்டதை அடுத்தே தமிழ்க் கூட்டமைப்புக் குழு தமிழகத்துக்குப் பறந்துள்ளது.

இந்திய அரசின் அழைப்பை ஏற்று இந்தியாவுக்கு மூன்று நாள் பயணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சென்றிருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, க.சுரேஷ்பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன்,



எம்.ஏ.சுமந்திரன், பொன்.செல்வராஜா ஆகியோர் பயணம் மேற் கொண்டிருந்தனர்.

கடந்த வியாழக்கிழமை இந்தியாவைச் சென்றடைந்த குழுவினர், வெள்ளி – சனி இரு தினங்களிலும் சந்திப்புக்களை நடத்தினர். இந்திய வெளி விவகார அமைச்சின் செயலாளர், இந்திய வெளிவிவகார

22 ஆம் பக்கம் பார்க்க

## நல்லூர்க் கந்தன் தேர்த் திருவிழாவில் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக. 25

நல்லூரில் நேற்றைய தேர்த் திருவிழாவில் நான்கு பேரிடமிருந்து தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்த் திருவிழாவுக்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டிருந்தனர். அதனைச் சாதகமாகப் பயன்படுத்திய, திருடர்கள் தமது கைவரிசை யைக் காட்டியுள்ளனர். நகை கள் திருடப்பட்டமை தொடர்பில் நான்கு பேர் முறைப்பாடு செய்துள்ளனர். அது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை கோயிலுக்கு நகைகள் அணிந்து வருவதனை இயன்றவரை தவிர்க்குமாறு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. (ற-4)

## சாட்சியம் வழங்குவோருக்கு பணம் கொடுக்கப்படவில்லை

### மனித உரிமை செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு, ஓக.25

சாட்சியாளர்களுக்கு பணம் வழங்கப்பட்டது என்று சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என்று மனித உரிமை செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழு முன்னிலையில் சாட்சியமளிக்கும் நபர்களுக்கு பணம் செலுத்தப்பட்டது என்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்



துள்ளதாவது,

"சிங்கள, தமிழ் தாய்மார்களின் கண்ணீரை விலை கொடுத்து வாங்க முடியாது.

22 ஆம் பக்கம் பார்க்க

## மோசமானவர் பட்டியலில் மஹிந்த 13ஆவது இடம்

கொழும்பு, ஓக.25

உலகில் மோசமானவர்கள் பட்டியலில் இலங்கை ஜனாதிபதி 13ஆவது இடத்தில் உள்ளார் என 'ராங்கர்' என்ற இணையத்தளம் தெரிவித்துள்ளது. வரலாற்றுக் காலம் தொட்டு தற்போதைய காலம் வரையிலான கால கட்டத்தில் மிகவும் மோசமான மனிதர்களின் பட்டியலை குறித்த இணை

22 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கண் சிகிச்சைக்கான நவீன கருவி

### கொழும்பு செல்ல வேண்டிய தேவை இனி இல்லை

யாழ்ப்பாணம், ஓக 35

கண்ணில் மேற்கொள்ளப்படும் லேசர் சிகிச்சைக்குத் தேவையான நவீன கருவி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. அதனால் எதிர்காலத்தில் நோயாளர்கள் அந்தச் சிகிச்சைக்காக கொழும்புக்குச் செல்ல வேண்டிய தேவை இல்லை.– இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். போதனா வைத்தியசாலை

22 ஆம் பக்கம் பார்க்க

வரலாற்றுத் திருப்பம் ஏற்பட வாய்ப்பு உண்டா?

பக்கம் 14

## இறந்த பின்னர் வீணாகும் உறுப்புகளை தானம் செய்க

### கண் மருத்துவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக 25

இறந்த பின்னர் வீணாகிப் போகும் உடல் உறுப்புகளைத் தானம் செய்யுங்கள். அதன் மூலமாக அத்தகைய உறுப்புகளை இழந்தவர்களுக்கு அவற்றைப் பொருத்தி அவர்கள் உயிர் வாழ உதவிசெய்யுங்கள்.– என்று கேட்டுக் கொண்டுள்ளார் யாழ். போதனா

22 ஆம் பக்கம் பார்க்க

# கூட்டமைப்பின் இந்தியப் பயணம்; அரசின் பங்காளி கட்சிகள் எதிர்ப்பு

கொழும்பு, ஓக.25

நாடாளுமன்ற வெளிவிவகார குழுவுக்கு அறிவிக்காமலும், அந்தக் குழுவின் அனுமதியின்றியும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எவ்வாறு இந்தியாவுக்குச் சென்றது என்று கேள்வி எழுப்பியுள்ளன அரசின் பங்காளிக் கட்சிகள்.

இலங்கை அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரபூர்வமாக வெளிநாடுகளுக்குச் செல்வதானால் சபாநாயகரின் அனுமதியுடன் நாடாளுமன்ற வெளிவிவகாரக் குழு அதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும். ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அவ்வாறு எந்த ஏற்பாடுகளும் இன்றி இலங்கை அரசின் இறைமைக்கு எதிராக இந்தியாவில் கருத்துக் கூறியுள்ளது என்று ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் உட்பட இந்திய உயர் அதிகாரிகளை சந்தித்து 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள இராணுவ முகாம்கள், சிங்கள குடியேற்றங்கள் குறித்து அவர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்களும் அரசமைப்புக்கு முரணானவை என்றும் அந்த உறுப்பினர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியும் கூட்டமைப்பின் இந்தியப் பயணம் தொடர்பாக ஜனாதிபதியிடம் விசனம் தெரிவித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

கூட்டமைப்பின் இந்தியப் பயணம் எதிர்காலத்தில் ஆபத்தை எற்படுத்தும் என்றும் ஆகவே இவ்வாறான பயணங்களை எதிர்காலத்தில் தடுப்பதற்கான ஏற்பாடுகள் பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகின்றது என்றும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது என்று தெரியவருகின்றது. (ற)

## ரூ. 1 கோடிக்கு இடிதாங்கியை விற்க முயன்றவர் கைதானார்



கொழும்பு, ஓக.25

200 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்று நம்பப்படும் இடி தாங்கி ஒன்றை ஒரு கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயற்சித்த ஒருவரை கம்பளை பொலிஸ் விசேட அதிரடி படையினர் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் காரில் இடி தாங்கியை ஹற்றனிலிருந்து கொழும்புக்கு கொண்டு செல்லும்போது, ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் கினிகத்தேனை பிரதேசத்தில் வைத்து சந்தேக நபர் வந்த காரை நேற்று அதிகாலை 1 மணியளவில் பொலிஸார் சோதனைக் குட்படுத்தியுள்ளனர். அதன் போதே சட்டவிரோதமாக இடிதாங்கி கொண்டு செல்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து சந்தேகநபரைக் கைது செய்த பொலிஸார், இடி தாங்கியையும் கைப்பற்றி கினிகத்தேனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

சந்தேக நபரையும் இடி தாங்கி மற்றும் காரையும் ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## போதைப்பொருள் சந்தேகநபர் கைது

கொழும்பு, ஓக.25

ஒருகொடவத்தை மற்றும் கட்டுகஸ்தோட்டை ஆகிய பகுதிகளில் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட பெருந்தொகைப் போதைப்பொருள் தொடர்பிலான பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர் என்று பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கராச்சியில் இருந்து குறித்த நபர் இலங்கை வந்தபோது அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ற)

## வடக்கு மாகாண மக்களுக்காக செயற்படவில்லை கூட்டமைப்பு

### குற்றஞ்சாட்டுகின்றார் அமைச்சர் ரம்புக்வெல

கொழும்பு, ஓக.25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மக்களுக்காக செயற்படவில்லை என்று தெரிவித்துள்ளார் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்யவோ அல்லது வடக்கு மக்களின் நலன்களுக்காக செயற்படவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"அரசின் அபிவிருத்தி முயற்சிகளை விமர்சித்து அதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் லாபமீட்ட முயற்சிக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வடக்கு மாகாண சபையும், மக்களின் நலன்களில் கரிசனை கொண்டு செயற்படவில்லை.

13ஆம் திருத்தத்தை அரசியல் லாபமீட்டும் நோக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயன்படுத்தி வருகின்றது. 13ஆம் திருத்தத்தையும் மனித உரிமைகளையும் பற்றி குரல் கொடுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மக்களின் அபிவிருத்திக்காக எதனையும் செய்யத் தவறியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணமானது அரசின் அபிவிருத்திப் பணிகளை முடக்கும் நோக்கில் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நோக்கங்களை மக்கள் புரிந்துகொள்வார்கள். '- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)


## சீரற்ற காலநிலையால் மூவர் சாவு

கொழும்பு, ஓக.25

சீரற்ற காலநிலை காரணமாக கடந்த சில நாள்களில் மாத்திரம் 3 பேர் உயிரிழந்துள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

தங்கல்லை பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்கானவர் உட்பட இரு வரும் யாழ்ப்பாணத்தில் மின்னல் தாக்கி ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். (ற)







நேற்று சிறப்புற இடம்பெற்ற நல்லூர் முருகன் ஆலய தேர்த்திருவிழா காட்சிகள்









பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 09 திங்கட்கிழமை (25.08.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 272

# அரசின் ஏமாற்றுப்போக்காலேயே மோடியை நாடியது கூட்டமைப்பு

## இருதரப்பு பேச்சுக்கு ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு, ஒகஸ்ட் 25

**அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ் மக்களைத் தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட் டணி அரசு, இது விடயத்தில் இனியும் ஏமாற்றுப்போக்கைக் கடைப்பிடித்தால் அது இந்த நாட்டின் எதிர்காலத்துக்கு நல்ல சகுனமாக அமையாது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி பொதுவானதொரு இணக்கப்பாட்டுக்கு அரசு வரவேண்டும். அத்தகையதொரு தீர்வுப்பொறி முறைக்கு பிரதான எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஆதரவு வழங்கும். - இவ்வாறு அந்தக் கட்சியின் தலைமைத்துவ சபை உறுப்பினரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல நேற்றுத் தெரிவித்துள்ளார்.**

பிரதமர் நரேந்திரமோடி தலைமையிலான பாரதீய ஜனதாக் கட் சியின் அழைப்பின் பேரில் இந்தியா சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அறுவர் அடங்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு, பிரதமர் மோடி, வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் உள்ளிட்ட உயர்மட்டப் பிரமுகர்களைச் சந்தித்து தமிழர் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துரைத்தது. அதில் குறிப்பாக பிரதமர் மோடியுடனான சந்திப்பின் போது, "அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று இலங்கைத் தமிழர்களுக்குத் தீர்வொன்றைப் பெற்றுக்கொடுக்க இந்திய அரசு உதவும்" என்று பிரதமர் மோடி கூட்டமைப்பினரிடம் உறுதியளித்துள்ளார்.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணம், இந்தியப் பிரதிநிதிகளுடன் அவர்கள் நடத்திய சந்திப்புகளின்போது தெரிவிக்கப்பட்ட கருத்துகள் ஆகியவை தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்னவென்று அக்கட்சியின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவரான

(22 ஆம் பக்கம் பார்க்க)

## எங்கு சென்றாலும் இறுதியில் என்னிடமே வர வேண்டும்

### கூட்டமைப்பின் இந்தியப் பயணத்தால் ஜனாதிபதி மஹிந்த கடும் சீற்றம்

கொழும்பு, ஓக.25

சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் குழுவினர் இந்தியா செல்லவுள்ளதை அறிந்து ஜனாதிபதி கடும் சீற்றமடைந்தார். அவர்களது பயணத்துக்கு முன்பாக இதுகுறித்த தனது கடும் அதிருப்தியை அவர் தனது பிரதிநிதி ஒருவர் மூலமாக சம்பந்தனிடம் தெரிவித்தார். அதன் போது எங்கு சென்றாலும் இறுதியில் என்னிடமே நீங்கள் வர வேண்டும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பு ஊடகம் ஒன்றே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தியப் பயணம் குறித்து அரசுக்கு தகவல் எதுவும் தெரிவிக்கப்படாதது குறித்த தனது கடும் ஏமாற்றத்தை ஜனாதிபதி தனது பிரதிநிதி ஊடாக வெளிப்படுத்தியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணம் தன்னையும் அரசையும் நெருக்கடிக்குள் தள்ளுவதை நோக்கமாகக் கொண்டது.

கூட்டமைப்பினர் அரசை மாற்ற விரும்புகின்றனர். அரசுக்கும் அவர்களுக்குமிடையிலான முறுகல் நிலைக்கு

(22 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சி அலுவலகங்கள் மீது தாக்குதல்

கொழும்பு, ஓக.25

மொனராகலை மாவட்டத்தில் எதிர்க்கட்சி வேட்பாளர்களின் பரப்புரை அலுவலகங்கள் மீது நேற்றுமுன்தினம் இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பிபில தேர்தல் தொகுதியில் ஐக்கிய தேசிய கட்சியின் 13 தேர்தல் அலுவலகங்கள் ஜீப் வண்டிகளில் வந்தவர்களால் தாக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிபில அமைப்பாளர் நிஹால் சந்திர சிறி

(22 ஆம் பக்கம் பார்க்க)

## மோடியின் தலையீட்டால் செயற்படுமா 13 திருத்தம்?

### சாத்தியமானால் மாபெரும் வெற்றி என்கிறார் ஹசனலி எம்.பி.

கொழும்பு.ஓக.25

மோடி தலைமையிலான இந்திய அரசின் தலையீட்டால் இலங்கையில் அரசமைப்பின் 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படுமானால், அது பெரும் வெற்றியாகும் என்று தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணத்தையும் வரவேற்றுள்ளது.

சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் மு.காவின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹசனலி கருத்துக் கூறும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் டில்லி பயணம் சம்பந்தமாகவும், 13ஆவது திருத்தம் குறித்தும் அவரிடம் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"மோடியின் தலையீட்டால் 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படுமா என்பது தெரியவில்லை. ஆயினும் அவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டால் அது மாபெரும் வெற்றியாக அமையும்"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற-சி)

## பச்சிளம் குழந்தையை நிலத்தில் அடித்துக் கொன்ற கொடூரே தந்தை

### மனைவி மீதுள்ள கோபத்தால்

கொழும்பு, ஓக.25

மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக தனது ஒன்றரை வயதுப் பச்சிளம் குழந்தையை தந்தையொருவர் நிலத் தில் அடித்துக்கொன்ற கோரச் சம்பவமொன்று நேற்று பேரு வளையில் நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

பேருவளை பவுளவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த சம்பத் (வயது-29) என்பவர் தனது மனைவியுடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக தனது ஒரு வருடமும் ஒன்பது மாத்முமேயான பெண்குழந்தையை தரையில் அடித்துக் கொன்றுள்ளார்.

நீண்டநாள்களாக நிலவிய குடும்பப் பிரச்சனை காரணமாக ஒருமாதகாலமாக கணவனும் மனைவியும் பிரிந்து வாழ்ந்துள்ளனர். சம்பவதினம் மனைவியைப் பார்க்கச் சென்ற நபர் தொலை பேசியில் தொடர்புகொண்டு கீழ் வீதியிலுள்ள விகாரைக்கு அருகில் வருமாறு அழைத்துள்ளார். வரமறுத்த மனைவி மீது கடும் கோபத்துடன் வீட்டினுள் நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ளார். அந்த வேளையில் ஆவேசமாக மனைவியின் கையில் இருந்த குழந்தையை பறித்து தரையில் அடித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

சம்பவ இடத்திற்குச்சென்ற பொலிஸார் குற்றவாளியைக்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்களுக்கு விரோதமாக நடக்கின்றது பா.ஜ.க. அரசு

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குற்றஞ்சாட்டுகின்றது

சென்னை, ஓக.25

இலங்கை தமிழர் பிரச்சினையில் பா.ஜ.க. அரசு தமிழர்களுக்கு விரோதமாக செயற்பட்டு வருகிறது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக்குழு உறுப்பினர் நல்லகண்ணு குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"ஈழத்தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து போராடி வருகிறது. பாரதிய ஜனதாக் கட்சியினரை இலங்

(22 ஆம் பக்கம் பார்க்க)

## தாமதிக்கப்படும் அமெ. ஊடகவியலாளரின் விஸா

### சீன, ஜப்பான் தலைவர்கள் வருகையாலாம்

கொழும்பு, ஓக.25

இந்தியாவின் புதுடில்லி நகரை மையமாகக் கொண்டு இயங்கிவரும் அமெரிக்க ஊடகவியலாளரின் நுழைவிசைவுக் கோரிக்கை கிடப்பில் போடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பிரபல அமெரிக்க ஊடகமான நியூயோர்க் டைம்ஸின் தென் ஆசிய செய்தியாளராக கடமையாற்றி வரும் கிரேடினர் ஹாரீஸ் என்ற ஊடகவியலாளரே இவ்வாறு கடந்த ஜூன் மாதம் நுழைவிசைவுக்காக விண்ணப்பித்திருந்தார். எனினும், குறித்த நுழைவிசைவு விண்ணப்பத்தை இலங்கை அதிகாரிகள் கிடப்பில் போட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

அளுத்கம சம்பவம் உள்ளிட்ட சில உள்ளூர் விடயங்கள் தொடர்பில்செய்தி சேகரிப்பில் ஈடுபடும் நோக்கில் குறித்த ஊடகவியலாளர் நுழைவிசைவு கோரியுள்ளார் என்று வெளி

(22 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்கள் பிரச்சினை: சுவாமியின் யோசனையை நிராகரித்த இலங்கை

கொழும்பு, ஓக.25

இலங்கை, இந்திய மீனவர் பிரச்சினையில் பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்த யோசனையை, இலங்கை அரசு திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

இலங்கை கடல் பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க 3 ஆண்டுகளுக்கான தற்காலிக மீன்பிடி அனுமதியை அளிக்கலாம் என்று இலங்கை அரசுக்கு சமீபத்தில் சுப்பிரமணிய சுவாமி யோசனை தெரிவித்திருந்தார். இந்திய கடல் பகுதியில் மீன் வளம் குறைந்துவிட்டதால்,

(22 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை குறித்த பரப்புரை ஒப்பந்தம் அமெரிக்க விசாரணைகள் ஆரம்பம்

### நிறுவனங்கள் வழங்கிய தகவல்களின் உண்மைத்தன்மை பற்றி ஆராய்வு

கொழும்பு, ஓக.25

இலங்கை அரசால் பரப்புரை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட பரப்புரை நிறுவனங்கள் வழங்கிய தகவல்களின் உண்மைத் தன்மை குறித்து அமெரிக்கா விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க நீதி திணைக்களம் இது குறித்து தான் மீளாய்வு செய்யப்போவ தாகத் தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட பரப்புரை நிறுவனங்கள் சமர்ப்பித்த சகல தரவுகளையும் நாங்கள் மீளாய்வு செய்வோம் என அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிழையான தகவல்களை வேண்டு மென்றே வழங்குபவர்களுக்கு பாரிய அபராதம் விதிக்கப்படலாம் அல்லது சிறைத் தண்டனைகள்கூட வழங்கப்படலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ற)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கோபிநாத் யுகவர்ணன்

மலர்வு 12.06.1987 — உதிர்வு 30.08.2014

**திதி: அமாவாசை (25.08.2014)**



ஆண்டுகள் ஆறு ஆனது மகனே!
நீங்கள் எமை உடலால் பிரிந்து மறைந்தாலும்
பிரிக்கவே முடியாது உங்கள் நினைவை
ஆறுதல் அடைய முடியவில்லை
கண்ணீர் ஆறாய் பெருகுதையா
என்ன நினைத்தாரோ எம் இறைவன்
எங்கள் பாச மகனை எமை விட்டு பிரித்து விட்டார்
ஏங்கித் தவிக்கின்றோம் இதுதான் விதியென்று
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல முருகப் பெருமானை வேண்டுகின்றோம்

உங்கள் பிரிவால் துயறுரும்
அப்பா, அம்மா, தம்பி, தங்கை.
பழைய வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.



## 24 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோலகட்டி, வயாவிளான்

அமரர் **வைத்திலிங்கம் நடராசா**

(முன்னாள் பொறுப்பதிகாரி–
வலி.கிழக்கு பிரதேசசபை– அச்சுவேலி)

தோற்றம் 18 . 06 . 1933 — மறைவு 20 . 08 . 1990

திதி: 25.08.2014

பாசமிகு அப்பாவே!
ஆண்டுகள் இருபத்து நான்கு மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எமது நெஞ்சங்களை
விட்டு என்றும் அகலாது
உங்களின் ஆத்மசாந்திக்காக நல்லூர்க்
கந்தனின் தீர்த்தத்தில் நின்று கொண்டு
உங்களது பாதங்களை கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சிக்கும்...

'துஷா இல்லம்', சாமுவேல்மான் முதலாம் ஒழுங்கை.
கற்பக்குணை உடுவில் மேற்கு, சுன்னாகம்.
T.P :021 490 9283

அன்பு மனைவி
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[51179][4.3.6]


# இவ்வருட அரையாண்டில் 156 நிறுவனங்கள் வடக்கில் சேமலாப நிதியில் இணைவு

யாழ்ப்பாணம், ஓக.25

இந்த வருடத்தில் அரை ஆண்டு காலப்பகுதியில் வடமாகாணத்தில் 156 நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளதாக வட மாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

வடக்கில் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தின் கீழ் தொழில் நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்கள் தொடர்ந்து இணைக்கப்பட்டு வருகின்றனர். சகல தொழில் நிறுவனங்களிலும் பணியாளர்களின் எதிர்கால வசதி குறித்து அவர்களை இந்தத் திட்டத்தின் கீழ் உள்வாங்கி அவர்களின் மாதாந்த கொடுப்பனவில் ஒரு பகுதியை இந்தத் திட்டத்தின் கீழ் சேர்ப்பதற்கு தொழில் நிலையங்கள் முன்வர வேண்டும் இவ்வாறு கூறினார். (வ-17)

## நாகர் கோவில் கண்ணகைக்கு கும்பாபிஷேகம்

வடமராட்சி,ஓக.25

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பூர்வீக கண்ணகை அம்மன் கோயில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.05 தொடக்கம் 9.30 மணி வரையிலான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம்பெறும்.

இந்தக் கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ க.சிவ சண்முகக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்தி வைப்பார். (ஒ-173)


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

குழந்தையாக 10.02.1950



தெய்வமாக 25.08.2012

அமரர் இந்திரா சபாரத்தினம்

அக்கா என்றழைத்ததுமே,
ஆனந்தப் பூத்தூவும்! அழகு முகம் நெஞ்சமதில் தோன்றும்
கணப்பொழுதில் உயிர் உருகி விழி நிறையும்!
ஈராண்டுகள் மட்டுமல்ல அக்கா!
எங்கள் இதயம் உள்ளவரை
உங்கள் நினைவுகளும் எம்மோடு கூடவரும்.
எங்கள் தெய்வத்தின் நினைவாக பாடசாலை மாணவிக்கு
கல்வி நிதியும் உதவிகளும் வழங்கப்படுகிறது.

இல. 5, கல்லடி வீதி.
சாவகச்சேரி.

திலக வாசம்
தபாலக வீதி, சாவகச்சேரி.



## 31 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



அமரர்
ஆறுமுகம் சாந்தலிங்கம் (J.P)
(தீவக லயன்ஸ் கழக
ஆரம்பகால உறுப்பினர்).

தோற்றம் 02 ★ 10 ★ 1950 — மறைவு 25 ★ 07 ★ 2014

சஞ்சலம் வந்து பெருமூச்சானதோ
சிந்தும் கண்ணீர் அருவியானதோ
துஞ்சாது தீவக லயன்ஸ் கழகத்திற்கு
நற்பணி செய்த தூயவரே எங்கு சென்றீர்!
பிஞ்சுகளோடு பெரியவர்களும் சேர்ந்து
புலம்பி கலங்க வைத்தீரே
தஞ்சமென்றிருந்த உறவுகளையும்
தவித்து நிற்கவைத்தீரே!
வஞ்சகம் செய்யும் சாவு ஒன்று
வாரி உம்மை அணைத்ததுவோ
நெஞ்சும் ஈர விழிகளும் உமது
லயன்ஸ் கழக சேவைகளை சுமந்தே
தனித்திருக்க ஆத்மா சாந்தி பெற
அஞ்சலிக்கின்றோம்.

தீவக லயன்ஸ்
கழக
உறுப்பினர்கள்.

(48572)(3.6.4)


## கேள்வி அறிவித்தல்

உள்ளூராட்சி அமைச்சு

**மாகாண அடிப்படையிலான குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை**

**பூநகரி பிரதேசசபை வடமாகாணம்**

| திட்டத்தின் பெயர் | ஒப்பந்த இல |
|---|---|
| 19ஆம் கட்டை சுடுகாட்டிற்கான கட்டடம் அமைத்தல். | NP/14/45(04)/02/PSDG/01 |

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு, கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென மாகாண அடிப்படையிலான குறித் தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர், பெறுகைக்குழு, பூநகரி பிரதேசசபை, வடமாகாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டட அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பூநகரி பிரதேச சபை, வாடியடி பூநகரி, கிளிநொச்சி (தொலைபேசி: 0243243493), Email poonakaryps@yahoo.com இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் பி.ப. 14.00 மணி வரை 16th September 2014 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர், பூநகரி பிரதேச சபை, ,வாடியடி பூநகரி, கிளிநொச்சி எனும் இடத்திலிருந்து 25th August 2014 ம் திகதியிலிருந்து 16th September 2014 ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பூநகரி பிரதேச சபை, ,வாடியடி பூநகரி, கிளிநொச்சி எனும் முகவரிக்கு 16th September 2014 திகதி பி.ப. 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியில் இருந்து 49 (நாற்பத்து ஒன்பது–04th November 2014) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு(Rs) | செல்லுபடி ஆகும் காலம் |
| NP/14/45(04)/02/PSDG/01 | 19th கட்டை சுடுகாட்டுக்கான கட்டடம் அமைத்தல். | 0.555 | 03 மாதங்கள் | C10 அல்லதுஅதற்கு மேல் | 6,000.00 | 02.12.2014 |

11. கேள்வி கோரல் பற்றிய முன்னோடிக்கூட்டம் 08th September 2013 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு பூநகரி பிரதேசசபைக்கட்டடத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை, பூநகரி பிரதேச சபை,**
**22.08.2014**

(சி/18141)
(4.8.3)


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
சின்னட்டி
இராசதுரை



மண்ணில் 19.06.1938

விண்ணில் 11.09.2007

யாருக்கும் தலைவணங்கா எம் தந்தையே!
தினமும் உங்களைத் துதிக்கின்றோம் நாம்
ஏனெனில் தலை நிமிர்ந்து எமைவாழ வைத்ததுக்கு.

சங்கானை மேற்கு. குடும்பத்தினர்.

(51036) (7.6.3)

## உரிமைகோராத சைக்கிள் ஒப்படைப்பு

சாவகச்சேரி நவீன சந்தைப் பகுதியில் அநாதரவாக காணப்பட்ட பெண்கள் சைக்கிள் சந்தை உத்தியோகத்தர்கள் கடந்த புதன்கிழமை கண்டெடுத்து இதுவரை எவரும் உரிமை கோராததால் நகர சபை அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர். சைக்கிளை தவறவிட்டவர்கள் உரிய ஆதாரங்களைக் காட்டி நகர சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## திருவுளப் பணியாளர் சபையின் அதிபராக யூஸ்ரஸ் அடிகளார்

திருவுளப் பணியாளர் சபையின் இலங்கை மாகாண அதிபராக கொழும்பு புனித லூசியாள் பேராலயத்தில் துணைப் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய அருட்திரு யூஸ்ரஸ் பெர்னாண்டோ அடிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள குஞ்சுக்குளம் என்னும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அடுத்து வரும் 4 ஆண்டுகளுக்கு இலங்கை மாகாண அதிபராகப் பணியாற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலோசகர்களாக அருட்திரு பிலிப் அடிகள், அருட்திரு அலன் அடிகள் மற்றும் மருசலின், சௌந்தரம், றோகினி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

திருவுளச் சபையின் மாகாணப் பொது அமர்வு பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் அண்மையில் நடைபெற்ற போது இந்தத் தெரிவுகள் இடம்பெற்றன. (ஓ-135)

# அறிவித்தல்

**பச்சிலைப்பள்ளி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், பளை.**
**பணியாளர் பிணை இடாப்பு தயாரித்தல் தொடர்பானது**

**எமது சங்கம் மீளக் குடியமர்ந்த பின், பணியாளர்களின் கொடுப்பனவுகள் தொடர்பாக ஆவண ரீதியாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என 31.07.2014 ஆம் திகதி நடைபெற்ற நெறியாளர் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே இத் தீர்மானத்திற்கமைவாக எமது சங்கத்தில் சேவையாற்றி ஓய்வுபெற்ற அல்லது விலகிச் சென்ற பணியாளர்களில் பணியாளர் பிணைக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ளாதவர்கள் உறுதிப்படுத்தக்கூடிய ஆவணத்தின் பிரதியினை (F10) தலைவர், பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம், பளை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது நேரிலோ 12.09.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.**

**தலைவர்,**
**பச்சிலைப்பள்ளி பல நோக்கு கூட்டுறவுச்சங்கம், பளை**
(சி.16153) (45.6.3) 25.08.2014


## PATRICIAN INSTITUTES

பற்றீசியன் தொழிற் பயிற்சி நிறுவனங்கள்
புதிய பிரிவுகள் ஆரம்பம் - 03.09.2014

I. Computer course

| Course | Duration |
|---|---|
| A. Information & communication technology (ICT) | Duration 4 Months |
| (O/L மாணவர்களின் நலன்கருதி ஆரம்பிக்கப்படுகின்றன) | |
| B. Advanced in computer programming | Duration 8 Months |
| C. Diploma in Microsoft office | Duration 4 Months |
| D. Diploma in desk top publishing | Duration 4 Months |
| E. Diploma in video editing | Duration 4 Months |
| F. Diploma in type setting | Duration 6 Months |
| G. Diploma in computerized accounting | Duration 4 Months |
| H. Diploma in software Engineering | Duration 4 Months |
| I. Diploma in Micro media | Duration 6 Months |
| J. Diploma in Web Multimedia | Duration 4 Months |
| K. Professional Diploma in Graphic Design | Duration 4 Months |
| L. Computer Hardware Technology | Duration 4 Months |
| M. Internet & Email | Duration 3 Months |
| N. General Information Technology (GIT) | Duration 4 Months |

II. Short Hand Typing (English)
சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்)
கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும். Duration 6 Months

III. Short Hand Typing (Tamil)
சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்)
கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும். Duration 6 Months

IV. General motor Mechanism
(Petrol & Diseal-வாகனங்கள் மோட்டார் வாகனம் திருத்துதல்) Duration 6 Months

V. General Electrician (Wiring & Re-Winding)
(ஜெனரல் எலக்ரிஸன் மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங்) Duration 6 Months

VI. Lathe machine Operation (Milling Machine, Shaping Machine என்பன கற்றுக் கொடுக்கப்படும்)
(கடைச்சல் இயந்திரப் பயிற்சி)
(On the Job training வழங்குதல்) Duration 6 Months

VII. Carpentery (with use of Machinery)
மரவேலை (On the Job training வழங்குதல்) Duration 6 Months

VIII. Refrigeration and Air Conditioning
குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் Duration 6 Months

IX. Motor cycle Mechanism Duration 6 Months

X. Arcwelding, Gas Welding Duration 6 Months

குறிப்பு : 1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்.
2. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு:
Registrar Patrician Institutes
61, (59), St.Patrick's Road, Jaffna.
T.P.: 021 222 6148, Fax : 021 222 6148.
Email : patricianjaffna@yahoo.com
(சி/16140)(7.6.3)


**இன்று : தீர்த்தம்**

## நல்லூர் ஆலயச் சூழலில்

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் நடத்தி வரும் சமய சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்வுகள் வரிசையில் -

காலை விசேட நிகழ்வாக - நல்லூர் பஜனைக் குழுவினரின் முருக நாம பஜனை.

மாலை நிகழ்வாக- பாதந் தொழுவார் பாவம் தீர்ப்பார் என்ற தலைப்பில் பிரம்மச்சாரி ஜாக்கிரத்சைத்தன்ய சுவாமிகளின் சிறப்புச் சொற்பொழிவும், நவாலி ராஜராஜேஸ்வரி அறநெறிப் பாடசாலை, அராலி அம்பிகை அறநெறிப் பாடசாலை, உடுவில் ராஜராஜேஸ்வரி அறநெறிப் பாடசாலை மற்றும் வயாவிளான் கோசலை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ஓ-7)

★ ★ ★

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தி வரும் தெய்வீக இசையரங்கு வரிசையில் இன்று மாலை 6.45 மணிக்கு - பாட்டு - கலாநிதி என்.வி.எம்.நவரத்தினம், உடன் பாடுபவர் - என்.பரந்தாமன், வயலின் - எஸ்.கோபிதாஸ், மிருதங்கம் - எஸ்.மகேந்திரன், முகர்சிங் - விமல்சங்கர். (ஓ)

★ ★ ★

'பிரம்மகான சபை'யால் நல்லை ஆதீனத்தில் இன்றுமாலை 6.30 மணிக்கு இசை சமர்ப்பணம் இடம்பெறும். பிரம்மஸ்ரீ தி.ஸ்ரீசந்திரமௌலீகர சர்மா நிகழ்வில் பங்குபற்றுவார். (ஓ)

★ ★ ★

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலயத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா பக்க வாத்திய சகிதம் வழங்கும் 'கம்பராமாயணம்' தொடர் நிகழ்வில் 'அக்கினிப் பிரவேசம்' இசைப் பேருரை இடம்பெறும். (ஓ)

★ ★ ★

யாழ்ப்பாணம் சின்மயாமிஷனின் ஏற்பாட்டில் 'இந்துவாக வாழ்வோம்' செயற்றிட்டத்தின் ஓர் அங்கமான ஆன்மிக அருளுரை ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் மாலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இன்றைய அருளுரையின் தலைப்பு 'மீண்டும் பிறவாமை வேண்டும்' என்பதாகும். (ஓ)

## மேல் மருவத்தூர் சக்திபீட ஆண்டு விழா அல்வாயில் நாளை

அல்வாய் கிளானை மேல் மருவத்தூர் ஆதி பராசக்தி பீட வழிபாட்டு மன்றத்தின் 30 ஆவது ஆண்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 7 மணிக்கு சிறப்பு அபிஷேகம், 9 மணிக்கு பாத பூசை, 10 மணிக்கு பூசை, 11 மணிக்கு அன்னதானம், மதியம் 12 மணிக்கு மக்கள் நலன் வேண்டி யாகம் என்பன இடம்பெறும். (ஓ-173)

## சமயசந்நிதிகளில்

வல்வெட்டித்துறை பொலிகண்டி இருப்பை மூலை பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 7 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். கல்வயல் சிவஸ்ரீ சி.கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் தலைமையில் திருவிழாக் கிரியைகள் இடம்பெறும். (ஓ-9)

★ ★ ★


குருநகர் புனித ஆரோக்கியநாதர் ஆலய வருடாந்த திருவிழா நவநாள் வழிபாடுகளும் நடைபெற்று வருகிறது.

நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும், நாளை மறுதினம் புதன் காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் , மாலை 5 மணிக்கு திருச்சொரூபப் பவனியும் இடம்பெறும். (ஓ-135)

★ ★ ★

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரத விக்ன விநாயகர் ஆலயத்தின் (சம்பந்தப் பிள்ளையார் கோயில்) வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 8 மணிக்கு சப்பரமும், 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்ப் பவனியும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெற்று அன்று மாலை 6 மணிக்கு கொடியிறக்கத்துடன் உற்சவம் நிறைவு பெறும். மஹோற்சவக் குருவாக சிவஸ்ரீ தா.இரவீந்திரக் குருக்கள் உற்சவத்தை நிகழ்த்தி வைப்பார். (ஓ)



இருபத்து நான்காம் நாள் திருவிழா

## நல்லூரில் நன்னீராடும் வேலவா!

நல்லையிலே வீற்றிருக்கும் வேலவனே - உமது
வேலின் தீர்த்தம் எமக்கு அருளினைத் தரும்
வேலின் தீர்த்தம் எமக்கு அஞ்சாமையைத் தரும்
வேலின் தீர்த்தம் எமக்கு வறுமை, நோய், தீர்க்கும் மருந்து
வேலின் தீர்த்தம் கொடியவர்களுக்கு ஆலகாலவிஷம்
வேலின் தீர்த்தம் அடியவர்கள் எமக்கு ஞானாமிர்தம்

நயினை விசு இராசநாயகம்.

## உந்தன் அழகிற்கு நிகருண்டோ

அலங்காரக் கந்தா உந்தன் ஆலயச் சூழலழகு
அந்தணர் குழாம் வேதமோதும் அழகு
அடியாரைப் பக்திப் பரவசமூட்டும் நாத ஒலி அழகு
உன்னைத் தொழ வரும் அடியார் கூட்டம் அழகு
உந்தன் அழகிற்கு நிகருண்டோ இப் பூவுலகில்

அவனியைக் காத்தருளும் ஆறுமுகவா
அல்லற்படும் அடியார் துயர் தீர்க்க வாருமையா
உன்னைக் காணக் கண்ணாயிரம் வேண்டுமையா
உன்னை நாடி வரும் அடியார் கூட்டமோ பல்லாயிரமையா
உந்தன் பேரழகிற்கு நிகருண்டோ சண்முகப் பிரபு!

புங்கையூர்தேவி, (நல்லூர்)

## கருணையுள்ளத்தில் மூத்தோனே குமரா

நல்லூரில் வீற்றிருக்கும் நல்லைக்கந்தா
நப்பாசையெனக்கு என்றுமுனைக் காண
திக்கற்று நிற்போரின் தீபமே கந்தா
தீந்தமிழ்ச் சொல்லுடைய வேந்தா

கரிமுகனின் இளையோனே கந்தா
கருணையுள்ளத்தில் மூத்தோனே குமரா
உண்மைக்காய் அயனயே சிறைவைத்தாய் கந்தா
உன் அன்பிற்காய் அடிபணிந்தேன் முருகா

அஸ்வினி குணசிங்கம், சுண்டிக்குளி.

## வருவாய் அழகா முருகா

முத்துச் சிரிப்புடனே முருகோனே வருக
பக்தர்கள் புடை சூழ மயிலோனே வருக
அயில் வேல் அரசே அருள் வழங்க வருக
மனிதப் பிறப்பான அடியவர் குறைதீர்க்க வருக
உன் சீர் அடி பற்றும் தமிழர் எமக்கு அருள் தருக
அழகிய மயில் மேல் ஏறி குருவாய் வருக
அழகு பொழில் நல்லையில் வருவாய் அழகா முருகா

வட்டூர் ராயு.




## யானைகள் அட்டகாசம்

வவுனியா, ஓக.25
வவுனியாவில் பல்வேறு பகுதிகளில் யானைகளின் தொல்லை அதிகரிகரித்துள்ளது. இதனால் அங்குள்ள மக்கள் அச்சத்தின் மத்தியில் வசித்து வருகின்றனர்.
ஓமந்தை, பூவரசங்குளம், செட்டிக்குளம், கள்ளிக்குளம் உட்பட பல்வேறு பகுதிகளில் காடுகளிருந்து வரும் யானைகள் வர்த்தக நிலையங்கள், தோட்டங்கள், வீடுகளுக்குள் புகுவதனால் நிம்மதியற்ற உறக்கம் மற்றும் விவ சாயிகளுக்கு பொருளாதார நட்டம் மாணவர்களின் கல்வி பாதிப்பு உட்பட பல்வேறு பிரச்சினைகளை அங்குள்ள மக்கள் எதிர் கொள்கின்றனர். (வ-402)

# வன்னியில் கடும் மழை

கிளிநொச்சி, ஓக.25
நீண்டகால வறட்சிக்குப் பின்னர் நாடெங்கிலும் பரவலாகக் கடும் மழை பெய்துள்ளது. கிளிநொச்சிப் பகுதியிலும் நீண்ட காலத்துக்குப் பின்னர் இடி மின்னலுடன் கூடிய கடும் மழை பெய்துள்ளது.
இரணைமடுக்குளம் உட்பட பல நீர் நிலைகளிலும் நீர் வற்றிப்போய் மக்களும், கால்நடைகளும் குடி தண்ணீருக்காகப் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வரும் வேளையில் பெய்துள்ள இந்த மழையால் அந்தப் பிரதேச மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
இதேவேளை, இரணைமடுக் குளத்திலிருந்து பெற்றுக் கொள்ளும் நீரின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த 800 ஏக்கர் அளவிலான சிறுபோக நெற்செய்கை பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
அறுவடைக் காலத்தை நெருங்கியுள்ள நிலையில் பெய்துள்ள மழையால் வயல் நிலங்களில் வெள்ளங்கள் தேங்கியும் காணப்படுகிறது.
அத்துடன் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள குடிசைகளில் வாழும் மக்கள் அவலங்களைச் சந்தித்துள்ளதாகவும் இடிமின்னல் தாக்கல்களினால் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-426)

## செல்வச் சந்நிதியில் ஆன்மிக நிகழ்வுகள்

வடமராட்சி,ஓக.25
தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவில் வருடாந்தப் பெருந் திருவிழாவை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பெருந்திருவிழாக் காலத்தில் ஆன்மிக நிகழ்வுகள் தினமும் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளன.
நாளை செவ்வாய்க்கிழமை வட பிராந்திய சாயி சமித்தி அன்பர்கள் வழங்கும் பஜனையும், நாளை மறுதினம் புதன்கிழமை 'முருகனின் திருப் பெரு வடிவம்' என்னும் தலைப்பில் ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசனும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை 'ஆராத இன்பம் அருள்வான்' என்னும் தலைப்பில் எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகலிங்கமும் சொற்பொழிவாற்றுவார்கள். (ஒ-173)

## சந்நிதியில் அன்னதானம் வழங்க 15 மடங்கள் தயார்

வடமராட்சி, ஓக.25
தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயில் பெருந்திருவிழாக் காலத்தில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கவென இம்முறை 15 அன்னதான மடங்கள் தயாராக இருக்கின்றன.
போர்க் காலத்துக்கு முன்னர் அன்னதானக் கந்தன் என அழைக்கப்படும் சந்நிதி கோயில் சுற்றாடலில் சுமார் 40 அன்னதான மடங்கள் இருந்து வந்தன.
மடங்கள் அழிவுற்ற நிலையில் ஒவ்வொன்றாகப் புனரமைப்புச்செய்யப்பட்டுத் தற்போது 15 மடங்கள் செயற்படக்கூடிய நிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
இந்த அன்னதான மடங்களில் போர்க் காலத்தில் செயற்பட்டு வந்த சந்நிதியான் ஆச்சிரமே தொடர்ந்து இயங்கிவருவதுடன் இங்கு நித்திய அன்னதானம் இடம்பெற்று வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.(ஒ-173)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
### பத்மநாதன் ஏகாந்தரூபன்

கடந்த 12.07.2014 சனிக்கிழமை சிவபதமடைந்த அமரர் பத்மநாதன் ஏகாந்தரூபன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.08.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(47255)(4.3.6)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நல்லம்மா வெற்றிவேலு (பூரணி)



குடாரப்பு தெற்கு, நாகர்கோயிலை நிரந்தர வதிவிடமாகவும் வலிக்கண்டி குடத்தனையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட நல்லம்மா - வெற்றிவேலு (பூரணி) நேற்று (24.08.2014) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்ற அப்புக்குட்டி வெற்றிவேலு அவர்களின் மனைவியும், கந்தையா (பளை), காலஞ்சென்ற வீரவாகு மற்றும் விரசிங்கம், வீரகுமாரி, செல்வகுமாரி ஆகியோரின் அன்புத் தாயும், கமலாதேவி, இராஜேஸ்வரன் (அப்பன்), கமலேஸ் வரன் (உதயன் பத்திரிகை), ரதீஸ்வரன் ஆகியோரின் பெரியதாயும், வளர்ப்புத் தாயும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் நடைபெற்றன.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்த முருகனார் வீதி,
உபய கதிர்காமம்,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல்: (49746) (45.6.3)
குடும்பத்தினர்
கமலேஸ்வரன் (ரதன்)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## அமரர் லயன் ஆறுமுகம் சாந்தலிங்கம் (J.P).



மண்ணுலகு 02.10.1950
விண்ணுலகு 25.07.2014

எங்கள் அப்பா! அப்பா! அப்பா! ஒவ்வொரு
நிமிடமும் ஞாபகங்கள் உங்களையே நினைவூட்டுகின்றன
நினைவுகளை கல்லாக்கி நிம்மதியை தொலைத்துவிட்டு
உங்களை நினைத்து வாடுகின்றோம். ஓடோடி வந்து
எங்களுடன் உற்ற கதை சொன்ன அப்பா ஒரு தரமேனும்
காட்சி அளியும் அப்பா முப்பத்தொரு நாள்கள் சென்றாலும்
மறக்க மாட்டோம் மறக்க முடியாது அப்பா வற்றாத நீராய்
அன்பு ஊற்றாய் நீங்கள் இருக்க நினைந்துருகின்றோம்
நேசித்த நெஞ்சமெல்லாம் நிறை துயருக்கானதுவோ
இன்முறுவல் காட்டி இனிமையாய் பேசும் புன்னகைப் பூக்கள்
உதிர்ந்தனவோ! நெஞ்சும் கனங்குதையா! கண்ணீர் நல்குதையா!
வஞ்சித்த காலனவன் வானுலகுக்கு அழைத்தானோ
நம்பமுடியவில்லை சேர்ந்து மகிழ்ந்திருந்த செய்தியெலாம்
மறைந்திடுமோ உம்மைக் காக்க உழைத்தோம்
முடியவில்லை எம் வீட்டு நாயகனே! என்றென்றும்
நாம் மறவோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் மரணச் செய்திகேட்டு பலவழிகளிலும் எங்களுக்கு உறுதுணையாக நின்று உதவிய உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி

மதிய போசனம் நாவலர் றோட்டில் அமைந்துள்ள TCT மண்டபத்தில் இன்று (25.08.2014) திங்கட்கிழமை நடைபெறும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

கச்சாய்றோட்,
வீரசிங்கம் வீதி, சாவகச்சேரி.

தர்சினி - மனைவி,
சங்கர், தினேசன் - பிள்ளைகள்,



காஸாவில் 7 மாடி வணிக வளாக கட்டடம் மீது இஸ்ரேல் குண்டு வீசி பெரும் சேதம் விளைவித்துள்ளது. காஸாவில் வேறு பல பகுதிகளிலும் ரொக்கெட் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப் பட்டுள்ளன. 7 மாடி வணிக வளாக கட்டடம் மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சில் 7 பேர் காயம் அடைந்துள்ளனர்.

## இடிந்தது தங்கச் சுரங்கம் சிக்கி 27 பேர் உயிரிழப்பு



பம்பாரி, ஓக.25

மத்திய ஆபிரிக்காவில் தங்கச் சுரங்கம் ஒன்று இடிந்து விழுந்ததில் இடிபாடுகளில் சிக்கி 27 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். ஆபிரிக்காக் கண்டத்தில் மத்திய ஆபிரிக்கக் குடியரசு நாடு உள்ளது. இங்கு அதிக தங்கச் சுரங்கங்கள் உள்ளன. இந்த நிலையில் அங்கு பம்பாரி அருகே மலைகள் சூழ்ந்த வனப்பகுதியில் தங்கச் சுரங்கம் உள்ளது. கனடாவைச் சேர்ந்தவருக்குச் சொந்தமான இந்தச் சுரங்கத்தில் ஏராளமான தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். இதற்கிடையே இந்தத் தங்க சுரங்கம் நேற்று முன்தினம் திடீரென இடிந்து புதைந்தது. அதில், 27 பேர் மண்ணில் புதைந்தனர். தகவல் அறிந்ததும் அங்கு மீட்புப் பணி தீவிரமாக நடைபெற்றது.

எனினும் 25 பேரை பிணமாகத்தான் மீட்க முடிந்தது. மேலும் இருவரது சடலங்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. (வ)

# போராளிகள் வசமானது லிபிய விமான நிலையம்

திரிபோலி, ஓக.25

லிபிய தலைநகர் திரிபோலியில் உள்ள சர்வதேச விமான நிலையத்தை கைப்பற்றியுள்ளதாக மிஸ்ரதா பகுதி போராளிகள் அறிவித்துள்ளனர்.

லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி முவம்மர் கடாபி கொல்லப்பட்ட பின்னர் தலைநகர் திரிபோலியில் உள்ள சர்வதேச விமான நிலையத்தைக் கைப்பற்ற இஸ்லாமிய போராளிக் குழுக்கள் தீவிரம் காட்டி வந்தன.

இதனால் அந்தநாட்டு தேசிய படைக்கும், போராளி குழுக்களுக்கும் இடையில் கடுமையான மோதல் நடைபெற்று வருகிறது. அதனையடுத்து, கடந்த ஜூலை 13 ஆம் திகதி திரிபோலி சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டு, மட்டிகா விமான நிலையத்தின் மூலம் விமானப்போக்குவரத்து நடைபெற்று வந்தது.

இந்தநிலையில், திரிபோலி சர்வதேச விமான நிலையத்தை கைப்பற்றியுள்ளதாக மிஸ்ரதா நகரைச் சேர்ந்த போராளிக் குழுவினர் நேற்று முன்தினம் அறிவித்துள்ளனர்.

விமான நிலைய கட்டடம் மற்றும் விமானங்களின் மீது இந்தக் குழுவினர் தங்களது கொடியுடன் ஏறி நிற்கும் காட்சிகளை உள்ளூர் ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.



விமான நிலையத்தை அடுத்து, 30 கிலோ மீற்றர் தூரத் தில் உள்ள தலைநகர் திரிபோலியையும் அவர்கள் கைப்பற்றி விடக்கூடும் என்ற கருத்து அங்கு நிலவி வருகின்றது. (வ)

## நைஜீரியாவிலும் பரவுகிறது எபோலா



அபுஜா, ஓக.25

மேற்கு ஆபிரிக்காவில் ஆட்கொல்லி நோயாக பரவி வரும் எபோலா வைரஸ் தொற்று லைபீரியாவை அடுத்து தற்போது நைஜீரியாவிலும் வேகமாகப் பரவி வருகிறது. இதனால் அங்கு புதிய சிகிச்சை மையங்கள் பல நிறுவப்பட்டுள்ளது.

ஐ.நாவின் உலக சுகாதார நிறுவனத்தின் கணக்குப்படி இதுவரை இந்தத் தொற்றுக்கு 2,615 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் 1427 பேர் உயிரிழந்துவிட்டனர். அதிகபட்சமாக லைபீரியாவில் 1000 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நைஜீரியாவின் எனுகு மாநிலத்தின் கிழக்கே 500 கிலோ மீற்றர் வரை எபோலா பரவியுள்ளது. அங்கு 213 பேர் தொற்றுக்கு ஆளாகியிருப்பதாகக் கருதப்பட்டு அவர்கள் தீவிர கண்காணிப்பில் உள்ளனர். 16 பேருக்கு வைரஸ் தாக்கியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதில் 5 பேர் உயிரிழந்து விட்டனர். (வ)

## ஈரான் அணு நிலையத்தை பார்வையிட அனுமதியில்லை

ஈரான் நாட்டின் பார்ச்சின் அணு பரிசோதனை நிலையத்தை சர்வதேச ஆய்வுக்குழு பார்வையிடுவதற்கு அந்த நாடு அனுமதி மறுத் துள்ளது.

அந்த அணுநிலையத்தில் அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈரான் ஈடுபட்டுள்ளதாகவும், அங்கு சர்வதேச ஆய்வுக்குழுவை அனுமதிக்குமாறும் உலக நாடுகள் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் வலியுறுத்தி வருகின்றன. இதற்காக நேற்று வரை ஈரான் அரசுக்கு சர்வதேச அணு சக்திக் கழகம் கெடு விதித்திருந்தது.

இந்தநிலையில், ஈரான் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஹொஸன் டெஹ்கன் நேற்று முன்தினம் சனிக்கிழமை தெரிவித்ததாவது:-

"2005ஆம் ஆண்டுக்கு முன்பாக சர்வதேச அணு சக்திக் கழகம் பலமுறை பார்ச்சின் அணு நிலையத்துக்கு வந்து, மாதிரிகளை எடுத்துச் சென்றது. எனினும், அணு ஆயுதத் தயாரிப்பு முயற்சி குறித்து அந்த அமைப்பு எதையும் கண்டுபிடிக்கவில்லை.

இந்தநிலையில், இனியும் ஆய்வுக்குழுவை அங்கு அனுமதிப்பதில் எந்த அர்த்தமும் இல்லை" என்று கூறினார்.

எனினும், ஈரான் அணு பரிசோதனைகள், அணு ஆயுதம் தயாரிப்பதற்கானது இல்லை என்று சான்றளிக்க, பார்ச்சின் நிலையத்தில் ஆய்வு மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று சர்வதேச அணு சக்திக் கழகத்தின் இயக்குநர் யுகியா அமானோ தெரிவித்துள்ளார். (வ)

## சீனாவில் 8 பேருக்கு தூக்கு நிறைவேற்றம்

பீஜிங், ஓக.25

சீனாவில் தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபட்ட எட்டுப் பேருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. சீனாவின் க்ஸிங்ஜியாங் மாகாணத்தைச் சேர்ந்த எட்டுத் தீவிரவாதிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தூக்குத் தண்டனை நேற்று நிறைவேற்றப்பட்டதாக அந்த நாட்டு அரசு ஊடகங்கள் அறிவித்துள்ளன.

சீனத் தலைநகர் பீஜிங்கில் உள்ள டியனன்மென் சதுக்கத்தின் மீது கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் குண்டுகள் நிரப்பிய காரை மோதித் தாக்குதல் நடத்தத் திட்டமிட்ட தீவிரவாதிகள் மற்றும் சீனாவின் பல்வேறு ரயில் நிலையங்களில் அப்பாவி மக்களை வெட்டி கொலை செய்தவர்களுக்கு நேற்று முன்தினம் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டது. (வ)

## கிழக்கு உக்ரைனுக்கு ரஷ்யாவால் உதவிப்பொருள்கள்

### ஆக்கிரமிப்பு எனக் கொந்தளிப்பு

கிழக்கு உக்ரைன் பகுதிக்கு உக்ரைனின் அனுமதி பெறாமல் 90 லொறிகளில் மனிதாபிமான உதவிப் பொருள்களை ரஷ்யா கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பி வைத்துள்ளது. இது ஒரு பகிரங்கமான ஆக்கிரமிப்பு நடவடிக்கை என்று உக்ரைன் கொந்தளித்துள்ளது.

உக்ரைனின் தன்னாட்சிப் பகுதியாக இருந்து வந்த கிரிமியா பொது வாக்கெடுப்பு நடத்தி, ரஷ்யாவுடன் கடந்த மார்ச் மாதம் இணைந்து கொண்டது. இது அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு ரஷ்யா மீது கோபத்தை ஏற்படுத்தியது.

கிரிமியாவைத் தன்னுடன் இணைத்துக்கொண்ட ரஷ்யாவின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகை யில் அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் அந்தநாடு மீது பொருளாதாரத் தடைகள் விதித்தன.

கிரிமியா போன்று கிழக்கு உக்ரைனும் ரஷ்யாவுடன் சேர விரும்புகிறது. அங்கு ரஷ்யா ஆதரவு கிளர்ச்சியாளர்கள், உக்ரைன் படையுடன் கடும் சண்டையிட்டு இரண்டு மாகாணங்களைத் தங்கள் வசம் கொண்டு வந்துவிட்டனர். இந்தப் பகுதிகளில் பாதிக்கபட்ட மக்களுக்கு ரஷ்யா உதவி பொருள்களை அனுப்புவதாக அறிவித்தது. ஆனால் ஆயிரக்கணக்கான லொறிகளை அனுப்பக் கூடாது என்று உக்ரைன் எச்சரித்திருந்தது. (வ)

## கேரளாவில் கனமழை: 7 பேர் சாவு

திருவனந்தபுரம், ஓக.25
கேரளாவில் நேற்றுமுன் தினம் பெய்த கன மழையால் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.
கேரளாவில் தென்மேற்கு பருவ மழை வழக்கமாக ஜூன் மாதத்தில் ஆரம்பித்து செப்ரெம்பர் வரை நீடிக்கும். ஆனால் இந்த ஆண்டு ஜூன் மாதம் பருவமழை சற்று தாமதமாகத் தொடங்கியது. ஆனால் ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் எதிர்பார்த்த அளவு மழை இல்லை.
இந்தநிலையில் இந்த மாதம் தொடக்கம் கேரளாவில் கன மழை பெய்யத் தொடங்கியது. திருவனந்தபுரம், கொல்லம், பத்தனம்திட்டா ஆலப்புழா, கோட்டயம் உட்பட தென் மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது.
கனமழை காரணமாக திருவனந்தபுரத்தில் நெய்யாறு, கரமனை ஆறு, வாமனபுரம் ஆகிய ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. திருவனந்தபுரம் மாவட்டத்தில் மலையோரப் பகுதிகளில் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. (வ)

# இந்திய கிராமங்கள் மீது பாக். மீண்டும் தாக்குதல்

### எல்லையில் தொடர்ந்தும் பதற்றம்

ஜம்மு, ஓக.25
இந்திய எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் நேற்று முன் தினம் இரவு 25 இந்திய நிலைகள், 19 குக்கிராமங்கள் மீது அத்துமீறி தாக்குதல் நடத்தியுள்ளது.
பாகிஸ்தான் இராணுவம் இந்திய எல்லைக்குள் அத்துமீறி நடத்திய தாக்குதலில் தந்தையும், மகனும் உயிரிழந்தனர். சிப்பாய் ஒருவர் உட்பட 7 பேர் படுகாயம் அடைந்தனர்.
அதையடுத்து நேற்று முன் தினம் இரவும் எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் இரவு 25 இந்திய நிலைகள், 19 குக்கிராமங்கள் மீது அத்துமீறி தாக்குதல் நடத்தியுள்ளது.
எல்லையில் ஆர்.எஸ்.புரா மற்றும் அர்னியா பகுதியில் 25 இந்திய நிலைகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது. 19 குக்கிராமங்களை குறி வைத்து பாகிஸ்தான் இராணுவம் மோட்டார் ரக பீரங்கிகள் மற்றும் தானியங்கி எந்திர துப்பாக்கிகள் மூலமும் சரமாரியாக தாக்குதல் நடத்தியது. நேற்று முன்தினம் இரவு 10.30 மணி அளவில் ஆரம்பித்த இந்தத் தாக்குதல் காலை 7:30 மணி வரை நீடித்தது என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தத் தாக்குதலில் மனிதர்கள் எவருக்கும் எந்த பாதிப்பும் இல்லை. ஆனால் த்ரேவா கிராமத்தில் மூன்று பசுமாடுகள் உயிரிழந்தன என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜம்மு மாவட்டத்தின் சர்வதேச எல்லைப்பகுதியில் உள்ள ஆர்னியா மற்றும் ஆர்.எஸ். புரா ஆகிய துணை வட்டாரப் பகுதிகளிலும் பாகிஸ்தான் இராணுவம் இந்திய நிலைகளை நோக்கி தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் அந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர். இதனையடுத்து, அங்குள்ள 19 குக்கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் எல்லைப் பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர். (வ)

## நீர்மூழ்கி எதிர்ப்புக் கப்பல் கடற்படையில் இணைப்பு

டில்லி, ஓக.25
உள்நாட்டிலேயே முதல் முறையாக உருவாக்கப்பட்ட, ரேடார் போன்ற சாதனங்களின் கண்காணிப்பில் சிக்காத நீர்மூழ்கி எதிர்ப்பு இரகசியப் போர்க் கப்பலான 'ஐஎன் எஸ் கமோர்ட்டா', விசாகப் பட்டினத்தில் சனிக்கிழமை நடைபெற்ற விழாவில் பாதுகாப்புத் துறை அமைச்சர் அருண் ஜேட்லி முன்னிலையில் இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டது.
நிகழ்வில் பாதுகாப்புத்துறை அமைச்சர் அருண் ஜேட்லி உரை நிகழ்த்துகையில்-
நாம் பாதுகாப்பில் தயார் நிலையில் இருப்பது, மண்டல அளவிலான அமைதிக்கு உத்தரவாதமாகும். முன்பு இந்தியா, பாதுகாப்பு தொடர்பான சாதனங்களை வாங்குவதில் முன்னணியில் இருந்தது. தற்போது அவற்றின் முக்கிய உற்பத்தியாளராக மாறி இருக்கிறது.
புவியியலைப் பொறுத்த வரையில் இந்தியா மிகவும் முக்கியமான இடத்தில் அமைந்துள்ளது. எமக்கு மிகப்பெரிய கடற்பரப்பு உள்ளது.
சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் இந்தியாவை அண்டை நாடுகள் சீண்டிப் பார்த்துள்ளன. ஆகவே நாம் பாதுகாப்பு விடயத்தில் எப்போதும் தயார் நிலையில் இருப்பது இந்த மண்டலத்தில் அமைதியை உருவாக்குவதற்கு உத்தரவாதம் அளிக்கும்-என்றார். (வ)



## செவ்வாய் சுற்றுப் பாதைக்கு செப்ரெம்பர் - 24 இல் மங்கள்யான்

செவ்வாய்க்கிரக சுற்று வட்டப் பாதையை மங்கள்யான் விண்கலம் செப்ரெம்பர் - 24 ஆம் திகதி அடையும் என்று, அதன்திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை தெரிவித்தார். இது தொடர்பில் அவர் ஓமலூரில் செய்தியாளர்களிடம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கூறியதாவது:
எதிர்காலத்தில், இந்தியப் பொறியியலாளர்களின் சேவை உலக நாடுகளுக்குத் தேவைப்படும் சூழல் உருவாகும். மங்கள்யானின் பயணம் சுமுகமாகச் சென்று கொண்டிருக்கிறது. செப்ரெம்பர் - 24 ஆம் திகதி செவ்வாய்க்கிரக சுற்று வட்டப் பாதையை மங்கள்யான் அடைவதற்கான எல்லா சாத்தியக் கூறுகளுடன் பயணம் சிறப்பாக உள்ளன. செவ்வாய்க்கிரக சுற்று வட்டப் பாதையை மங்கள்யான் அடைந்தவுடன் அதன் பணிகள் முழுவீச்சில் ஆரம்பிக்கும். விண்வெளி ஆராய்ச்சியைப் பொறுத்தவரை, எல்லா நாடுகளும் தனித்தனியே இயங்க முடியாது. விண்வெளி ஆராய்ச்சியை வெற்றிகரமாக செயற்படுத்தி வரும், நாட்டை ஏனையநாடுகள் உற்றுநோக்கி, தங்களுடைய தேவைகளுக்கும் பயன்படுத்திக் கொள்கின்றன-என்றார். (வ)



# கூட்டமைப்பின் கோரிக்கைக்கு துணைபோகார் நரேந்திர மோடி

## நம்பிக்கை வெளியிடுகின்றது பொதுபல சேனா

கொழும்பு, ஓக.25
தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி துணை போக மாட்டார். முன்பிருந்த ஆட்சியாளர்கள் இனப் பிரச்சினை தீர்வு குறித்து பல அழுத்தங்களைக் கொடுத்து வந்துள்ளனர். புதிய பிரதமர் மீது எமக்கு பூரண நம்பிக்கை இருக்கிறது - இவ்வாறு தெரிவித்துள்ளார் பொதுபலசேனா செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர்.




இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.
"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மேற்கத்தேய நாடுகளின் பகடைக் காய்களாக மாறியுள்ளனர். தமிழ் மக்களுக்கு அத்தியாவசிய தேவை களை விடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தாம் அரசோச்சும் வகையில் வடக்கு, கிழக்கு இணைந்த தனிநாட்டைக் கோருகின்றது.
இலங்கை சுயாதீனமான நாடாகும். எனவே வெளி நாட்டுத் தலையீடுகளுக்கு நாம் இடமளிக்கமுடியாது. இருந்தும் இந்தியாவின் புதிய பிரதமர் மோடி நிலைமையை உணர்ந்து யதார்த்தமாக செயற்படுபவர். அவர் மீது எமக்கு முழு நம்பிக்கை இருக்கின்றது"- என்று தெரிவித்துள்ளார். (ற)



முன்னாள் போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் யூ.எல்.எம் பாருக்கின் '50 வருட கால அரசியல் வாழ்வும் யுக பெரலின் துங்கோரல அபிமானய' என்ற நூல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெளியிடப்பட்டது.
இந்த நிகழ்வில் இலங்கை நாடாளுமன்றத்தின் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், நீதியமைச்சர் ரவுப் ஹக்கீம், ஆரியவன்ச தேரர் மற்றும் யூ.எல்.எம் பாருக் ஆகியோர் உரையாற்றினார்கள். நூலின் முதற் பிரதியை சபாநாயகரிடம் யு.எல்.எம்.பாருக் வழங்கினார். எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க யு.எல்.எம்.பாருக்கின் இணையத் தளத்தை ஆரம்பித்து வைத்தார். (ற)

## இந்த ஆண்டு 100 கைதிகள் தப்பியோட்டம்

கொழும்பு, ஓக.25
இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நூறு கைதிகள் வரை தப்பியோடியுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்று வந்த கைதிகளே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக கைதிகளை அழைத்துச் செல்லும்வேளை தப்பிச் சென்ற சம்பவங்களும் பதிவாகியுள்ளன. இதேவேளை தப்பிச் சென்ற கைதிகளை மீண்டும் கைது செய்ய பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ற)



மூன்று மாத கால இராணுவப் பயிற்சியை முடித்துக் கொண்ட 36 தமிழ் இராணுவப் பெண் சிப்பாய்கள் வெளியேறியுள்ளனர். இந்த நிகழ்வு திருகோணமலையில் உள்ள 22ஆவது படைப்பிரிவின் தலைமை அலுவலகமான பிளான்ரன் பொயின்ற் முகாமில் நடைபெற்றது. மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் இருந்து இராணுவத்தில் இணைந்து கொண்டவர்களே இவ்வாறு பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறினர். (ற)

## 24 மணி நேரத்துக்குள் 6 பொலிஸாருக்கு அடி

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.25
கடந்த 24 மணித்தியாலங்களில் பல பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் ஆறு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ளனர்.
கண்டி, ஊருபொக்க மற்றும் கித்துல்கல ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களிலேயே இவர்கள் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.
தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், தாக்குதலுடன் தொடர்புடைய ஏனையவர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.
கித்துல்கல பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்துடன் இராணுவ சிப்பாய் ஒருவர் தொடர்புபட்டுள்ளார் என்று அஜித் ரோஹன கூறியுள்ளார்.
பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ற)

## மின்சாரம் தாக்கி இளைஞர் சாவு

கொழும்பு, ஓக.25
பாணந்துறை - வாழைத் தோட்டம் பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
ஹேனமுல்லை பகுதியைச் சேர்ந்த 19 வயதான இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
திருத்த வேலைகளுக்காக வீட்டின் கூரைமேல் ஏறிய குறித்த இளைஞர் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார் என்று கூறப்படுகின்றது.
சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை வாழைத் தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## வடக்குக்கான அதிவேகப் பாதை அமைக்கும் பணிகள் விரைவில்

கொழும்பு, ஓக.25
வடக்குக்கான புதிய அதி வேகப் பாதையின் நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று நெடுஞ் சாலைகள் அமைச்சு அறிவித் துள்ளது.
இலங்கையில் தற்போதைக்கு தெற்கு அதிவேகப் பாதை, கட்டுநாயக்க அதிவேகப் பாதை உட்பட மூன்று அதிவேகப் பாதைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. தற்போது நான்காவதாக வடக்குக்கான அதிவேகப் பாதை நிர்மாணிக்கப்படவுள்ளது.
நிர்மாணிக்கப்படவுள்ள வடக்குக்கான அதிவேகப் பாதையுடன் இணைந்ததாக கண்டிக்கான அதிவேகப் பாதையும் நிர்மாணிக்கப்படவுள்ளது. வரக்காபொலையை அண்மித்த பகுதியில் இருந்து கண்டிக் கான அதிவேகப் பாதை தனியாகப் பிரிந்து செல்லும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.
கொழும்பு புறநகர் சுற்று வட்டப் பாதையில் இருந்து ஆரம்பமாகும் வடக்குக்கான அதிவேகப் பாதை மூலம் வடக்கின் உற்பத்திகளை விரைவாக கொழும்புக்கு எடுத்து வர முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் மூலம் வடக்கின் பொருளாதாரத்தில் ஒரு வளர்ச்சி நிலை ஏற்படும் என்று அரசு தெரிவித்துள்ளது. (ற)

## அரசமைப்பை மாற்ற திட்டமிடுகிறது அரசு

### ஜனாதிபதித் தேர்தலுக்காக

கொழும்பு, ஓக.25
ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டி நடத்தக் கூடிய வகையில் அரசு அரசமைப்பில் மாற்றம் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளது.
எதிர்வரும் ஒக்ரோபர் மாதமளவில் இந்தத் திருத்தங்களை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க அரசு தீர்மானித்துள்ளது. அத்துடன் கட்சி தாவுவதையும் அரசு சட்ட ரீதியாக்கவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
அதன்படி, எதிர்வரும் நவம்பர் மாதம் 18ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தலை அறிவிக்கக் கூடிய வகையில் அரசமைப்பில் திருத்தம் செய்யப்பட உள்ளது. கட்சி தாவுவதற்கு சட்ட ரீதியான அந்தஸ்தும் வழங்கப்பட உள்ளது. தற்போதைய அரசியல் அமைப்பின் அடிப்படையில் கட்சி தாவ முடியாது.
எனினும், சில விசேட சந்தர்ப்பங்களில் கட்சி மாறுவதற்கு முடியும் என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தீர்ப்பளித்திருந்தார். (ற)

## ஒரு வயது மகளை நிலத்தில் அடித்துக் கொன்ற தந்தை

கொழும்பு, ஓக.25
பேருவளை பகுதியில் தனது மகளை நிலத்தில் அடித்து தந்தை ஒருவர் கொலை செய்துள்ளார். குறித்த பெண் குழந்தைக்கு வயது ஒரு ஆண்டும் 9 மாதங்களுமாகும். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## மத அமைப்புகளுடன் மோத வேண்டாம்; ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு, ஓக.25
மத அமைப்புக்களுடன் மோத வேண்டாம் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.
ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.
"ஒவ்வொரு மத அமைப்புக்களுடன் அமைச்சர்கள் மோதுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு மோதிக் கொள்வதால் தேவையில்லாத பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகமாகும்.
மத அமைப்புக்களுடன் வேலை செய்யும் போது மிகவும் நிதானமாக செயற்பட வேண்டும். மத அமைப்புக்கள் ஏதேனும் குற்றம் சுமத்தினால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும். எனினும் அவர்களின் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை. பதிலளிக்கப் போனால் இந்தப் பிரச்சினை நீண்டு கொண்டே செல்லும். பொதுபல சேனாவின் குற்றச்



சாட்டுக்களை யாரும் பெரிதாக கண்டுகொள்வதில்லை. அவர்கள் எல்லோரையும் விமர்சனம் செய்கின்றார்கள். அவர்களுக்கு பதிலளிக்க முயற்சித்தால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக் கூடும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# மரண அறிவித்தல்



## செல்லையா மகேஸ்வரன்

(உரிமையாளர் JAFFNA ELECTRICALS, Mahesh & Sons, Mahanathy Tex)

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மகேஸ்வரன் கடந்த (22.08.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா – சாந்தநாயகி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை – சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் சுப்பிரமணியம், கந்தசாமி ஆகியோரின் சகோதரரும், மதீசன் (Kenya), மதீதரன் (Mahesh & Sons), யாசோதினி (US), சாமினி (UK), முகுந்தன் (Jaffna Electricals) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமுதினி (Kenya), சிவதாரணி, வேதகி, வித்தியசங்கர் (US), நிசாந்தன் (UK), ஆகியோரின் பாசமிகு மாமனும், அபூர்வன், ஆதித்யா, அபிநயன், ஆதவி, சௌமியா, துளசிந்தன், அட்சயன், அஸ்வித்தா அபிராம், ஆதன்யா, அய்றா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2014) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் (127/6, கோயில் வீதி, யாழ்ப்பாணம்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை வடக்கு கொம்பிகுள மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
077 773 8715, 021 221 9522, 011 236 7607

127/6, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

# கைத்தொலைபேசியும் பெண்களும்



சோபனா

அவசர அவசரமாக பஸ்ஸில் ஏறிய அவள் தனது கைப்பைக்குள் எதையோ பரபரப்பாக தேடினாள். அவளின் பதற்றமான முகம் ஏதோ முக்கியமான ஒன்றை தொலைத்துவிட்டு தேடுவது போல் முகபாவனையில் இருந்தது. உள்ளிருந்து அவள் எதை எடுக்கப்போகிறாள் என்ற ஆர்வம் பஸ்ஸில் இருந்தவர்களின் கண்களில் இருந்தது.

அவள் கைப்பையில் இருந்து எடுத்தது கைத்தொலைபேசியைத்தான். அதை கையில் எடுத்தவுடன் அவளது முகத்தில் கொஞ்சம் மாற்றம். கைத்தொலைபேசியில் இலக்கங்களை அழுத்தத் தொடங்கிய அவள் மறுமுனையில் இருந்த அழைப்புடன் இலயித்து விட்டாள் நெரிசலான அந்த பஸ்ஸில் அவளுக்கு வேறு எதுவும் கேட்டிருக்காது.

ஆம் ! இன்று ஆண்கள், பெண்கள் என அனைவருக்கும் இன்னொரு துணை போல் இந்தக் கைத்தொலைபேசி அமைந்து விட்டது.

நவீன உலகம் என்று கூறிக்கொண்டாலும் தற்போதைய மனித வாழ்வியலில் கைத்தொலைபேசியும் இன்று ஒரு முக்கிய தேவையாகி விட்டது. அலுவலகம் செல்வோர் முதல் பாடசாலை செல்லும் மாணவர்கள் கைகளில் கூட இன்று கைத்தொலைபேசி இல்லாமல் இல்லை.

ஆனால், இந்தக் கைத்தொலைபேசி பெண்களுக்கு எத்தகைய நன்மையும் தீமையையும் பெற்றுத்தருகின்றன. என்பதை தான் அன்றாட நம் வாழ் வியலில் அவதானித்துக் கொண்டிருக் கிறோம்.

ஒருவிதத்தில் தொடர்பாடலுக்கு பெண்களுக்கு கைகொடுத்தாலும் இந்தக் கைபேசியால் அதிக தீமைகளைப் பெற்றுக் கொள்வதும் பெண்கள் தான்.

ஆண்களுக்கு கைத்தொலைபேசியால் தீமை ஏற்படுவதில்லையா என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் ஆண்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களை விட பெண்களுக்கு சற்று அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பது தான் உண்மை.

நவீன காலம் எம்மை மாற்றியிருக்கலாம் நாங்களும் அதற்கேற்றால் போல் வாழப்பழகிக் கொள்ளலாம். எனினும் எமக்கு நன்மை தரக்கூடிய விடயங்களை நாம் முன்னிலைப்படுத்தி அவற்றின் வழி நாம் நடக்க நினைக்க வேண்டும்.

வாழ்க்கையில் சந்திக்கும் சாதிக்க நினைக்கும் விடயங்களுக்கு நாம் முதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

காலத்துக்கு ஏற்ப எம்மால் மாற முடியாவிட்டாலும் அதில் இருக்கக்கூடிய தீமையான விடயங்களை நாம் தவிர்த்துக் கொள்ளலாமே.

அதில் ஒன்று தான் இந்தக் கைத்தொலைபேசி எந்தப்பக்கம் திரும்பினாலும் யாராவது ஒருவரது கையில் கைத்தொலைபேசி கட்டாயம் இருக்கத்தான் செய்கிறது.

இந்த விடயத்திலும் சமுதாயம் ஆண், பெண் வேறுபாடு காட்டாமல் இல்லை ஒரு வீதியிலோ அல்லது பொது இடத்திலோ கைத்தொலைபேசியுடன் ஒரு ஆண் நீண்ட நேர உரையாடலில் இருந்தால் அதனை யாரும் கண்டு கொள்வதில்லை. அதை சாதாரண ஒரு நிகழ்வாக எடுத்துக்கொண்டு தமது வேலையுடன் இருந்துவிடுவார்கள். ஆனால் அதுவே பெண்ணாக இருந்தால் அந்த இடத்தில் சுற்றுச்சூழலில் இருப்பவர்களின் பார்வை முழுவதும் அந்தப்பெண் மீது தான் இருக்கும். எவ்வளவு தான் நல்ல விடயங்களுக்கோ அல்லது முக்கிய விடயங்களுக்கோ நம்து உரையாடல் இருந்தாலும் தவறான பார்வை தான் அங்கு இருக்கும்.

எம்மை சுற்றி என்ன நடக்கிறது என்பதை நாங்கள் தான் அவதானிக்க வேண்டும். சமுதாயம் எங்களுக்காக எப்போதும் மாறாது. சமுதாயத்துக்காக நாங்கள் தான் மாற வேண்டும்.

இதற்கு உதாரணமாக இந்தக் கைத்தொலைபேசிப் பாவனையைக் குறிப்பிடலாம். பெண்கள் முடியுமானவரை பொது இடங்களில் கைத்தொலைபேசியில் நீண்ட நேர உரையாடலை தவிர்க்க வேண்டும். அவசியமற்ற விடயங்களை நீண்ட நேரம் பொது இடத்தில் இருந்து பகிரங்கப்படுத்துவதால் நமக்கு கிடைக்கப்போவது தீமை மட்டுமே. ஏனெனில் ஒவ்வாரு பெண்ணும் என்ன செய்கிறார்கள் என்பதை இன்னொரு பெண்ணும் அவர்களோடு இணைந்து ஆணுமே பேசப்போகிறார்கள். பெண்களே பெண்களைப் பற்றி தவறாகக் கருதும் போது ஆண்கள் நம்மை தவறாக நினைப்பதில் நாம் குறை கண்டுவிட முடியாது.

பெண்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கூடுதலாக பொது இடங்களிலேயே இருக்கும். குறை கண்டு கொள்வதற்:கு அங்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். மற்றவர்களது பார்வைக்குள் எம்மை தவறாகக் கொண்டு சென்ற பின்னர் அதை மாற்ற முடியாது என்பதை பெண்கள் தான் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.



# கிராஞ்சி பாடசாலையை தரமுயர்த்த கோரிக்கை

கிளிநொச்சி.ஓக.25
கிளிநொச்சி கிராஞ்சிப் பாடசாலையைத் தரமுயர்த்துமாறு பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
தரம் 1 தொடக்கம் 9 வரையான வகுப்புகளைக் கொண்ட இந்தப் பாடசாலையில் 350 வரையான மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர்.
இந்தப் பாடசாலையை தரம் 11 வரை தரமுயர்த்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
இதேவேளை ஆசிரியர் கலாசாலைக்கு இந்தப் பாடசாலையிலிருந்து 7 ஆசிரியர்கள் சென்றிருந்தபோதிலும் அதற்குப் பதிலாக ஒரு ஆசிரியர் மட்டுமே பணிக்கு வந்துள்ளார்.
6 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்தப் பாடசாலையைத் தர முயர்த்தி ஆசிரியவளத்தையும் பெருக்குமாறு பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-18)



முள்ளியவளை ஆலடிச் சந்தியில் இருந்த 6ஆம் கட்டையில் தண்ணீரூற்று-நெடுங்கேணி பிரதான வீதியில் சுமார் 2 கிலோ மீற்றர் நீளமான வீதி படுமோசமான நிலையில் பயணம் செய்யமுடியாதவாறு காணப்படுகின்றது. (த-433)

# வாழ்வாதார உதவிகளில் புறக்கணிப்பு என முறையீடு

முல்லைத்தீவு.ஓக.25
முல்லைத்தீவு கொக்குளாய், கொக்குதொடுவாய், கருநாட்டுக் கேணி கிராம மக்கள் அரசின் வாழ்வாதார உதவிகளில் புறக்கணிக்கப்படுவதாக தெரிவிக்கின்றனர்.
கொக்குளாயில் 280 குடும்பங்களும் கொக்குத்தொடுவாயில் 300 குடும்பங்களும், கருநாட்டுக்கேணியில் 350 குடும்பங்களும் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் வாழ் வாதார உதவிகளில் மிகக் குறைந்த உதவிகளே கிடைத் துள்ளதாகவும் தமது வயல் நிலங்க ளில் சிங்களவர்கள் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறுகின்றனர். (த-18)

# கலைஞர்கள் சாதித்தவை ஆவணமாவது அவசியம்

## உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவிப்பு




கிளிநொச்சி, ஓக.25
கலைஞர்கள் வாழுங்காலத்தில் சாதித்தவற்றை ஆவணப்படுத்துவது என்பது மிக முக்கியமானதாகும் என கிளிநொச்சி அரச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலைஞர் மதிப்பளிப்பு மற்றும் கலைஞர் விவரத் திரட்டு நூல் வெளியீட்டு நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவின் கலைஞர் விவரத் திரட்டு என்கின்ற ஆவணத் திரட்டு நூல் வெளியீடு செய்யப்படுகின்றது. இது ஒரு நல்ல முயற்சியாகும்.
ஆவணப்படுத்தல் என்பது எமது பிரதேசத்தில் நாம் வாழும் காலத்தில் நாம் சாதித்ததை, சாதித்தவர்களை வைத்துக் கொண்டே ஆவணப்படுத்துவது நூல் வெளியீட்டின் ஒரு சிறந்த உண்மை. வாழுங் காலத்தில் கலைஞர்கள் வருமானத்துக்கு அப்பால் நின்று வறுமைக்கும் குடும்ப நெருக்குவாரங்களுக்கு மத்தியிலும் கலைப் பணியினை ஆற்றிக் கொண்டிருப்பார்கள்.
அவ்வாறான கலைஞர்களை எவ்வாறு மதிப்பளிக்க வேண்டும் என்பதற்கு இந்தவிழா உதாரணமாக அமைகின்றது. இந்நூல் இந்தப் பிரதேசத்தினுடைய ஒரு பகுதி வரலாற்றை பதிவுசெய்வதற்கான முயற்சியாக அமைந்துள்ளது- என்றார். (த-18)

## சிறுவர் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கு

கிளிநொச்சி, ஓக.25
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கிருஷ்ணபுரம் கிராம சிறுவர் கழக உறுப்பினர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த 22 ஆம் திகதி கிருஷ்ணபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.
'வேள்ட்விஷன்' நிறுவன அனுசரணையுடன் அதன் திட்ட இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற முழு நாள் கருத்தரங்கில் கிராம சிறுவர் கழகத்தைச் சேர்ந்த 60 க்கு மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்டனர்.



கோப்புப்படம்

'சிறுவர் கழகத்தின் செயற்பாடுகள்', 'சிறுவர் துஷ்பிரயோகங்களை இனங்காணுதல் அவற்றை யாருக்கு முறையிட்டு தீர்வு காணுதல்" என்னும் தலைப்புகளில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலர் இ.செந்தூரனும் மாவட்ட உளவளத்துறை அலுவலர் தே.துஷ்யந்தனும் கருத்துரைகளை வழங்கினர். (த-9)

# வற்றாப்பளை ம.வியில் சகோதர சங்கமம் நிகழ்வு



முள்ளியவளை, ஓக.25
ஜி.ஐ.இசற் நிறுவனத்தின் ஈ.எஸ்.சி திட்டத்தின் கீழ் இன,மத, மொழி பண்பாட்டு விழுமியங்களை அறிந்து கொள்ளும் வகையிலான சகோதர சங்கமம் நிகழ்வு வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் கடந்த 21ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு ஆரம்பமானது
இதில் பிரதம விருந்தினராக மருத்துவ கலாநிதி திருமதி சூரியா சத்தியரூபன்கலந்து கொண்டார்.
வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன், ஜி.ஐ.இசற் நிறுவன வட மாகாண இணைப்பாளர் வீ. இராசையா மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர், நிறுவன உத்தியோகத்தர்கள் ஆகியோரும் இதில் பங்கேற்றனர்.
இந்த நிகழ்வில் வற்றாப்பளை மகா வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், தண்ணீரூற்று முஸ்லிம் வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள், வெலிஓயா எகட்டுக்கஸ்வெவ வித்தியாலய மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.
தங்களின் பண்பாடு, கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் கலை நிகழ்வுகளையும், ஆற்றுகைகளையும் இவர்கள் நிகழ்த்தினார்கள். (த-433)

# மன்னார் குஞ்சுக்குளம் பாலம் ரூ. 27 மில்லியனில் புனரமைப்பு

மன்னார், ஓக.25
இடர் முகாமைத்துவ அமைச்சின் 27 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மன்னார் குஞ்சுக்குளம் பகுதியில் உள்ள பாலம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.
இதற்கான பணிகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக மன்னார் மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது.
மன்னார் மடு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்டதாக மாதா கிராமம், பெரியமுறிப்பு மற்றும் குஞ்சுக்குளம் ஆகிய கிராமங்கள் அமைந்திருக்கின்றன. மேற் குறித்த கிராமங்களுக்கான போக்குவரத்தை மேம்படுத்தும் பொருட்டு இந்தப் பாலம் நிர்மாணிக்கப்படவுள்ளது.
வருடந்தோறும் மழை காலங்களின்போது ஏற்படும் வெள்ளப்பெருக்கின் காரணமாக மேற்படி கிராமங்களுக்கான தரை வழிப் பாதை ஊடான போக்குவரத்து முற்றிலும் தடைப்படுவதுண்டு.
இதனால் குறித்த கிராமவாசிகளுக்கு மன்னாரின் ஏனைய பிரதேசங்களுடனான வெளித் தொடர்புகள் தடைப்பட்டு வருகின்றன.
இதனையடுத்து குஞ்சுக்குளம் பகுதியில் மல்வத்து ஓயாவுக்கு மேலாகப் பாலம் நிர்மாணிக்கப்படவுள்ளது. (த-14)

# கட்டாக்காலிக் கால்நடைகளால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்



முல்லைத்தீவு.ஓக.25
முல்லைத்தீவு மாவட்டத்தில் கட்டாக்காலி கால்நடைகளால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதுடன் ஆலய வளாகங்களின் சுற்றுப் புறச் சூழல்கள் மாசடைந்து வருவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.
இதுபற்றி அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
முள்ளியவளை, ஒட்டுசுட் டான், தண்ணீரூற்று, புதுக்குடியிருப்பு மற்றும் கற்சிலைமடுப் பகுதிகளில் வீதிகளில் மாலை 6 மணி முதல் காலை 7 மணி வரை கட்டாக்காலிக் கால்நடைகளால் அதிகளவு விபத்துக்கள் ஏற்ப டுகின்றன. அத்துடன் அவசர நோயாளர்களைக் கொண்டு செல்லும் அம்புலன்ஸ் வாகனங்கள் கூட வீதிகளில் வேகமாகப் பயணிக்க முடியாதவாறு கால் நடைகளின் தொல்லை காணப்படுகின்றது.
முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயம், ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரர் ஆலய வளாகங்கள் கால்நடைகளின் எச்சங்களால் நிறைந்து அசுத்த மடைந்துள்ளன.
இவைகளைத் தவிர்க்கும் வகையில் ஒவ்வொரு பகுதி கமநலச் சேவை நிலையங்கள் ஊடாகக் கட்டாக்காலிகால்நடைகளைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். (த-500)

### நல்லூரில் 23 திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஓக.25
பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தில் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கென 23 செயற்றிட்டங்களுக்கு 11 லட்சத்து 88 ஆயிரத்து 850 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தெரிவித்தார். (த-7)

# ஊர்காவற்றுறைக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு ரூ.1.5 மில்லியன்

## இடர் முகாமைத்துவ அமைச்சு ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஓக.25
ஊர்காவற்றுறை பிரதேசத்தில் நிலவும் வறட்சி காரணமாக கிணறுகள், குளங்கள் போன்ற நீர் நிலைகள், யாவும் வற்றிய நிலையில் மக்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யவென தேசிய இடர் முகாமைத்துவ அமைச்சு ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவுக்கு ரூபா 1.5 மில்லியன் நிதியை வழங்கியுள்ளது.

யாழ். அரச அதிபர் மேற்கொண்ட நடவடிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட இந்த நிதியின் மூலம் ஊர்காவற்றுறை பிரதேச சபை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, நாரந்தனை வடமேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் என்பவற்றினூடாக தேவையான பகுதிகளுக்குக் குடிதண்ணீர் வழங்கப்படுவதாக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தெரிவித்தார்.

மக்களுக்குப் போதிய அளவு குடிதண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரால் கண்காணிக்கப்பட்டு பிரதேச இடர் செயலணிக் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதுடன் தேவைகள் குறித்தும் உடனுக்குடன் தகவல்கள் தரப்படுவதாகவும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - தேசிய இடர் முகாமைத்துவ அமைச்சின் நிதியுதவியில் நாரந்தனை கிராம அலுவலர் பிரிவில் உள்ள கிணறு ஒன்றும் புனரமைக்கப்பட்டு வருவதாகவும், அனலைதீவு கிராம அலுவலர் பிரிவில் புதிதாக கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது எனவும் பிரதேச செயலர் மேலும் கூறினார். (த-7)

### இந்து மயானம் புனரமைப்பு

தென்மராட்சி, ஓக.25
சாவகச்சேரி நகரசபையின் பராமரிப்பில் உள்ள நுணாவில் காந்தாளம்பிட்டி இந்து மயானம் அடுத்த வருடம் புதுப்பொலிவு பெறவுள்ளது.
அடுத்த வருடத்துக்கான சபையின் உத்தேச வரவு - செலவுத் திட்டத்தில் மயான புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானம் போன்று அழகுற வைத்திருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
மயானப் புனரமைப்புக்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மயானத்தைச் சுற்றி மதில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (த-9)


## நீதிமன்றின் உத்தரவால் மூடப்பட்டது உணவகம்

யாழ்ப்பாணம், ஓக. 25
யாழ்.நகர் கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள முஸ்லிம் உணவகம் ஒன்று பழுதடைந்த உணவு விற்பனை செய்ததன் காரணமாக நீதிமன்றின் உத்தரவுக்கு அமைவாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.
கடந்த 21 ஆம் திகதி அன்று உணவுப்பொதி ஒன்றை வாங்கிய நபர் அந்தப் பொதியில் இருந்த உணவு பழுதடைந்துள்ளமை தொடர்பில் யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பிரிவுக்கு தகவல் வழங்கினார். இந்தத் தகவலின் அடிப்படையில் திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டபோது உணவகத்தில் பழுதடைந்த உணவுகள் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டது. இதனை அடுத்து உணவகத்துக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
உணவகத்தின் சுகாதாரம் தொடர்பில் நாளை அறிக்கை சமர்ப்பிக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கும் வரை உணவகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகச் சுகாதாரப்பிரிவு தெரிவித்துள்ளது. (த-14)

## ஆலய வளாகங்களில் இருந்து இளநீர் கோம்பைகளை அகற்றுக

### சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்து

தென்மராட்சி,ஓக.25
ஆலய உற்சவங்களில் பயன்படுத்திய இளநீர் கோம்பைகளை அங்கிருந்து அப்புறப்படுத்துமாறு ஆலய நிர்வாகிகளை சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் கேட்டுள்ளனர்.
மழைகாலம் அண்மித்துள்ளதால் ஆலய உற்சவ காலத்தில் பயன்படுத்திய இளநீர்க் கோம்பைகள் மற்றும் அபிஷேக நீர் வழிந்தோடி தேங்கி நிற்கும் இடங்கள், அன்னதானம் வழங்கிய போது பயன்படுத்திய நீர் பல இடங்களில் தேங்கி நிற்பதை ஆலயச் சுற்றாடல்களில் காணக்கூடியதாக உள்ளது.



எனவே, இவற்றை அப்புறப்படுத்தி டெங்கு நுளம்பு உற்பத்தியாகாமல் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சுகாதாரப் பகுதியினர் கோரியுள்ளனர். (த-9)

### காலபோக நெற்செய்கை ஆயத்தப் பணிகள் மும்முரம்

தென்மராட்சி,ஓக.25
குடாநாட்டில் காலபோக நெற்செய்கைக்கான ஆயத்தப் பணிகள் நெற் செய்கையாளர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
பிரதேசத்தில் ஓரளவு மழை பெய்ததையடுத்து வயல்களுக்கு பெருமளவு குப்பைகள் வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றன. வரம்புகள் கட்டப்படுகின்றன.
சிலவயல்களில் உழவுவேலைகளும் நடைபெற்று வருவதைக் காணமுடிகிறது.
கடந்த வாரம் பிரதேசத்தில் பெருமழை பெய்ததையடுத்து காலபோக நெற் செய்கைக்கான முன் ஆயத்தப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (த-9-135)

## கைபேசியில் உரையாடியவாறு வீதியைக் கடந்தவரால் விபத்து

### மூவர் காயமடைந்து வைத்தியசாலையில்

அளவெட்டி,ஓக.25
கைத்தொலைபேசியில் உரையாடியவாறு வீதியைக் கடக்க முயன்றவரை அந்த வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் மூவர் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் கடந்த 20 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்துக்கு முன்பாக கே.கே.எஸ்.வீதியில் இடம்பெற்றது.
இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-



கடைக்குச் சென்றுவிட்டுத் தொலைபேசியில் உரையாடிய வண்ணம் வீதியைக் கடக்க முற்பட்ட பாதசாரியை அந்த வீதியால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.
இதில் பாதசாரியான உரும்பிராயைச் சேர்ந்த சுப்பையா கோட்டமுத்து (வயது-39) மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களான கும்பலை, அளவெட்டியைச் சேர்ந்த நடராசா றொபாட்காற்சன் (வயது-44), கட்டுவன் கிழக்கைச் சேர்ந்த ரவீந்திரன் சுவீந்திரன் (வயது-29) ஆகிய மூவரும் காயமடைந்தனர். மூவரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். (த-36)

### இலகு வேலைத் திட்டத்தில் வீதிகள், வாய்க்கால் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 25
ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் உலக உணவுத் திட்டத்தின் இலகு சேவைக்கான திட்டத்தில் வீதிகள், வாய்க்கால்கள், குளங்கள் என்பன புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.
இதற்கென இலகு வேலைக்கான உணவுத் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 86 குடும்பங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.
வறட்சியைத் தணிக்கும் நோக்கில் குளங்கள், விவசாயக் கிணறுகள் என்பவற்றைப் புனரமைப்பதற்கும், கால் நடைகளுக்கான குடிதண்ணீர்த் தொட்டிகள், மக்களுக்கான குடிதண்ணீர்த் தொட்டிகள் அமைக்கவும், உவர் நீர்



தடுப்பணை புனரமைப்புக்கும் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச செயலகர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தெரிவித்தார். (த-7)

## வலி.தென்மேற்கில் இரு டெங்கு நோயாளர்

### புகையூட்டும் பணி தீவிரம்

வலி.தென்மேற்கு, ஓக.25
வலி.தென்மேற்கு பிரதேசத்தில் டெங்குநோயால் பாதிக்கப்பட்ட இருவர் இனங் காணப்பட்டதை அடுத்து, அந்தப் பகுதியில் புகையூட்டல் நடவடிக்கையை மேற்கொண்ட சுகாதாரப் பகுதியினர் மக்கள் மத்தியில் இது சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையை மேற் கொண்டுள்ளனர்.
வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் மாதகல் பகுதியில் கனால் வீதியில் வசிக்கும் இருவர் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளானது பற்றி பரிசோதனை மூலம் தெரிய வந்ததைத் தொடர்ந்து இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.



இதைத் தொடர்ந்து இந்தப் பகுதிக்கு விரைந்து சென்ற சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் புகையூட்டல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதுடன் வீடு வீடாகச் சென்று நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய தடயப் பொருள்களைத் தேடி அழித்து வருவதுடன் மக்கள் மத்தியில் இது சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். (த-115)

## எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாலயத்துக்கு கட்டடம்

### ரூ.24 மில்லியன் செலவில் அமைப்பு

தென்மராட்சி,ஓக.25
எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்துக்கு 24 மில்லியன் ரூபா செலவில் மாடிக் கட்டட வகுப்பறைத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளது.
சுவிஸ் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான நிறுவனத்தினர் கட்டட நிர்மாணத்துக்கான நிதியை வழங்கியுள்ளனர்.
புதிய கட்டடத்து [illegible]கான அடிக்கல் நடும் நிகழ்[illegible] [illegible]திர்வரும் 28 ஆம் திகதி [illegible]வியாழக்கிழமை முற்பகல் 11 மண[illegible]க்கு தென்மராட்சி வலயக் கல்[illegible]விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண[illegible]குமார் தலைமையில் [illegible]டம் பெறும்.
வடமாகாண கல்வி பண்[illegible]பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய கட்டடத் தொகுதிக்கான அடிக்கல்லை நட்டு வைப்பார். (த-9)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசின் தீர்வுத் திட்டம் வெளியிடப்படுமா?

மனிதனுக்கு மூக்கு இருக்கின்ற வரையில் தடிமன் பிரச்சினை இருக்கவே செய்யும் என்பது கிராமிய பேச்சு வழக்கு. அதுபோல் இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாத வரையில் இந்திய நாட்டின் தலையீடு ஏதோ ஒருவகையில் இருந்து கொண்டேதான் இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

இந்திய வம்சாவளியினரான பெருந்தொகையான தமிழ் மக்கள் இலங்கையின் மலைப் பகுதிகளிலும் கணிசமான எண்ணிக்கையில் ஏனைய கிராமங்கள், நகரங்களிலும் வாழ்ந்து வருகிறார்கள். அதேபோல் தென்னிந்திய மாநிலம் ஒன்றில் முழுமையாகவும் ஏனைய மாநிலங்களில் ஆங்காங்கேயும் தமிழ்மொழியையே பேசுகின்ற அந்த மொழியோடு தொடர்புடைய சமயம், கலைகள், கலாசாரங்களைப் பேணுகின்ற மக்களுடன் அதே வகையில் உறவு கொண்ட தமிழ் மக்கள் இலங்கையின் வடக்கு -கிழக்கு மாகாணங்களில் செறிந்தும் ஏனைய பகுதிகளில் கணிசமாகவும் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கிடையிலான உறவை கொப்பூழ்க் கொடி அல்லது இரத்த உறவு என்று கூறப்படுவதுண்டு.

எனவேதான் இலங்கைத் தமிழர்கள் வடக்கு- கிழக்கில் வாழ்ந்தாலென்ன மலையகத்தில் வாழ்ந்தாலென்ன அவர்கள் பிரச்சினையில் இந்திய அரசு தலையிட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றது. அது மட்டுமல்ல இலங்கையில் ஏற்பட்ட நெருக்கடிகளின் காரணமாக ஒரு லட்சம் பேருக்கு மேல் இலங்கைத் தமிழர்கள் இந்தியாவில் அகதிகளாக இருந்து வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தியா அக்கறை கொள்வதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்து வருகின்றது. இலங்கைத் தமிழர் விடயம் இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை இதில் ஏன் இந்திய அரசு தலையிடுகின்றது என்ற வகையில் முன்னர் ஒருமுறை கேள்வி எழுப்பப்பட்டபோது அப்போது இந்தியப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி அம்மையார் இதைத்தான் சுட்டிக்காட்டியிருந்தார். இந்திய மாநிலமான தமிழ்நாட்டு மக்களின் உறவினர்கள் இலங்கையில் இருக்கிறார்கள். அவர்களின் பிரச்சினையில் இந்தியா அக்கறை கொள்ளாமல் இருக்க முடியாது என்றவாறு அவர் கூறியிருந்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை, பேச்சுக்கள் ஒப்பந்தங்கள், வாக்குறுதிகள் என்று மட்டுமன்றி பல்வேறு சமயங்களிலும் இனவாதிகளின் வன்செயல்களுக்கும், கொடுமைகளுக்கும் உள்ளான நிலையில் இந்திய தலையீட்டின் பின்னர் 13 ஆவது திருத்தம் என்ற ஒன்று அரசமைப்பில் சேர்க்கப்பட்டது. அதுவும் கூட இப்போது இழுபறியில் உள்ளது. இந்த நிலையில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழுவொன்று அதன் தலைவர் ஆர்.சம்பந்தன் தலைமையில் இந்தியாவுக்குச் சென்று அந்த நாட்டுப் பிரதமரோடும், வெளியுறவு அமைச்சரோடும் பேச்சுக்களை நடத்தியுள்ளது. அதையும் கூட அரசில் உள்ளவர்கள் குறை கூறிவருகிறார்கள்.

13 ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று மேலதிகமாகவும் இலங்கைத் தமிழருக்கு வழங்கப்படும் என்பதாக பல்வேறு தரப்புகளுக்கும் வாக்குறுதியளித்திருந்த அரசு தரப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதற்காக நடத்திவந்த இரு தரப்புப் பேச்சுக்களையும் இடைநடுவில் முறித்துக் கொண்டு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தான் தீர்வு என்ற நிலைக்குத் திரும்பி பேச்சு நடத்த அங்கே வரும் படி கூட்டமைப்பை வற்புறுத்தி வருகிறது. அங்கேயும் தமிழ்த் தரப்பு ஏமாற்றப்படலாம், அல்லது சதி வலைக்குள் சிக்கவைக்கப்படலாம், அதுவும் மீறி ஒரு தீர்வு எட்டப்பட்டாலும் அதுவும் செயற்படுத்தப்படும் என்பது என்ன நிச்சயம் என்பவையெல்லாம் தமிழர் தரப்பின் ஆதங்கமாகும். எனவேதான் இந்தப் பிரச்சினையில் அக்கறையும் ஒரு தீர்வுக்கு வழிகாட்டக்கூடியதுமான இந்திய அரசுடன் த.தே.கூட்டமைப்பினர் ஆலோசனைகள் நடத்தியிருக்கிறார்கள். இவ்வாறு தமிழ் தரப்பினர் இந்திய தலைவர்களுடன் பேச்சு நடத்தியிருப்பது இது முதல் தடவையும் அல்ல.

இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அம்மையார் விரைவில் இலங்கை வரவிருக்கிறார் என்று தெரிகிறது. தாம் வருவதற்கு முன் இலங்கை அரசு தமிழர் பிரச்சினை தொடர்பான தமது ஆலோசனை களை அறிவிக்கும் என்று எதிர்பார்ப்பதாக அம்மை யார் முன்னர் தம்மைச் சந்தித்த வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் கூறியிருந்தார். அந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது எதிர்பார்ப்புகள் என்ன என்பதை இந்திய வெளியுறவு அமைச்சருக்கு விளக்கி யிருப்பார்கள் என்று நம்பலாம்.

பிரதமர் மோடியின் வரவை இலங்கை மக்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி கூறியிருக்கிறார். அதற்கு முன் சுஷ்மா சுவராஜின் வருகை இடம்பெற வேண்டும். அவர் வருகைக்கு [illegible]ன் அரசு தனது தீர்வுத் திட்டத்தை [illegible] இல்லாவிட்டாலும் இரகசியமாகவாவது இந்தியாவுக்கு அறிவிக்கும் என்று [illegible]

# வரலாற்றுத் திருப்பம் ஏற்பட வாய்ப்புண்டா?

சிங்கள மூலம் - மவ்பிம
தமிழில் - வீஎஸ்ரீ



2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நாலாம் திகதியன்று, அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரணிலின் வசமிருந்து மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்களைத் தம்வசம் எடுத்துக் கொண்ட வேளை ரணில் அமெரிக்காவில் இருந்தார். அன்று நள்ளிரவே மேற்குறிப்பிட்ட தகவல் ரணிலுக்கு எட்டியது. அதற்கு அடுத்த நாள் ரணில், அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷைச் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது. அவ்வேளையில் ரணிலின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசின் அமைச்சர்களில் ஒருவராயிருந்த எஸ்.பி.திஸநாயகா ரணிலுக்கு கைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடனடியாக ரணிலை நாடு திரும்புமாறு கேட்டுக்கொண்டார். ஆனால் ரணிலோ ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தபடி ஜனாதிபதி புஷ்ஷைச் சந்தித்து, அதன் மூலம் ஜனாதிபதி சந்திரிகா என்னதான் செய்தாலும், அமெரிக்கா தமது பக்கமே ஆதரவாக இருப்பதாக நாட்டு மக்களுக்குக் காட்டிக் கொள்வது தமக்குப் பிரயோசனமாக இருக்குமெனக் கணக்கிட்டார். அந்த இடத்தில் தான் ரணில் போட்ட கணக்கு, தப்புக் கணக்காக நேர்ந்தது.

இன்று மஹிந்தாவும் அத்தகைய தவறையே மேற்கொள்கிறார். 2005 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலுக்கான மஹிந்த தரப்பின் பரப்புரை மேடைகளில் முக்கிய பேச்சாளராகத் திகழ்ந்தவர் விமல் வீரவன்சவே. ஹெல உறுமய கட்சியின் பரப்புரைக் கூட்டங்களில் சம்பிக தரப்பினர் மஹிந்த குறித்த நல்லெண்ணத்தை வாக்காளர் மனதில் உருவாக்கி வைத்தனர். 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது இவர்களுடன் மேர்வின் சில்வா, ராஜித சேனாரட்ண ஆகியோரும் கூட மஹிந்தவுக்கு ஆதரவு தேடிக் கொடுத்தனர். சரத்பொன்சேகாவுக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட அமைச்சர்கள் அஞ்சிய போதிலும் மேற்குறிப்பிட்டோர் துணிச்சலுடன் மஹிந்தவின் வெற்றிக்காக பரப்புரை மேற்கொண்டு மஹிந்தவை வெற்றிபெற வைத்தனர்.

இன்றைய நிலையில் ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பொன்று, இருந்தாற் போலிருந்து திடீரென விடுக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியுள்ளது. அத்தகைய திடீர் ஜனாதிபதித் தேர்தலுக்கான மஹிந்த தரப்பின் முக்கிய பாத்திரமாக இன்று சுப்பிரமணியம் சுவாமி முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். இன்றைய நாள்களில் பத்திரிகைகளிலும் சரி, தொலைக்காட்சி செய்திகளிலும் சரி, சுப்பிரமணியம் சுவாமி, மஹிந்தவை முருங்கை மரத்தில் ஏற்றும் விதமான செய்திகளே வெளிவருகின்றன. தமிழர்களது வாக்குகள் இலலாமலேயே மஹிந்தவால் வெற்றியீட்ட முடியும் எனக் கொக்கரிக்கிறார் சுவாமி. அத்தோடு எவருமே மஹிந்தவில் கை வைக்க இயலாதெனவும் கர்ச்சிக்கிறார்.

அந்த வகையில் பார்க்கும்போது, முன்னர் ரணிலைப் பீடித்த நோயே தற்போது மஹிந்தவையும் பீடித்திருப்பதாகத் தோன்றுகிறது. ரணிலோ ஜோர்ஜ் புஷ்ஷின் ஆதரவைக் காட்டி தேர்தலில் வெற்றி பெறலாமென நம்பினார். எது எப்படியானாலும் புஷ் அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர். ஆனால் இந்தச் சுப்பிரமணியம்சுவாமியோ வெறுமனே இந்தியாவின் ஓர் அரசியல்வாதி. அதுமட்டுமன்றி முதலாம் தரப் பொய்யர். 2004 ஆம் ஆண்டின் இந்தியப் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றியீட்டியபோது, தாம் அவ்வேளை ஜனாதிபதி அப்துல் கலாமைத் தொடர்பு கொண்டு சோனியா காந்தியை பிரதமராக நியமிக்க வேண்டாமெனக் கோரியதாக அவ்வேளையில் சுவாமி பொய்யொன்றை அவிழ்த்து விட்டிருந்தார். சோனியா காந்தி இந்தியப் பிரஜையாக இல்லாததால் அத்தகைய தமது கோரிக்கையை ஏற்று ஜனாதிபதி அப்துல்கலாம், சோனியாவைப் பிரதமராக்குவதைத் தவிர்த்தார் எனவும் சுவாமி கதை விட்டிருந்தார். ஆனால் அந்த வேளை முதல் தொடர்ச்சியாகவே அப்துல்கலாம், சுவாமியின் கருத்து முழுப் பொய்யென மறுத்துரைத்து வந்திருந்தார். தாம் ஒரு போதும் அந்த விடயம் குறித்து சுவாமியுடன் பேசியதில்லை எனவும் கலாம் உறுதிப்படுத்தியிருந்தார். அத்தோடு சோனியாவைச் சந்தித்த போது அவரது பிரஜா உரிமை குறித்து எந்தவித பிரச்சினையும் கிடையாதெனவும் கலாம் தெரிவித்திருந்தார். இதனால் சுப்பிரமணியம் சுவாமி மூக்குடைபட்டு வெட்கப்பட நேர்ந்தமை தான் கண்ட பலன்.

### பொய்யன் சுவாமி

அத்தகைய முழுப் பொய்யரான, அரசியல் கோமாளியான சுப்பிரமணியம் சுவாமி, தற்போது மஹிந்தவின் ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை நடவடிக்கையின் முக்கிய பாகம் ஏற்றிருக்கிறார். ஜனாதிபதி அப்துல் கலாம் குறித்து இந்திய ஊடகங்களுக்கு கதை விட்டமை போன்று, இலங்கைக்கு வந்து, தாம் பிரதமர் மோடிக்கு ஜெயலலிதா குறித்து அப்படிக் கூறினேன், இப்படிக் கூறனேன் என்றும், அதற்கு பிரதமர் மோடி அப்படிக் கூறினார், இப்படிக் கூறினார் என்றும் மஹிந்தவுக்குக் கயிறு கொடுக்கிறாரோ தெரியவில்லை. அண்மையில் கூட மஹிந்தவைக் கேட்டுத்தான் பிரதமர் மோடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் குழுவைச் சந்திப்பார் என்று கூட கதையொன்றை சுவாமி அவிழ்த்து விட்டிருந்தார். பிரதமர் மோடி இந்த விடயம் குறித்து மஹிந்தவுடன் தொடர்பு கொண்டதாக எந்தத் தகவலும் வெளியானதில்லை.

சுப்பிரமணியம் சுவாமிக்கு இந்த நாட்டில் வாக்குரிமை கிடையாது. அதே சமயம் சுவாமியின் கருத்தைக் கணக்கில் எடுத்து இந்த நாட்டு வாக்காளரெவரும் மஹிந்தவுக்கு வாக்களிப்பதெனத் தீர்மானிக்கப் போவதில்லை. சுவாமி போன்றவர்களதோ, இந்திய அரசினதோ கருத்து நிலைப்பாட்டை இந்த நாட்டு வாக்காளர்கள் நம்பித் தமக்கு வாக்களிக்கப் போவதில்லை என்பதை 2005ஆம் ஆண்டிலேயே மஹிந்த தெரிந்து கொண்டிருந்தார். 2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் பிரகடனத்தை அடுத்து இந்திய அரசு ரணிலை இந்தியாவுக்கு அழைத்திருந்தது.

அப்போதைய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ரணிலைச் சந்தித்துப் பேசியிருந்தார். அதன் பின்னர் சந்திரிகா இந்தியா சென்றிருந்தார். மன்மோகன், அப்போது சந்திரிகாவையும் சந்தித்திருந்தார். ரணில், சந்திரிகா ஆகிய இருவரிடமும் இலங்கை இனப் பிரச்சினைத் தீர்வுக்காக இரு தரப்பினரும் உடன்பாடொன்றை எட்டுமாறு மன்மோகன் சிங் ஆலோசனை தெரிவித்திருந்தார். ஜனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றியீட்டுவார் எனவும் சந்திரிகாவுடன் இணைந்து தேசிய அரசொன்றை அமைப்பிக்க இயலும் எனவும் இந்தியா அந்த வேளையில், திட்டமிட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. ஆனால் அந்த வேளையில் இலங்கையில் இருந்த இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் இந்திய அரசுக்கு அனுப்பி வைத்த இரகசியத் தகவலில் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவே வெற்றிபெற வாய்ப்பு அதிகமாக உள்ளதாகத் தெரிவித்திருந்தார். ஆயினும் இந்திய அரசு அதனை நம்பவில்லை. மஹிந்தவை இந்தியாவுக்கு வருமாறு அழைக்கவும் இல்லை. ஆனாலும் அந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவே வெற்றியீட்டினார். ஜே.வி.பி.தரப்பினரும், மஹிந்தவின் ஆதரவாளர்களும் மஹிந்த ஒரு சிங்கள பௌத்த வாதத் தலைவர் என்ற விம்பத்தை நாட்டின் கிராமிய மட்ட வாக்காளர் மத்தியில் உருவாக்கிக் கொடுத்ததாலேயே மஹிந்தவால் அந்தத் தேர்தலில் வெற்றியீட்ட முடிந்தது.

அதேவேளை- ரணிலோ, தாம் அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளின் ஆதரவு பெற்ற, கோட் சூட் அணிந்த மேலை நாட்டுக் கலாசாரப் பின்னணி கொண்ட விம்பத்தை உருவாக்கிக் கொண்டிருந்ததாலேயே அவரால் சாமானிய சிங்கள வாக்காளர்களது ஆதரவை ஈட்டிக்கொள்ள இயலாது போயிற்று. அதேவேளை- மஹிந்தவோ இன்று தனக்கு சிங்கள பௌத்தவாத தலைவர் என்ற விம்பத்தை உருவாக்கிக் கொடுத்து தேர்தலில் வெற்றிபெற வைத்த விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க தரப்பினை ஓரங்கட்டி வைத்துவிட்டு, சுப்பிரமணியம் சுவாமி போன்றோரின் ஆதரவைத் தனது வெற்றி வாய்ப்புக்காகப் பயன்படுத்த முனைகிறார்.

கிடைக்கப் பெறும் தகவல்களின்படி இந்தமுறை ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்கு மஹிந்த, கிராமத்து மஹிந்தவாகவன்றி, 'திறீடி' ஹைகிளாஸ் மஹிந்த போன்றே முன்வரவுள்ளார். 2005ஆம் ஆண்டில் ரணில் மேற்கொண்ட பரப்புரைக்கு ஒப்பான விதத்திலேயே மஹிந்தவின் பரப்புரை இந்த முறை அமையவுள்ளது. 1977ஆம் ஆண்டில் சிறிமாவோவும் இத்தகைய விதத்திலான பரப்புரையை மேற்கொண்டது. அந்தவேளையில் அவர் மூவுலகின் தலைவி என்ற விதத்தில் - கூட்டுச்சேரா நாடுகள் அமைப்பின் தலைவி என்ற பதவியை வகித்தமையினாலேயே ஆகும். ஆனால் நாட்டின் ஏழை மக்களுக்கு வயிறு பசித்த போது அவர்களுக்கு மூவுலகு தெரியவில்லை. மேலுலகு மட்டுமே தெரிந்தது. இதனாலேயே மாற்றீடாக நாட்டு மக்கள் 1977 தேர்தலில் ஜே.ஆரை பிரதமராகத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தனர். 1970ஆம் ஆண்டில் அமெரிக்காவின் பாதுகாவலன் எனத் தூற்றப்பட்ட ஜே.ஆரை 1997 ஆம் ஆண்டில் தமது பாதுகாவலனாக நாட்டு மக்கள் ஆக்கிக் கொண்டமை இதனாலேயே ஆகும். ஏனெனில் சிறிமாவோ உலகப் பிரசித்தம் பெற எண்ணியமை மஹிந்தவுக்கும் ஏற்படக் கூடுமா என்பது குறித்துத் தற்போது எதுவும் கூற இயலாதுள்ளது.

# இன்று கொடியேறுகிறான் சந்நிதி முருகன்

ந.அரியரத்தினம்



கந்தபுராண வரலாற்று நிகழ்வுகள் நடைபெற்ற காலத்திலிருந்தே செல்வச் சந்நிதி ஆலய வரலாறும் ஆரம்பமாகியுள்ளதை நாம் அறியக் கூடியதாகவுள்ளது. சூரபத்மனிடம் தூது சென்ற வீரவாகுதேவர் மகேந்திரபுரிக்குச் செல்லும் பொழுது சாயரட்டைப் பூசைக்குரிய நேரம் நெருங்கிவிட்டதால் இன்று தொண்டைமானாறு என விளங்கும் வல்லி ஆற்றுப் பகுதியில் தரை இறங்கி அங்கே முருகப்பெருமானுக்குப் பூசையை மேற்கொண்டுள்ளார். இதே போன்று சூரனுடன் இடம்பெற்ற போர் முடிவடைந்து திரும்பும் பொழுதும் வீரவாகுதேவர் இவ்விடத்தில் வேல் ஒன்றை வைத்து முருகப்பெருமானை வழிபாடு செய்துள்ளார். இவ்வாறு வீரவாகுதேவர் வழிபாடு செய்த வல்லி ஆற்று (தொண்டமானாறு)ப் பகுதி தான் இன்று செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்திருக்கின்ற பகுதி எனவும் நம்பப்படுகின்றது.

மேற்படி நிகழ்வுகள் நடைபெற்ற காலம் தொடக்கம் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்திருக்கும் ஆலயச்சூழல் புனிதம் நிறைந்த இடமாக விளங்கி வருவதாகப் பல அருளாளர்கள் கருதுகின்றனர். இவ்வாறான புனிதம் நிறைந்த வரலாற்று நிகழ்வுகளையும் இந் நிகழ்வுகள் நடைபெற்ற இடத்தில் அமைந்திருக்கும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் புனிதத்தையும் சராசரி மனிதர்களால் உணர்ந்து கொள்ள முடியாவிட்டாலும் வரலாற்றுக்காலம் தொடக்கம் ஞானிகளால் இவை அனைத்தும் நன்கு உணரப்பட்டே வந்துள்ளன.

செல்வச்சந்நிதி ஆலயம் காலங்காலமாகப் புனிதம் நிறைந்த ஆலயமாக விளங்கி வந்துள்ளதென்பதை அடியார்கள் விளங்கிக் கொள்ளக்கூடிய இன்னொரு நிகழ்வையும் இவ்விடத்தில் வெளிப்படுத்துவது பொருத்தமானது. ஆம்! எமது மண்ணில் வாழ்ந்து எமது மக்களை ஆன்மிக ரீதியில் ஆற்றுப்படுத்திய ஞானியாகிய யோகர் சுவாமிகளை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். யோகர் சுவாமிகள் இவ்வாலயத்துக்கு பலமுறை வந்து வழிபாடு செய்துள்ளார்கள். இவ்வாறு ஒருமுறை இவ்வாலயத்துக்கு வருகை தந்த யோகர் சுவாமிகள் இங்கே ஆலயத்தின் வீதி எங்கும் மூல மூர்த்தியாகிய சிவலிங்கங்கள் காட்சியளிக்கின்றனவே! இந்த மண்ணில் எனது பாதங்களை எவ்வாறு பதிப்பேன் என ஆதங்கப்பட்டு அதனைத் தன்னுடன் கூடச்சென்ற அடியார்களுக்கு எடுத்துக் கூறிய நிகழ்வும் இவ்வாலயத்தில் இடம்பெற்றுள்ளது.

கந்தபுராண கால வரலாற்றுத் தொடர்புடையதாகக் கருதப்படும் புண்ணிய தலமான செல்வச்சந்நிதி ஆலயம் போர்த்துக்கேயர் காலத்தில் அழிக்கப்பட்டதாக அறியமுடிகிறது. அதன்பின்பு செட்டி பரம்பரையினர் இவ்வாலயத்தை நிர்வகித்துள்ளனர். அவர்களுக்குப் பின்பு தற்பொழுது மருதர்கதிர்காமர் பரம்பரையினர் கதிர்காமத்தைப் போல வாய்கட்டி அன்பு வழியில் இங்கே பூசையை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்பொழுது ஆலயம் அமைந்திருக்கும் வல்லி ஆற்றுப் பகுதியில் முருகப்பெருமான் சிறுவனாக வந்து முருக பக்தரான [illegible] கதிர்காமரை ஆட்கொண்டு தனக்கு இ[illegible] ஆலயம் அமைத்து 65 ஆலம் இலைகளில் அமுது படைத்துபூசையைநடத்துமாறு வேண்டிக்கொண்டார். இந்த அற்புத நிகழ்வுக்கு இணங்கவே தற்போதைய பூசைச் செயற்பாடுகள் இந்த ஆலயத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல முருகப்பெருமான் மருதர்கதிர்காமரை கண்களை மூடுமாறு கூறி அவரைக் கதிர்காமத்துக்கு அழைத்துச் சென்று அங்கே இடம்பெறும் பூசை முறைகளைக் காண்பித்து வெள்ளியிலான வேல் ஒன்றையும் அவருக்கு வழங்கிய அற்புத நிகழ்வும் அங்கே அரங்கேறியது. அதற்கிணங்கவே இந்த ஆலயத்தின் மூலஸ்தானத்தில் எம்பெருமான் எளிமையான வேல்வடிவில் காட்சி தந்துகொண்டிருக்கின்றார். அத்துடன் கதிர்காமத்தில் கப்புறாளைகள் வாய்கட்டிப் பூசை செய்வதைப் போன்று இங்கேயும் பூசகர்கள் வாய்கட்டி சந்நிதியானுக்குப் பூசையை மேற்கொண்டு வருகின்றனர். அதுமட்டுமல்ல அன்றாட பூசைச் செயற்பாடுகளிலும் உற்சவ காலச் செயற்பாடுகளிலும் கதிர்காமத்தில் பின்பற்றப்படுவது போன்ற சடங்குகளும் சம்பிரதாயங்களும் செல்வச்சந்நிதி ஆலயத்திலும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

முருகப்பெருமானால் ஆட்கொள்ளப்பட்ட மருதர்கதிர்காமர் முதன் முதல் ஒரு தைப்பூசத் திருநாளிலே தான் இவ்வாலயத்தில் பூசையை நடத்தியதாக அறிய முடிகிறது. இதே போன்று 1814 ஆம் ஆண்டு இங்கே பூசைகள் நடைபெற ஆரம்பித்த ஆண்டாகக் கருதப்படுகிறது.

மருதர்கதிர்காமரின் சந்ததியினரான பூசகர்கள் சந்நிதியானுக்குப் பூசை செய்கின்ற செயற்பாட்டைத் தமக்குக் கிடைத்த ஒரு பேறாகவே கருதிச் செயற்பட்டு வருவதைக் காணமுடிகிறது. சந்நிதியானுக்குத் தினமும் 65 ஆலம் இலைகளில் நைவேத்தியமாக அமுது படைக்கின்ற செயற்பாடுகள் உட்பட அங்கே இடம்பெறும் அனைத்துச் செயற்பாடுகளையும் இந்த பூசகர்கள் மிகத் தூய்மையாகவும் விசுவாசமாகவும் செயற்படுத்தி வரும் சிறப்பையும் புனிதத்தையும் நாம் இன்றும் இங்கே காணமுடிகிறது.

# குழப்பம் விளைவித்த கும்பலுக்கும் பொலிஸாருக்கும் வித்தியாசம் இல்லை

## வேதனைப்படுகிறார் மறைந்து வாழும் வண.பிதா சத்திவேல்

இந்த மாதம் முற்பகுதியில் கொழும்பில் சமூக மற்றும் சமயங்களுக்கான மத்திய நிலைய மண்டபத்தில் காணாமற்போனவர்களின் குடும்ப உறுப்பினர்களின் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்து சர்ச்சைக்குள்ளான பிரமுகர்களில் ஒருவரான வண.பிதா எம்.சத்திவேல் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சத்தில் இருக்கிறார். வியாங்கொடையில் தாம் பணிபுரியும் தேவாலயத்துக்கு திரும்பிச் செல்ல முடியாமல் வேறோர் இடத்தில் இப்போது பாதுகாப்பாக தங்கியிருப்பதாக அவர் கூறியுள்ளார். தமது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாகத் தமது மூத்தவர்கள் தகவல் தந்திருப்பதுடன் தற்போதைக்கு வியாங்கொடைக்கு போக வேண்டாம் என ஆலோசனை கூறியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு அவர் அளித்துள்ள நேர்காணலில் தெரிவித்துள்ள சில முக்கிய விடயங்கள் வருமாறு:- காணாமற்போனவர்களின் குடும்பத்தவர்கள் தமது துன்பங்களையும், அனுபவங்களையும் வெளியிடச் செய்வதற்காக இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. வடக்கிலிருந்து இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நாங்கள் 20 குடும்பங்களைத் தெரிவு செய்திருந்தோம். கூட்டத்தில் கலந்து கொள்பவர்களின் விவரங்கள் தேவை என்பதால் அவர்களைப் பதிவுசெய்வதற்காக மண்டபத்தின் வெளியில் ஒருவரை நிறுத்தியிருந்தோம். பிற்பகல் 3.30 மணி அளவில் வெளியில் பெரும் ஆரவாரம் கேட்டது. நானும் இன்னொரு குருவானவரும் என்ன நடக்கின்றது என்பதை அறிய வெளியில் சென்றோம். அங்கே சில பௌத்த குருமார்கள் ஆத்திரமூட்டும் வகையில் செயற்பட்டுக் கொண்டிருந்ததைக் கண்டோம். எனக்குச் சரளமாகச் சிங்களம் பேசத் தெரியும் என்பதால் அவர்கள் ஏன் அவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதை விசாரித்தேன்.

### ஒழுக்கசீலமா?

எமது கூட்டத்துக்குள் அத்துமீறி நுழைந்தவர்கள் தொடர்பாக நான் இரண்டு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றேன். சமயத்தலைவர்கள் என்ற முறையில் இன்னொரு புனிதமான இடத்துக்குள் அவ்வாறு ஆக்கிரமிப்புடன் நுழைவது ஒழுக்க சீலமாகாது. ஏனென்றால் அந்த மண்டபம் சென்.பாத்திமா தேவாலய வளவுக்குள் அமைந்துள்ளது. எனவே எமது கூட்டம் தொடர்பாக அவர்களுக்குப் பிரச்சினை இருந்திருந்தால். முதலில் அந்தத் தேவாலய பங்கு குருவானவருடன் அதைப்பற்றி பேசியிருக்க வேண்டும். இரண்டாவதாக மண்டபத்துக்குள் நுழைவதற்கு முன்னர் அவர்கள் மண்டபத்துக்குரிய அதிகாரிகளிடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அவை இரண்டும் அவர்களால் முடியாதென்றால் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களோடாவது தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அவர்களை கூட்டத்துக்குள் அனுமதிக்க எம்மால் முடியவில்லை. ஏனென்றால் அவர்கள் யார் என்பது எமக்குத் தெரியாமல் இருந்ததுடன் அந்தக் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்கள் அனைவரும் அழைப்பாளர்களாக மட்டுமே இருந்தனர். அந்த வகையில், அவர்கள் சிவில் சட்டங்களை மீறியது மட்டுமல்லாமல் சமயத் தலைவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஒழுக்க சீலங்களையும் சிறுமைப்படுத்திவிட்டார்கள்.

அந்தக் கூட்டத்தின் முக்கிய நோக்கம், பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மற்றும் தெற்கு மக்களுக்கிடையில் நட்புறவுப் பாலத்தை உருவாக்குவதாக இருந்தது. தமது அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களைப் பகிர்ந்து கொள்வதாகும். நாட்டின் இரு பகுதி மக்களுக்கிடையில் கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதாகும். இது நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. போரினால் மக்களுக்கு ஏற்பட்டுவிட்ட புண்களை மற்றும் அவர்களின் தேவைகளை அபிவிருத்தியினால் மட்டும் குணப்படுத்திவிட முடியாது. மக்கள் தமது வாழ்வு நிலைமைகளை விளங்கிக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதன் மூலமும் தான் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற முடியும்.

### பொலிஸார் என்ன செய்தார்கள்?

கூட்டத்துக்குள் அந்தக் கும்பல் வந்து ஆக்கிரமிப்பில் இறங்கிய சில நிமிடங்களில் பொலிஸார் அங்கு வந்து சேர்ந்தனர். ஒழுங்கீனமாக நடந்து கொண்ட கும்பலைக் கலைப்பதை விடுத்து துரதிர்ஷ்டவசமாக அவர்கள் எங்களைத்தான் கூட்டத்தைக் கலைக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அதற்கு நீதிமன்றக் கட்டளையொன்றைக் கூட அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. அவர்களுக்கிருந்த கடமை மிக எளிதானது. அந்தக்கும்பல் சட்டத்தை மீறியிருந்தார்கள் என்பது மிகத் தெளிவாக இருந்தது. அதற்கு ஏற்ற முறையில் அவர்கள் நடவடிக்கை எடுத் திருக்க வேண்டும். ஆனால் பொலிஸாருக்கும் குழப்பம் விளைவித்த கும்பலுக்குமிடையில் வித்தியாசமே தெரியவில்லை. ஏனென்றால் இருதரப்பினரும் கூட்டத்தை கலைக்கும்படியே கேட்டு நின்றனர். நான் ஒரு கிறிஸ்தவ குருவாக 26 வருடங்கள் பணி புரிந்துள்ளேன். இப்பொழுது நான் பணி புரியும் வியாங்கொடை சென். மேரிஸ் தேவாலயம் உட்பட நாடு முழுவதிலும் பணி புரிந்துள்ளேன். ஆனால் அந்தக் கும்பல் எனக்கொரு படத்தைக் காட்டி அந்த தேவாலயத்திலிருந்து நான் நீக்கப்பட்டுவிட்டதாகவும் இப்போது தெமட்டகொடையில் வீதியில் திரிந்து கொண்டிருப்பதாகவும் கூறினார்கள். மேலும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் துரோகிகள், புலிகளின் ஆதரவாளர்கள் என்றும் கூறினார்கள். கலந்து கொண்டவர்கள் அனைவரும் மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறினார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் அனைவரும் சாதாரண அப்பாவிப் பொதுமக்கள். பெரும்பாலானவர்கள் தாய்மார்கள். ஒவ்வொரு குடும்பத்துக்கும் 2 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டதாகவும் குழப்பம் விளைவித்தவர்கள் குற்றஞ்சாட்டினார்கள்.

இவை அனைத்துமே அடிப்படை இல்லாதவை. அவைகளை நிரூபிக்கும்படி நாங்கள் அவர்களுக்குச் சவால் விடுக்கின்றோம். அவர்களின் குழப்பத்தின் போது நாங்கள் அழிக்கப்பட வேண்டும். நாங்கள் தூக்கிலிடப்பட வேண்டும் என்றெல்லாம் கூச்சலிட்டார்கள். அது எங்கள் உயிருக்கு ஆபத்து விளைவிக்கும்படியான திறந்த நிலை அழைப்பாகும். நடந்தவைகளைப் பார்க்கும்போது அங்கே என்ன நடைபெற்றுக் கொண்டிருந்தது என்பதே அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் வேறு எவராலேயோ தூண்டிவிடப்பட்டவர்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது. அந்தக் கும்பலை அரசுதான் தனது அரசியல் நோக்கத்துக்காகப் பயன்படுத்தியிருக்கிறது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். இவை போன்ற சம்பவங்கள் எல்லாம் வாக்குகளைப் பெறுவதற்கான முயற்சிகள் என்றே கூற வேண்டும்.

மனித உரிமைகள் சபையின் சர்வதேச விசாரணைக் குழுவின் முன் சமர்ப்பிப்பதற்கு தகவல்களைச் சேகரிப்பதே அந்தக் கூட்டத்தின் நோக்கமாக இருந்தது என்ற குற்றச்சாட்டுப் பற்றி வண சத்திவேல் கூறுகையில்; ஐ.நா.விசாரணைக் குழுவுடன் தொடர்பு கொள்ள செயற்கைகோள் தொழில்நுட்பத்தைக் கூடப் பயன்படுத்துவதாக குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். நான் மீண்டும் கூறுகிறேன், சமய குருமார்கள் உண்மையைப் பேச வேண்டும். இந்த மாதிரிப் பொய்க் குற்றச்சாட்டுக்களைப் பார்க்கையில் : சமய உடைகளில் எங்கள் கூட்டத்துக்குள் புகுந்தவர்கள் உண்மை யான சமய குருமார்களாய் இருக்க முடியாது என்று தோன்றுகிறது. இந்த அரசு நீதியை வழங் கும் என்பதில் மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள். வட[illegible]ல் வாழும் மக்கள் தாம் உளவியல் ரீதியில் [illegible] கப்பட்டிருப்பதாக கருதுகிறார்கள். ஒரு [illegible] குருவானவர் பைபிளில் இருந்து ஒன[illegible] சுதந்திரமாகக் கூறக் கூட உரிமையில்லை[illegible] றால் சுதந் திரத்தினால் என்ன பயன்? [illegible] மேலும் கூறுகையில்; உள்ளூர் அதிகாரிக[illegible] கவலைகள் பற்றி உண்மையாக கவலை[illegible] றார்களில்லையென்றால் எங்களுக்கு [illegible] வழியில்லை. ஐ.நா.போன்ற நிறுவன[illegible] டம்தான் முறையிட வேண்டும். உ[illegible] பிரச்சினைகளை வெளியாரிடம் சொல்லி[illegible] காண்பதற்கு இந்த அரசும் அதன் [illegible] வாளர்களும்தான் எங்களைப் பி[illegible] தள்ளுகிறார்கள் என்றார் வண.சத்திவே[illegible]



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி பெறுவார்கள். மேலதிகாரிகள் ஆதரவும் கிடைக்கும்.



**இடபம்**: குடும்பத்தில் குதூகலமான சூழ்நிலை காணப்படும். பிரிந்து சென்றவர்கள் மீண்டும் உங்களை நாடி வருவார்கள். நிதானமாகப் பேசுவது நன்மை தரும். பணவரவு திருப்தி தரும். எதிர்பார்த்த தகவல்கள் வரும்.



**மிதுனம்**: மனதில் மகிழ்ச்சி ஏற்படும்படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும். வார மத்தியில் மனோதைரியம் அதிகரிக்கும். வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.



**கடகம்**: தொழில் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷமான நிலை காணப்படும்.



**சிங்கம்**: உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். பிள்ளைகள் மனம் மகிழும்படி தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். விருப்பங்கள் கைகூடும். அயல் வீட்டாருடன் அனுசரித்துச் செல்வது நன்மை தரும்.



**கன்னி**: காரியத் தடைதாமதம் ஏற்படும். எதிர்பார்த்தபடி எதுவும் நடக்காமல் இழுபறியாக இருக்கும். ஆனாலும் மனம் மகிழும் படியாக எல்லாம் நடந்து முடியும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.



**துலாம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம். குடும்பத்தில் இருப்பவர்களிடம் இருந்து மனம் நோகும்படியான வார்த்தைகள் வெளிப்படலாம். அனுசரித்துச் செல்வது நல்லது.



**விருச்சிகம்**: நிதானமாகச் செய்யும் செயல்கள் வெற்றியைத் தரும். எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. காரியங்களில் தாமதம் உண்டாகலாம். பேச்சின் இனிமையால் காரியம் கைகூடும்.



**தனுசு**: எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆனால் எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.



**மகரம்**: உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக அலைய வேண்டி இருக்கும். புதிய பொறுப்புகள் சிலருக்கு கிடைக்கலாம். உறவினர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.



**கும்பம்**: மற்றவர்கள் ஆலோசனை கேட்டு உங்களை நாடி வருவார்கள். உங்கள் குடும்பத்தை விட்டுப் பிரிந்து சென்றவர்கள் மீண்டும் வந்து சேருவார்கள். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். கூடுதல் கவனத்துடன் செய்யும் காரியங்கள் சாதகமான பயன் தரும்.



**மீனம்**: எதிர்ப்புகள் விலகும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். விரும்பிய காரியங்களைச் செய்து சாதகமான பயன் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும்.

## நாளை

**ஆவணி-10 செவ்வாய்க்கிழமை | 26.08.2014**

திதி: பிரதமை மு.இ.10.06 வரை
நட்சத்திரம்: மகம் கா.07.12 வரை

சுபநேரம்: 10.35-12.05 வரை
இராகுகாலம்: 03.05-04.35 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## காலம் ஒரு அளவுகோலே

காலம் என்பது எமது எண்ணங்கள் அளிக்கும் அளவுகோலே. கருதவொண்ணாத அளவுக்கு விரைவானது எண்ணம், அந்த வேகத்தைக் கொண்டு எமது எதிர்கால வாழ்வு முழுவதையும் நாம் ஒரு நொடிப் பொழுதில் வாழ்ந்து விடலாம். எதிர்கால வாழ்வு முழுவதையும் வாழ, எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை எம்மால் சொல்ல முடியாது; அது நொடிப் பொழுதிலும் ஆகலாம்; ஐம்பது பிறவிகளிலும் நேரலாம். அது ஆர்வத்தின் தீவிரத்தைப் பொறுத்தது. ஆகவே, போதிக்கப் படுபவர்களின் தேவைகளுக்கு ஏற்ப, போதனைகளை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். கொழுந்துவிட்டு எரியும் நெருப்பு அனைவரையும் பனிக்கட்டியையும் கூட விரைவில் விழுங்கிவிடும். பறவைகளைச் சுடும் போது, தோட்டாக்களைத் தொகுதியாகச் சுடு, ஒன்றாவது பறவையின் மீது படும். மனிதனுக்கு உண்மைகள் முழுவதையும் வழங்கு; தனக்குப்பொருத்தமான ஒன்றை அவன் தேர்ந்தெடுத்துக் கொள்வான். முற் பிறவிகள் எமது இயல்புகளை உருவாக்கியுள்ளன. எனவே, அவனது இயல்புகளுக்கு ஏற்ப போதனைகள் செய்ய வேண்டும். ஞான நெறி, யோக நெறி, பக்தி நெறி, கர்மநெறி, இவற்றுள் ஏதாவது ஒன்றை அடிப்படையாக்கி, அத்துடன் மற்றவற்றையும் அவனுக்குப் போதி.

ஞானத்தைப் பக்தியால் சமப்படுத்து, யோக நெறியை ஞான நெறியால் சமப்படுத்து. ஒவ்வொரு நெறியிலும் கர்ம நெறி ஒரு பகுதியாக இடம் பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொருவனையும் அவன் நிற்கும் நிலை யிலிருந்து முன்னேறச் செய்; சமய போதனைகள் ஆக்கபூர்வமாக இருக்கவேண்டும், அழிவு செய்வதாக இருத்தல் கூடாது.

# விண்வெளிக்கு மீண்டும் எலிகள்



ஒரு காலத்தில் விண்வெளிச் சோதனைகளுக்கு பயன்பட்ட எலிகளை மீண்டும் அதிக காலத்துக்கு விண்வெளிக்கு அனுப்ப நாசா முடிவு செய்துள்ளது. ஸ்பேஸ்.காம் என்ற இணையத் தளத் தகவலின்படி, இந்த புதிய எலி விண்வெளி வீரர்கள் விண்வெளியில் 30 முதல் 90 நாள்களுக்கு தங்கும்படி அனுப்பப்படும். சர்வதேச விண்வெளி மையத்தின் முதன்மை விஞ்ஞானியான ஜூலி ராபின் இது குறித்து, இதன் மூலமாக விலங்குகள் எவ்வளவு காலம் விண்வெளியில் தங்க இயலும் என்பதனைக் கணிக்க முடியும் என்று கூறியுள்ளார். மேலும், எலியைவிட அளவில் சிறியதான மூஞ்சூறுகளையும் அனுப்ப பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏனெனில் அவை குறைந்த அளவிலான உணவை மட்டுமே உண்டு உயிர் வாழக் கூடியவை என்றும் தெரிவித்துள்ளார் அவர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | 5 | | 8 | | 9 |
| 2 | | 6 | 9 | 4 | | | | 3 |
| 9 | 3 | | 7 | 1 | | | | |
| 5 | | 2 | 1 | | | | | |
| | 8 | 9 | | | | 3 | 2 | |
| | | | | | 4 | 5 | | 1 |
| | | | | 8 | 2 | | 5 | 7 |
| 8 | | | | 6 | 7 | 4 | | |
| 4 | | 7 | | 9 | | 6 | | |

## சனிக்கிழமைக்கான சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 9 | 4 | 6 | 7 | 2 | 5 | 1 |
| 7 | 5 | 6 | 2 | 3 | 1 | 9 | 8 | 4 |
| 2 | 4 | 1 | 9 | 8 | 5 | 6 | 3 | 7 |
| 8 | 7 | 2 | 1 | 5 | 9 | 4 | 6 | 3 |
| 6 | 1 | 5 | 3 | 2 | 4 | 8 | 7 | 9 |
| 9 | 3 | 4 | 8 | 7 | 6 | 5 | 1 | 2 |
| 4 | 6 | 8 | 7 | 1 | 2 | 3 | 9 | 5 |
| 5 | 2 | 7 | 6 | 9 | 3 | 1 | 4 | 8 |
| 1 | 9 | 3 | 5 | 4 | 8 | 7 | 2 | 6 |

# பற்றிசியன்ஸை தோற்கடித்தது சென்றலைட்ஸ்



யாழ்ப்பாணம்,ஓக. 25
இலங்கை கிரிக்கெட் பிரிவு 3இற்காக யாழ்.மாவட்டத்திலிருந்து ஓர் அணியைத் தெரிவு செய்வதற்கான தகுதி காண் போட்டியின் இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்றுள்ளது. நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகஅணி மோதிக்கொண்டது.
முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி35.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக நோபட் 38 ஓட்டங்களையும், முரளி 18 ஓட்டங்களையும், லிவிங்ரன் ஆட்டமிழக்காமல் 12 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்து வீச்சில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் வாதுஷண் 3 இலக்குகளையும், டார்வின் 2 இலக்குகளையும், எரிக்துஷாந்தன், கிரிசாந் ஆகியோர் தலா ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.
110 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் 17.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர். இதில் ஜேம்ஸ்யண்சன் 26 ஓட்டங்களையும், ஸ்ரிபன்ராஜ் 21 ஓட்டங்களையும், மயூரன் மற்றும் டார்வின் ஆகியோர் முறையே ஆட்டமிழக்காமல் 18, 23ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர். பந்து வீச்சில் பற்றிசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் லிவிங்ரன் 3 இலக்குகளையும், நிதர்சன் ஒரு இலக்கையும் வீழ்த்தினர். (ரி-23)

## காலிறுதி ஆட்டம்




யாழ்ப்பாணம்,ஓக.25
அகில இலங்கை பாட சாலைகளுக்கு இடையிலான 17 வயதுப்பிரிவு ஆண்கள் பிரிவு 3இற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டம் நாளை செவ்வாய் கிழமை அனுராதபுரம் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
இதில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு டுமினிக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ரி-23)

## உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஓக.25
வடமாகாண உடற்கல்விடிப்புளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் அணிக்கு 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்து கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வரு மாறு:
அராலி அண்ணா விளையாட்டுக்கழக அணிக்கும் மாதகல் சென்.தோமஸ் யுத் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அராலி அண்ணா விளையாட்டுக்கழக அணி 3:2 கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் ஈவினை கலைமகள் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஈவினை கலைமகள் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணிக்கும் அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி-23)

## கங்காருவை வீழ்த்தியது காமாட்சி



யாழ்ப்பாணம்,ஓக.25
கொழும்பு கங்காரு கிரிக்கெட் அக்கடமிக்கும் ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக்கழகத்திற்கும் இடையிலான 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட நட்பு ரீதியிலான கிரிக்கெட் ஆட்டத்தில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.
கடந்த வாரம் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிமைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் கொழும்பு கங்காரு கிரிக்கெட் அக்கடமி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக அணி பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் சுயன் 65 ஓட்டங்களையும்,கார்த்திக் 32 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.
பந்துவீச்சில் கொழும்பு கங்காரு கிரிக்கெட் அக்கடமிவிளையாட்டுக்கழக அணி சார்பில் ஜனசன் 2 இலக்குகளையும், கார்த்திக், மதுசன்,அஸ்லி ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் வீழ்த்தினர்.
பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு கங்காரு கிரிக்கெட் அக்கடமி விளையாட்டுக் கழக அணியினர் 17.5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 85 ஓட்டங்களை தமது அணி சார்பாக பெற்றனர். இதில் காந்தசீலன் 32 ஓட்டங்களையும், மல்சா16 ஓட்டங்களையும், தமது அணி சார்பாக பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழக அணி சார்பில், பவித்திரன் 4 இலக்குகளையும் கோகுல்ராஜ் 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ரி-23)

## புற்தரையில் அரையிறுதியாட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.25
அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 17 வயதுப்பிரிவு ஆண்கள் பிரிவு 2 இற்கான அரையிறுதியாட்டம் எதிர்வரும் புதன் கிழமை கொழும்பு புளுபில் புற்தரை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.
இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி ஏ அணியை எதிர்த்து கொழும்பு றோயல் கல்லூரி பி அணிமோதவுள்ளது.
யாழ் மாவட்டத்திலிருந்து உத்தியோகபூர்வமாக புற்தரையில் முதன்முறையாக விளையாடும் வாய்ப்பினை சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி-23)

## ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை கூடைப்பந்தாட்டத்தில் வெற்றி

யாழ்ப்பாணம்,ஓக.25
கல்ரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் 14 வயதுப்பிரிவு ஆண்,பெண் இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கல்ரன் கூடைப் பந்தாட்டத் திடலில் இடம் பெற்றுவருகின்றன.
இதில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற குழு நிலைப் போட்டிகளில் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி வெற்றி பெற்றுள்ளது.
முதலாவது ஆட்டத்தில் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து காலி அலோசியஸ் கல்லூரி அணி மோதிக்கொண் டது.
இதில் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 47:24 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.
இரண்டவது ஆட்டத்தில் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து குருநாகல் மாலிகதேவிகல்லூரி அணி மோதிக்கொண்டது.
இதில் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 44:04என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)

## சேனநாயக்காவை வீழ்த்தியது புனித ஹென்றியரசர் கல்லூரி

யாழ்ப்பாணம், ஓக. 24
வடக்கு - தெற்கு நட்புறவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 15வயதுப் பிரிவு மற்றும் 17வயதுப் பிரிவு அணிகளுக்கான ஆட்டங்களில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி கொழும்பு டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரியை தோற்கடித்து வெற்றி கண்டுள்ளது.
நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிமைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் 15 வயதுப்பிரிவு அணிகளிற்கான ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு டி.எஸ். சேனநாயக்கா கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. டினோஷன், டிசாந்தன் ஆகியோர் தமது அணிக்கான கோல்களை அடித்தனர்.
17வயதுப்பிரிவுக்கான ஆட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு டி.எஸ். சேனநாயக்கா கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை புனிதஹென்றியரசர் கல்லூரி அணியினர் 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றனர். அவ்வணி வீரர் மதுஷன் தனது அணிக்கான கோலினை அடித்தார்.(ரி-23)

# மாகாணமட்ட மேசைப்பந்தாட்டத்தில் சம்பியன்களை வென்ற ஏறாவூர் ஐயங்கேணி தமிழ் வித்தியாலயம்



சம்பியனாகத் தெரிவான 19 வயதுப் பிரிவு ஆண்கள் அணியினரும், பெண்கள் அணியினரும்

கரணவாய்,ஓக.25
கிழக்கு மாகாணப் பாடசாலை அணிகளுக்கு இடையிலான மாகாணமட்ட மேசைப்பந்தாட்டத்தில் 15 வயது மற்றும் 19 வயது ஆண், பெண் பிரிவுகளுக்கான போட்டிகளில் இவ்வருடத்திற்கான சம்பியன்களாக ஏறாவூர் ஐயங்கேணி தமிழ் வித்தியால அணி தெரிவு செய்யப்பட் ளது இப் பாடசாலையில் மே ந்தாட்டத்திற்கான உபக ங்கள் எவையும் இல்லாத போதும், அணிகள் மாகாணச் சம்பிய களை வென்றுள்ளமை குறி டத்தக்கது.
அத்துடன் 15 வயது பெ களுக்கான சதுரங்க ஆட் தில் சம்பியனாகவும், 15 வ பெண்களுக்கான பூப்பந்த டத்தில் இரண்டாம் இடத் யும் இந்தப் பாடசாலை அ கள் பெற்றுக் கொண்ட குறிப்பிடத்தக்கது.
(ரி-10)



# காதலும் இல்லை திருமணமும் இல்லை அனுஷ்கா சர்மா தரப்பில் பதில்

இந்திய அணியின் துணைத்தலைவர் கோஹ்லியை, அனுஷ்கா சர்மா காதலிப்பதாகவும் அவரை திருமணம் செய்யப் போகிறார் என்றும் வெளியான செய்திகள் தொடர்பில் எந்தவித உண்மையும் இல்லை என அனுஷ்கா சர்மா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அணி, இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் 3-1 என்ற கணக்கில் படுதோல்வியடைந்ததைத் தொடர்ந்து, இந்த தோல்விகளுக்கு வீரர்கள் தங்கள் மனைவிகளை அழைத்துச் சென்றது தான் காரணம் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை குற்றம் சாட்டியிருந்தது. இதன் தொடர்ச்சியாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, இனிவரும் காலத்தில் சுற்றுப்பயணம் மேற் கொள்ளும் வீரர்களுடன் பெண் தோழிகளோ அல்லது அவர்களின் மனைவியரோ செல்ல அனுமதி வழங்கப்படமாட்டாது எனத் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், இங்கிலாந்துக்கு விராட் கோஹ்லியுடன், அனுஷ்கா சர்மா சென்று தங்க இந்திய கிரிக்கெட் வாரியம் அனுமதி அளித்தது என்றும், இவர்கள் இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்ளவிருக்கின்றனர் என்றும் ஊடகங்களில் செய்திகள் வெளிவந்திருந்தன. அதேபோல் அண்மையில் நியூசிலாந்துக்கு எதிரான தொடரின் போதும் கோஹ்லியுடன் அனுஷ்கா சர்மா சென்றிருந்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இவ்வாறு தொடர்சியான செய்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக அனுஷ்கா சர்மாவின் பிரதிநிதி கூறுகையில், இணையங்களிலும், ஊடகங்களிலும் அனுஷ்கா சர்மாவின் திருமணம் பற்றி நிறைய செய்திகள் உலாவருகின்றன. நான் ஒன்றைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், இந்தச் செய்திகள் வெறும் வதந்திகளே. ஆகவே இது போன்ற விடயங்களை இனி எழுதவேண்டாம் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன் என்று அவர் கூறியுள்ளார்.

(ரி)

# பதிலடி கொடுக்குமா இந்தியா ஒருநாள் தொடர் இன்று ஆரம்பம்

டெஸ்ட் தொடரில் பெற்ற படுதோல்விகளுக்கு பதிலடி கொடுக்கும் நோக்குடன் இன்றைய தினம் முதலாவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்தை எதிர்கொள்கிறது இந்திய அணி. இந்த இரு அணிகள் மோதும் முதலாவது ஒருநாள் சர்வதேச ஆட்டம் இன்று பிரிஸ்டலில் நடைபெறவுள்ளது.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரை 1:3 என்ற ரீதியில் இழந்தது. இதையடுத்து ஒருநாள் தொடரில் பயிற்சியாளர் பிளட்சருக்கு உதவ இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் புதிதாக நியமிக்கப்பட்ட சஞ்சய் பங்கர், பாரத் அருண் உள்ளிட்டோரும், இவர்களது பணியை மேற்பார்வை செய்யவதற்காக நியமிக்கப்பட்ட ஒருநாள் அணியின் இயக்குனர் ரவி சாஸ்திரியும் அணியினருடன் இணைந்துள்ளனர்.

இந்திய அணியில் சஞ்சு சாம்சன், குல்கர்னி, கரன்சர்மா போன்ற இளம் வீரர்கள் களமிறங்க உள்ளனர். இவர்களின் உதவியுடன் டெஸ்ட் தொடரில் பெற்ற தோல்விக்கு இந்திய அணி தக்க பதிலடி கொடுக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. இப்போதைய நிலையில், இங்கிலாந்து மண்ணில் மற் றொரு தொடரை இழக்காமல் இருப்பதே இந்திய அணிக்கு முக்கியம்.

தரவரிசையில் இங்கிலாந்து 5ஆவது இடத்திலிருந்தாலும் சொந்தமண்ணில் விளையாடுகின்றமை, டெஸ்ட் தொடரை வென்ற மன திடத்துடன் களமிறங்குகின்றமை என்பன அவ் அணிக்கு கூடுதல் பலமாக உள்ளது. இதனால் டெஸ்ட் தொடரை போலவே ஒருநாள் ஆட்டங்களிலும் இந்திய அணிக்கும், அணித்தலைவர் டோனிக்கும் கடும் சவால் ஏற்பட்டிருக்கிறது.

இருந்தபோதிலும் ஒருநாள் தொடருக்கு முன்னதாக நடைபெற்ற பயிற்சி ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி பெற்று நம்பிக்கையை அதிகரிக்கச்



செய்துள்ளது. டெஸ்ட் தொடரில் சொதப்பிய கோஹ்லி (10 இன்னிங்ஸ், 134 ஓட்டங்கள்), பயிற்சி ஆட்டத்தில் 71 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார். இந்த சிறப் பான ஆட்டம் தொடருமானால் இந்திய அணி ஒருநாள் ஆட்டத்தில் வலு வானதாக விளங்கலாம். மேலும் அணியில் புதிதாக இடம் பெற்றுள்ள சஞ்சு சாம்சன் , தவால் குல்கர்னி, உள்ளிட்டோர் ஆஸ்திரேலியாவில் நடந்த ஏ பிரிவு அணிகளுக்கான தொடரில்சிறப்பாக விளையாடி கிண்ணத்தை வெல்ல உதவியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் இன்றைய ஆட்டத்தில் இந்திய அணி சிறப்பாக செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ரி)



# தொடரும் தங்கவேட்டை

ஓய்வு முடிவை மாற்றிக் கொண்டு மீண்டும் களம் திரும்பியுள்ள அமெரிக்காவின் நட்சத்திரம் மைக்கேல் பெல்ப்ஸ் (29 வயது) ஆஸ்திரேலியாவின் கோல்ட்கோஸ்ட் நகரில் நடைபெற்றுவரும் பான் பசிபிக் நீச்சல் சம்பியன் கிண்ணத் தொடரில் ஆண்களுக்கன 100 மீற்றர் பிரிவில், தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தார்.

ஒலிம்பிக் போட்டியில் 18 தங்கம் உட... மொத்தம் 22 பதக்கங்களை பெற்று மகத்தான சாதனை வீரராக விளங்கும் பெல்ப்ஸ், லண்டன் ஒலிம்பிக் போட்டிக்கு பிறகு ஓய்வு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது தனது ஓய்வு முடிவை மாற்றிக் கொண்டு மீண்டும் களமிறங்கி உள்ள அவர் கோல்ட் கோஸ்ட் தொடரில் தங்க வேட்டையை மீண்டும் ஆரம்பித்துள்ளார். (ரி)

# டெஸ்ட் அணித்தலைமைக்கு டோனி பொருத்தமானவரே - ஸ்டீபன் பிளமிங்



டெஸ்ட் அணித்தலைவர் பதவிக்கு டோனி பொருத்தமானவரே என்று நியூசிலாந்து அணியின் முன் னாள் அணித்தலைவர் ஸ்டீபன் பிளமிங் கூறியுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி 1:3 என்ற கணக்கில் மோசமாக தோற்றுள் ளது. இதனால் பல்வேறு தரப்பு களில் இருந்தும் கண்டனங்களை இந்திய வீரர்கள் பெற்று வருகிறார் கள். குறிப்பாக டோனி டெஸ்ட் அணித்தலைவர் பதவிக்கு பொருத்த மானவர் இல்லை என்று பல முன்னாள் வீரர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் நியூசிலாந்து அணி யின் முன்னாள் அணித்தலைவர் ஸ்டீபன் பிளமிங் இது பற்றி கூறு கையில், தோல்வியால் டோனி நெருக்கடியில் இருக்கிறார். ஆனால் என்னைப் பொறுத்தவரை டெஸ்ட் அணித்தலைவர் பதவிக்கு அவரே பொருத்தமானவர். நெருக் கடியில் சிறப்பாக செயல்படும் திறமை அவருக்கு இருக்கிறது என்று கூறி யுள்ளார்.

ஐ.பி.எல் ஆட்டங்களில் ஸ்டீபன் பிளமிங், டோனியின் அணித் தலை மையின் கீழ் விளையாடும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு பயிற்சியாளர் என்பது குறிப்பிடத் தக்கது. (ரி)

# பொதுநல காரியங்களுக்கு நிதி திரட்ட முன்னுரிமையளித்த இலங்கை வீரர்கள்



பொதுநல காரியங்களுக்காக நிதி திரட்டும் நோக்கில் நடத்தப்பட்டு வரும் வேடிக்கையான விளை யாட்டிற்கு இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர்கள் முன்னுரிமை கொடுத்துள்ளனர்.

உலக பிரபலங்கள் பலரும் ஏற் றுக்கொண்ட 'ஐஸ் பக்கெட்' சவாலை இலங்கை அணியின் கிரிக்கெட் வீரர்களான குமார் சங்கக்காரவும் மகேல ஜெயவர்த்தனவும் ஏற்றுக் கொண்டனர். ஏ.எல்.எஸ். எனப் படும் நரம்பு தொடர்பான நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத் தவும், நிதி திரட்டவும் 'ஐஸ் பக்கெட்' சவால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சவாலை உலக பிரபலங்களில் பலர் ஏற்று தங்கள் தலையில் ஒரு வாளி குளிர்ந்த நீரை ஊற்றி யுள்ளனர். மேலும் இந்த சவாலை ஏற்கும் ஒவ்வொருவரும் 3 பேரை கைகாட்டி அவர்களை இந்த சவாலை ஏற்குமாறு கூற வேண்டும். ...படி இலங்கை அணியின் நட்சத்திர வீரர்களான மஹேல ஜெயவர்த்தன மற்றும் குமார் சங்கக்காரா ஆகிய இருவரும் 'ஐஸ் பக்கெட்' சவாலை விளையாடியுள்ளனர்.

இதனையடுத்து அஞ்சலோ மத்தி யூஸ், ஆஸ்திரேலிய நட்சத்திர வீரர் மைக்கல் கிளார்க் மற்றும் இந்திய நட்சத்திர வீரர் ராகுல் டிராவிட் ஆகி யோருக்கு மஹேல ஜெயவர்த் தனவினால் சவால் விடுக்கப்பட் டுள்ளது. மேலும் பொதுநல காரியங் களுக்காக நிதி திரட்டும் நோக்கில் நடத்தப்பட்டுவரும் இந்த விளை யாட்டின் ஊடாக நன்கொடை வழங்கத் தயாராக உள்ளதாக மஹேல ஜெயவர்த்தன தெரிவித் துள்ளார். (ரி)

# சச்சினதும், டிராவிட்டினதும் இடத்தினை கோஹ்லி, புஜாராவால் நிரப்ப முடியாது

விராட் கோஹ்லி மற்றும் புஜாராவால் சச்சின், டிராவிட் ஆகியோரின் இடத்தை நிரப்புவது சந்தேகம் என்று முன்னாள் இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித்தலைவரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான ஜெப்ரி பாய்காட் கூறியுள்ளார்.

இங்கிலாந்து மண்ணில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் மோசமாக விளையாடியுள்ள இந்திய டெஸ்ட் அணியின் எதிர்காலம் கவலை அளிக்கும் வகையில் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

முன்னணி வீரர்களான சச்சின் டெண்டுல்கரும், ராகுல் டிராவிட்டும் இந்திய டெஸ்ட் அணியில் பெரும் பங்கு வகித்தனர். மத்திய வரிசையில் விளையாடும் இந்த ஜோடி எதிர் அணிக்கு சிம்ம சொப்பணமாக திகழ்ந்தது.

இவர்களது ஓய்வுக்கு பிறகு அந்த இடத்தை விராட் கோஹ்லியும், புஜாராவும் நிரப்புவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

டிராவிட் ஓய்வுக்கு பிறகு புஜாரா 3ஆவது வரிசையிலும், சச்சினின் ஓய்வுக்கு பிறகு கோஹ்லி 4ஆவது வரிசையிலும் விளையாடி வருகிறார்கள். நடந்து முடிந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்த ஜோடி சிறப்பக செயற்பட்டிருக்கவில்லை. இந்தத் தொடரில் புஜாரா 222 ஓட்டங்களையும், கோஹ்லி 144 ஓட்டங்களையுமே எடுத்தனர்.

இது குறித்து பாய்ட் கூறியதாவது:

சச்சினுடன் கோஹ்லியையும், டிராவிட்டுடன் புஜாராவையும் ஒப்பிடுவது கேள்வியை ஏற்படுத்தி இருக்கிறது. சச்சின், டிராவிட் அளவுக்கு இவர்களால் டெஸ்டில் சாதிக்க முடியுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இளம் வீரர்களான இந்த இருவரது ஆட்டமும் அண்மைய தொடர்களில் எனக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. அவர்கள் செய்த தவறையே மீண்டும் மீண்டும் செய்தனர் என்று கூறினார். (ரி)

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அண்மையில் வீடு அல்லது Annex உடனடியாக வாடகைக்கு உண்டு.

தொடர்பு : 0757052686

## ராஜஸ்தான் அணி நீக்கம்

ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கத்துக்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் இடையே ஏற்பட்டுள்ள மோதல் காரணமாக ரஞ்சிக் கோப்பை உள்ளிட்ட உள்ளூர் தொடர்களில் இருந்து ராஜஸ்தான் அணி நீக்கப்பட்டுள்ளது.

கடந்த 2008 முதல் 2010 வரை ஐ.பி.எல். தலைவராக இருந்த லலித் மோடிக்கு, நிதி முறைகேடு தொடர்பான புகாரில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை 2013இல் வாழ்நாள் தடை விதித்தது.

ஆனால் உச்ச நீதிமன்ற அனுமதியுடன் ராஜஸ்தான் கிரிக்கெட் சங்க தேர்தலில் போட்டியிட்ட மோடி, அதில் வெற்றி பெற்றார். இந்நிலையில் வாழ்நாள் தடையில் இருந்த லலித் மோடி தேர்தலில் வென்றுள்ளதால் ராஜஸ்தான் கிரிக்கெட் சங்கத்தை பி.சி.சி.ஐ. காலவரையின்றி இடைநிறுத்தியுள்ளது. இதனால் ரஞ்சிக் கோப்பை உள்ளிட்ட உள்ளூர் தொடர்களில் பங்கேற்பதற்கு ராஜஸ்தான் அணிக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பி.சி.சி.ஐ. தரப்பில் வெளியான செய்தியில், நாங்கள் நடத்தும் தொடர்களில் ராஜஸ்தான் அணி பங்கேற்க முடியாது. இதனால் உள்ளூர் கிரிக்கெட் வீரர்கள் பாதிக்கப்படுவர் என்று எங்களுக்குத் தெரியும். இது தொடர்பான வழக்கு முடியும் வரை காத்திருக்க முடியாது. 2014 - 15ஆம் ஆண்டுக்குரிய உள்ளூர் தொடர் அட்டவணையை இறுதி செய்து விட்டோம். பிரச்னைகளுக்கு சுமுக தீர்வு ஏற்படும் பட்சத்தில் ராஜஸ்தான் அணி சேர்க்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. (ரி)

## மரண அறிவித்தல்



### அருட் சகோ. டானியேல் (சாமிநாதர்)

செபமாலை தாசர் துறவற சபையைச் சேர்ந்த அருட்சகோ. டானியேல் (சாமிநாதர்) நேற்று (24.08.2014) ஞாயிற்றுக்கிழமை இறை வனடி சேர்ந்துள்ளார்.

இவர் வங்காலையைச் சேர்ந்த காலஞ்சென்ற நசரேத் சோசை ரட்ணம்லம்பேட் தம்பதிகளின் அன்பு மகன் ஆவார்.

இவரது உடலம் இல. 05, நல்லூர் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இன்று (25.08.2014) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் இவரது இறுதி அஞ்சலி நிகழ்வுகள் விசேஷ செப வழிபாடுடன் செபமாலை தாசர் குடும்பத்தினால் நடத்தப்படும்.

பின்னர் இவரது உடலம் அச்சுவேலியில் அமைந்துள்ள செபமாலை தாசர் துறவற மடத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பின்னர் மாலை 3 மணிக்கு இரங்கற் கூட்டுத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து யாழ். ஆயர் வண. தே[illegible]மஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் இவரது இறுதி அடக்க வழிபாட்டுடன் கூடிய இறுதி அஞ்சலி நிகழ்வுகளும் நிறைவேற்றப்பட்டு அங்கேயே அமைந்துள்ள செபமாலை தாசர் துறவற சபையினரின் கல்லறை தோட்டத்தில நல் அட[illegible]கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
செபமாலை தாசர்
துறவற குடும்பத்தினர்.

(C/16172)

## சுயநலமிக்க இந்திய வீரர்கள்



இந்திய கிரிக்கெட் வீரர்கள் சுயநலவாதிகள் என்று அந்த அணியின் முன்னாள் வீரரும், பாரதீய ஜனதா கட்சியின் மக்கள் பிரதிநிதியுமான கீர்த்தி ஆசாத் கூறியுள்ளார்.

இங்கிலாந்து மண்ணில் ஏற்பட்ட தொடர் தோல்வியால் அணித்தலைவர் டோனி மற்றும் வீரர்கள் கடும் விமர்சனத்துக்கு உள்ளானார்கள்.

இந்நிலையில் 1983ம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வென்ற இந்திய அணியில் இடம் பெற்ற முன்னாள் வீரரும், பாரதீய ஜனதா கட்சியின் மக்கள் பிரதிநிதியுமான கீர்த்தி ஆசாத் இந்திய வீரர்களை கடுமையாக சாடியுள்ளார். இது குறித்து அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது, இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி 1:3 என்ற கணக்கில் இழந்தது வேதனைக்குரியதாகும். இதை பார்க்கும் போது வீரர்கள் நாட்டுக்காக விளையாடுவதில் அக்கறை காட்டவில்லை என்பது தெரிகிறது.

இந்திய அணியில் விளையாடும் வீரர்கள் நாட்டுக்காக மோசமாக ஆடுகிறார்கள்.

அதே நேரத்தில் ஐ.பி.எல். போட்டிகளில் அவர்கள் தங்கள் அணிக்காக அபாரமாக விளையாடுகிறார்கள். சுய நலவாதிகளாக இந்திய வீரர்கள் இருக்கிறார்கள் என்று கூறியுள்ளார். (ரி)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் ஐயாத்துரை திருநாவுக்கரசு

தோற்றம் 20.02.1948 — மறைவு 05.09.2013



அன்பு பாராட்டி
ஆதரவு தனை நல்கி
இன்புறவே எமை வளர்த்து
ஈடில்லா வாழ்வு தந்தீர்
உங்கள் மறைவதனால்
ஊரே கலங்கியது
எங்கே, இனிக் காண்போம்
ஏக்கமுடன் தேடுகின்றோம்
ஐயா உங்கள் ஆத்மா சாந்தி பெற வேண்டுகின்றோம்

டச்சு வீதி, உடுவில் — குடும்பத்தினர்

(51222)

## மரண அறிவித்தல்



### விஜயரத்தினம் ஜெயானந்தன்

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் 46 சிவன் பண்ணை வீதியை வதிவிடமாகவும், கொண்ட விஜயரத்தினம் ஜெயானந்தன் அவர்கள் 23/08/2014 சனிக்கிழமையன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஜயரத்தினம் - மகேஸ்வரி தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்ற கைலாயநாதன் மற்றும் கோபாலம்மா தம்பதியினரின் அருமை மருமகனும், சிவாஜினியின் அன்புக் கணவரும், கிலோஜன், தரணிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், நித்தியானந்தன், கலாநிதி, ஸ்ரீரங்கன், இரவிச் சந்திரன், கருணானந்தன், விஜியேந்திரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25/08/2014) திங்கட்கிழமை பி.ப. 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொர்ள்ளவும்.

46, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ். (51225) தகவல்: குடும்பத்தினர்.

## 2 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

### அமரர் பொன்னம்பலம் கிருபைரத்தினம் (பத்மினி)

இரண்டு ஆண்டுகள் முடிந்தும் மறக்க முடியாத எங்கள் தெய்வத்தை இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் மறக்கவே முடியாது வளமாகவும், நலமாகவும் எம்மை ஆதரித்து, அன்பு பாராட்டி அக மகிழ்வூட்டிய அன்புத் தெய்வம் எம் நெஞ்சிருக்கும் வரை நினைவிருப்பார். கர்த்தருள் சங்கமமாகிவிட்ட எம் தெய்வத்தின் திருப்பாதங்களில் எமது கண்ணீரை காணிக்கை ஆக்குகின்றோம். எத்தனை ஆண்டுகளானாலும் கர்த்தருடன் இருந்து எம்மை ஆசீர் வதிப்பீர்களாக.

குழந்தையாக 10 11 1950 — கர்த்தருக்குள் 25 08 2012



25.08.2014
உங்கள் நினைவுகளுடன் வாழும்
கணவர், மருமக்கள், பிள்ளைகள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்

தேவாலய வீதி,
சங்கானை

(51223)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 25.04.1940 மறைவு 26.07.2014

கடந்த 26.07.2014 சனிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்

**தம்பு இராசையா**

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் கடந்த 23.08.2014 சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (25.08.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

84/7.A.V. றோட், அரியாலை,
யாழ்ப்பாணம். [50877][4-3.6]

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மேரிஸ்ரெலா (செல்வி) அமலதாஸ்



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிஸ்ரெலா அமலதாஸ் நேற்று (24.08.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செலஸ்ரின்-ஜோண்ஒவ்ஆக் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற மனுவல்-திரேசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், அமலதாஸின் (அந்தோனி) அன்பு மனைவியும், டேமியன், றெபேக்கா, பேணாட் ஆகியோரின் பாசமிகு தாயாரும், டிமோவின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (25.08.2014) திங்கட்கிழமை பி.ப. 3.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நாவாந்துறை புனித பரலோக அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

474/12, சூரியவெளி,
நாவாந்துறை வடக்கு, நாவாந்துறை.
077 841 8676, 021 490 6839

தகவல்:
குடும்பத்தினர்.

## சிறுவர் சந்தை சதாம் பாடசாலையில்



மூதூர், ஓக. 25

மூதூர் சதாம் பாலர் பாடசாலையில் வருடாந்தம் இடம் பெற்று வருகின்ற சிறுவர் சந்தையானது வெள்ளிக் கிழமை நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் ஹி.ஜபருள்ளா அவர்களின் தலைமையில் பாடசாலையின் கட்டடத் தொகுதியில் இடம் பெற்ற சிறுவர் சந்தையில் அனைத்து மாணவர்களும் வெவ்வேறு விதமான பொருள்களை விற்பனை செய்தனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மூதூர் வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் து.ஜஹார் கலந்து கொண்டு சந்தையை ஆரம்பித்து வைத்ததுடன் பொருள்களையும் கொள்வனவு செய்தார்.

இந்தச் சிறுவர் சந்தை பாடசாலை, முன்பள்ளி ஆசிரியைகள் மற்றும் பெற்றோர்களின் பூரண ஒத்துழைப்புடன் நடைபெற்றதுடன் பொருள்களை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பிரதேசவாசிகளும் வருகைதந்து கொள்வனவு செய்தனர். (ஓ-10)

## நெஞ்சக் கதவை கொஞ்சம்........

### தண்டனைகள் அர்த்தமுள்ளன

மத பீடாதிபதி ஒருவர் "மக்கள் பணத்தைச் சூறையாடுவோருக்கு இந்த உலகத்தில் மட்டுமல்ல, பரலோகத்திலும் தண்டனை கிடைக்கும்" என்கிறார். இறந்த ஒருவரது ஆன்மா பரலோகத்தைச் சேர்ந்ததும் அவரவர் பாவ, புண்ணியங்களின்படி சொர்க்கமோ, நரகமோ செல்வர் எனும் மத நம்பிக்கை பொதுவாகக் காணப்படுகிறது. முன்னரெல்லாம் சமய, சமூக அமைப்புக்கள், குற்றச்செயல்களை வகைப்படுத்தி அவற்றுக்கான தண்டனைகளின் விளக்கப் படங்களுடன் "நரக லோகத்தில் பாவிகள்" என மும்மொழிகளிலும் அச்சிட்டு விநியோகித்தன. அதில் குறிப்பிட்டிருந்தவை எங்களைச் சிந்திக்க வைத்து மனச்சாட்சிக்கு மதிப்பளிக்க உதவின.

செய்தி ஊடகங்களுக்கு இங்கு இப்போ நல்ல தீனி. "தந்தையை 11 மாதங்களாக கட்டிவைத்திருந்த மகள், கண்டித்த தாயைத் தாக்கிய மகன், வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி யாழ்ப்பாணத்தில் கொலை, குடிதண்ணீர் தாங்கியில் ஒயில் ஊற்றிய விஷமிகள், உயிரிழந்தவரது நகைகளைத் திருடிய அரச உத்தியோகத்தர், ஆலயக் கதவுகள் திருட்டுக்காக தீயிட்டு எரிப்பு, மருத்துவமாது வேடத்தில் நூதனக்கொள்ளை, கடலில் அமிழ்த்தி நண்பனைக் கொல்லும் முயற்சி, தேர் முட்டியில் பெண்ணின் சடலம், மறைந்திருந்து தாக்கும் சம்பவங்கள் அதிகரிப்பு" என்றவாறாக செய்திகள் நரக லோகத்துக்கு ஆள்சேர்ப்புச் செய்வனவாகவே காணப் படுகின்றன.

இந்த மண் சமூகவிரோதச் செயல்களின் கூடாரமாகி விட்டதற்கு மேற்குறிப்பிட்டவை சின்னச்சின்ன உதாரணங்களே. சமூகத்தை உலுப்பி விட்டிருக்கும் எத்தனையோ குற்றச்செயல்கள், "குழுக்களுக்கிடையிலான மோதலைத் தடுக்கப்போன பொலிஸாருக்கு அடிக்குமளவுக்கு" வீங்கிப் பெருத்து நிற்கின்றன. குற்றச்செயல்களின் பெருக்கத்துக்கு இந்த மாதிரியானவையும் காரணிகளா? அந்த உலகத் தண்டனை கிடைக்குமோ இல்லையோ, இந்த உலகத் தண்டனை கிடைத்தேயாக வேண்டும். அப்போதுதான் தண்டனைகள் வழங்கப்படுவதன் அர்த்தத்தை தவறுசெய்ய நினைப்பவர்களும் புரிந்துகொள்ளலாம்.

செல்வவேலாயுதம்.

## உயிர் பல்வகை அமைப்பை வெளிப்படுத்தும் முத்திரைகள் நிலாவெளியில் வெள்ளியன்று வெளியீடு

நிலாவெளி, புறாமலையின் உயிர் பல்வகை அமைப்பை வெளிப்படுத்தும் புதிய ஆறு முத்திரைகளையும் முதல் நாள் அஞ்சல் உறையையும் அஞ்சல்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, நிலாவெளியில் வெள்ளிக்கிழமை வெளியிட்டுவைத்தார்.


இந்த முத்திரைகளில் தேசிய கடல் உயிரினப்பூங்காவாகிய புறாமலைத்தீவிலும் அதனோடு இணைந்த கடற்பரப்பிலும் இயற்கையாகக் காணப்படும் பல்வேறு கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் பெறுமதிமிக்க பவளப்பாறைகள் என்பன இடம்பெற்றுள்ளன.

தேசிய மட்டத்திலும் சர்வதேச அளவிலும் உல்லாசப் பயணிகளைக் கவரும் புறாமலைத் தீவின் பல்வகை உயிரினங்கள்தொடர்பானமுத்திரைகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் முத்திரை சேகரிப்பாளர்கள் மத்தியில் பெருமளவிலான கிராக்கி காணப்படுகின்றது.(வ)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை அருளானந்தர்

(K.S.அருளானந்தர் இளைப்பாறிய கூட்டுறவுக்கல்லூரி அதிபரும், கூட்டுறவு பரிசோதகரும்)



அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் சங்கானை மற்றும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை அருளானந்தர் (K.S.அருளானந்தர் இளைப்பாறிய கூட்டுறவுக் கல்லூரி அதிபரும், கூட்டுறவு பரிசோதகரும்) 23.08.2014 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை- தங்கம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற நடராஜா -இரத்தினம் தம்பதியரின் (பேவி- சங்கானை) மருமகனும், கமலவதனாவின் அன்புக் கணவரும், அஜாந்தினி(ஆசிரியை, தெஹிவளை தமிழ் மகாவித்தியாலயம்), அஜந்தன் (மென்பொருள் பொறியியலாளர் Virtusa Srilanka), தூசாந்தினி(இலங்கை வங்கி, திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காந்தரூபனின் (வைத்திய அதி காரி, பிரதேச வைத்தியசாலை, வேலணை) அன்பு மாமனாரும், மகேஸ்வரி முத்துலிங்கம் (கனடா), காலஞ்சென்ற சதானந்தன் (அல்வாய்), சச்சிதானந்தன்(அளவெட்டி), காலஞ்சென்ற சரஸ்வதி சதானந்தன் (மூளாய்), முருகானந்தன் (அக்கராயன்குளம்), காலஞ்சென்ற கருணானந்தன் (கொழும்பு), நித்தியானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2014) திங்கட்கிழமை மு.ப.10 மணிக்கு 42 கஸ்கிஸன் வீதி, திருகோணமலையில் நடைபெற்று, பூதவுடல் திருகோணமலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.அஜந்தன் (மகன்)
077 272 1197

(சி/16164)(4.6)


### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1970 கிரக பாவம் 80, இளமைத் தோற்றமுடைய மணமகளுக்கு மணமகன் தேவை. (51207)(7.6.3)
தொடர்பு : 077 321 1491

### கடை வாடகைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் (கச்சேரிக்கு மிக அருகில்) 15'x26' உடைய கடை வாடகைக்கு உண்டு. தொடர்பு : 077 356 5059 (51207)(7.6.3)

### கடை வாடகைக்குண்டு

உரும்பிராய் மடத்தடி, ஊரெழு அம்மன் கோயிலுக்கு இடைப்பட்ட பலாலி பிரதான வீதியில் சகல அடிப்படை வசதிகளுடன் கூடிய 5 கடைகள் அடங்கிய கடைத் தொகுதி வாடகைக்குண்டு. (51160)(7.6.3)
தொடர்பு : 077 949 9823, 077 550 0719 (வ.ரவி)

### தோட்டக்காணி விற்பனைக்கு

கோப்பாய், இராசவீதியில் றோட்டுக்கு அருகில் 3¾ நிலப்பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 076 544 6750
077 908 0257
(சி.15621) (45.3.6)


### வாடகைக்கு

சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் பிளெச்சர் வீதியில் மூன்று அறை, இரண்டு குளியலறையுடன் தளத்திற்கு மாபிள் பதித்த சகல வசதிகளும் கொண்ட வீடு தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு. (51210)(7.6.3)
தொடர்பு :
071 444 2134, 077 226 7180


## முதலாம் ஆண்டு நினைவலைகள்

### வைரவிப்பிள்ளை இரத்தினசபாபதி

பிறப்பு 16 . 11 . 1956
இறப்பு 05 . 09 . 2013



ஓராண்டு ஆயினும் உன் நினைவு எம்மைவிட்டு நீங்கவில்லை - ஐயா!
ஆறுதல் பலர் கூறியும் அமைதி அடையவில்லை எம் நெஞ்சம்
ஆழ்கடல் முத்துப்போல நீர் கிடைத்தீர் எம் குடும்பத்துக்கு
யார் கண் பட்டதுவோ தெரியவில்லை
ஏன் எமைவிட்டு நீக்கிச் சென்றீர்
நீர் எம்மைவிட்டுச் சென்றாலும்
உம் நினைவுகளும், உம் அறிவுரைகளும்
எம்மை வாட்டி வதைக்குதய்யா
யார் உள்ளார் இனி எமக்கு உம்மைப் போல எம்மை வழி நடத்த
இருப்பினும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அங்களப்பாய்,
இணுவில் கிழக்கு.

உங்கள் பிரிவால் வாடும் :
குடும்பத்தினர்.
077 787 2322

# மரண அறிவித்தல்

## திருமதி விஜயலட்சுமி சண்முகநாதன்



யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தைப் பிறப்பிடமாகவும் மன்னார் உப்புக்குளம் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயலட்சுமி சண்முகநாதன் நேற்று (24.08.2014) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் சண்முகநாதன் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் - மாவட்ட செயலகம் மன்னார்) அவர்களின் அன்பு மனைவியும், சசிகலா, வசிகரன் (காணி மாவட்டப்பதிவாளர் அலுவலகம் - மன்னார்), பாஸ்கரன், நவகலா (உப்புக்குளம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் உப தலைவர்), புஸ்பாகரன் (விவசாயத் திணைக்களம் - மன்னார்), சுதாகரன் (வயரிங் - சிறி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் விஜயகுமாரி, விஜயராசா, விஜயராணி, விஜயகுமார், இந்திராணி, சாந்தகுமாரி ஆகியோரின் அன்பு சகோதரியும், கந்தசாமி, காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் துரைராஜா, புஸ்பராஜா (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்), புவனேஸ்வரி, ரோகினி, ஜெயந்தா, ஜெயபாலன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும், சுப்பிரமணியம் (இ.போ.ச. சாரதி - மன்னார்), வாசுகி, வரதராஜன் (புகைப்படப்பிடிப்பாளர்), ஜெசிகலா, வக்ஷலா, சுபாஜினி ஆகியோரின் அன்பு மாமியும், விஜிதன், தர்மினி, ருசிந்தன், கிஷாலினி, கிஷாமினி, ரக்ஷாயினி, சுஜீவன், ஆகாஷ், ஹரிஷ், கிதுஷன், கவின், நவின், லோசன், நமீதன், டிஷான், சஜின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 03 மணியளவில் மன்னார் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உப்புக்குளம் வடக்கு,
மன்னார்.

தகவல்:
(சி.16169) (45.6.3) குடும்பத்தினர். 077 186 9131

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை குணரெத்தினம்

[நயினாதீவு – 06]



நயினாதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வேலணை அம்பிகைநகர் 7ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை குணரெத்தினம் 23.08.2014 சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பூரணச் சந்திரன்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சுந்தராம்பாளின் பாசமிகு கணவரும், லபீந்திரன் (இந்திரன்), குணசுந்தரி, வனசுந்தரி, ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), குகேந்திரன் (இந்தியா), ஜெயச்சந்திரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுகுணசுந்தரி மற்றும் இந்துமதி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பேரின்பராணி, புண்ணியலிங்கம், மகேஸ்வரன், ஜீவராணி (பிரான்ஸ்), றோகினி (இந்தியா), யசிதா (பிரான்ஸ்), காலஞ்சென்ற சசிகுமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சரஸ்வதி (பிரான்ஸ்), காந்தரூபி (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இரத்தினசிங்கம், காலஞ்சென்ற மோகனாம்பாள் (பிரான்ஸ்), லலிதாம்பாள் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.08.2014 புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேலணை அம்பிகை நகர் அம்பலவாணர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7ஆம் வட்டாரம்,
அம்பிகைநகர், வேலணை. (51217)(7.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## 'கலாபூஷணம்' பொன்னுத்துரை கனகரத்தினம்

சாவகச்சேரி பெருங்குளம் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், தாழையடி ஒழுங்கை, திருநெல்வேலி, கூமாங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கனகரத்தினம் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் அருளம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கால்ஞ்சென்றவர்களான நாகராசா - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சுசிலாதேவியின் அன்புக் கணவரும், அருள்குமரன்(மதன், ஸ்ரீ ஜயவரத்தனபுர பல்கலைக்கழகம், வணிகபீடம் முதலாம் வருடம்), செந்தில்குமரன்(குமரன், வவுனியா விபுலானந்தா கல்லூரி-கணித பிரிவு) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், செல்வலட்சுமி, பாலசிங்கம்(பாலன்), செல்வதி, ரஞ்சி, பத்மா, ஸ்ரீகாந்தன்(இலங்கை மின்சாரசபை-வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தெய்வேந்திரன், சிவபாக்கியம், முத்துத்தம்பி, தங்கராசா, காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் ரூபி, பரமேஸ்வரி (பேபி), இராமச்சந்திரன்(ஜே.பி.), நாகேஸ்வரநாதன் (நாதன்), யசோதரி(ரதி-கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் தாழையடி ஒழுங்கை திருநெல்வேலியில் இன்று (25.08.2014) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் பி.ப. 3மணிக்கு தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாழையடி ஒழுங்கை,
திருநெல்வேலி.
0775540359 (C/51220)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

# மூவாயிரம் குடும்பங்களுக்கு 63,000லீற்றர் குடிதண்ணீர்

*கரவெட்டிப் பிரதேச சபையால் விநியோகம்*

கரணவாய், ஓக.25

கரவெட்டிப் பிரதேச சபையால் நாளாந்தம் 3ஆயிரம் குடும்பங்களுக்கு 63 ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுவதாக பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு தெரிவித்தார்.

தற்போது நிலவிய கடும் வறட்சி காரணமாக பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் குடிதண்ணீர் பிரச்சினை பெருமளவில் ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்து பிரதேச சபையின் பவுஸர் மூலம் நாளாந்தம் குறிப்பிட்ட இடங்களில் வைத்து நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது.



*கோப்புப்படம்*

குடிதண்ணீரை விநியோகிப்பதற்கான போதிய பவுஸர்கள் இல்லாத காரணத்தினால் ஒன்றுவிட்ட ஒருநாள் என்ற அடிப்படையில் இந்த நீர் விநியோகம் இடம்பெற்று வருவதாக பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார். (வ-108)

## வீடு வாடகைக்கு

மந்திகை சிலையடி, மில் ஒழுங்கையில் (புற்றளையில்) சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. (ſ/16168) (4.6.3)

தொடர்பு: 077 981 0961

## மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1982 இல் பிறந்த பரணி நட்சத்திர, UK குடியுரிமை பெற்ற ஆண் மகனுக்கும்.

1984 இல் பிறந்த விசாக நட்சத்திர (7 இல் செவ்வாய்) மணமகளுக்கும், படித்த தகுதி யான வரன்கள் தேவை.

தொடர்பு : 077 758 9728
(பி.ப. 6 - 8 வரை)

## வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிலையம்

### ஆசிரியர்கள் தேவை

வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிலையத்தினரால் பாடசாலையை விட்டு நீங்கியோருக்கான

01. தையல் பயிற்சி
02. மனைப் பொருளியலும், மனை அலங்காரம், தலை அலங்காரம் மற்றும் கேக் ஐசிங், பயிற்சி வகுப்புக்கள் ***இலவசமாக*** நடத்தப்பட்டு வருகின்றன.


இதில் இணைந்து கற்பிப்பதற்கு தகுதியான ஆசிரியைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சுயவிவரங்களை எதிர்பார்க்கும் ஊதியம், தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக

**தலைவர், வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிலையம், இல 105, இராஜ வீதி, திருநெல்வேலி கிழக்கு,** எனும் முகவரிக்கு கிடைக்கத்தக்கதாக **30.08.2014** இற்கு முன்னர் தபாலில் அனுப்பி வைக்கவும். மேற்படி முகவரி சுற்றாடலில் வதிவோர் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு 0718628390

**நிர்வாகம்,**
**வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிறுவனம்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இணுவில் மேற்கு
J/191 கிராமசேவையாளர்
**க.இரவீந்திரன்** (தரம் I)
இன்று 25.08.2014இல்
பூரணமாக ஓய்வுபெறும்
இவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு
அவரது ஓய்வு காலத்திலும்
எல்லாச் சிறப்பும் பெற்றுவாழ
வாழ்த்துகின்றோம்.

Congratulations
Best Wishes

*வாழ்த்துவோர்:*
ஆனந்தராசா குடும்பம்
இணுவில்.

இணுவில் மேற்கு.

(51216)(7.6.3)

## கட்டடம் வாடகைக்கு

இல. 328, பருத்தித்துறை வீதியில் ஆனைப்பந்திச் சந்தியிலிருந்து நல்லூர் செல்லும் வழியில் 50 மீற்றர் தூரத்தில் மாடிக்கட்டடம் வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்பு : 075 039 6725/ 077 658 3631

## வீடு வாடகைக்கு

K.K.S வீதியில், யாழ். இந்துக் கல்லூரிக்கு முன்பாக வீடு வாடகைக்கு உண்டு. குடும்பம் / தனியார் நிறுவனத்திற்கும் ஏற்றது.

தொடர்பு : 077 522 2533/ 071 190 3222

# மரண அறிவித்தல்



## சுப்பையா கோபாலசிங்கம்

மல்லாவி யோகபுரத்தைப் பிறப்பிடமாகவும், இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா கோபாலசிங்கம் 19.08.2014 இத்தாலியில் காலமானார்.

அன்னார் சுப்பையா - அஞ்சலை தம்பதிகளின் அன்பு மகனும் நேசராசா தம்பதிகளின் அன்பு மருமகனும், அமுதாவின் கணவரும், மதுமிகா, மான்சிகா ஆகியோரின் தந்தையும் தவமணிதேவி (தையலரசி தையலகம் மல்லாவி), அரியநாயகம் (பிரான்ஸ்), புஸ்பவதி (யோகபுரம் மகாவித்தியாலயம் பிரதி அதிபர்), பேரின்பநாயகம்(இத்தாலி), விசுவநாதன் (சுவிஸ்), கீதா (சுவிஸ்) காலஞ்சென்ற குகனேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சண்முகநாதன் தவமலர் (பிரான்ஸ்) , பாலசுப்பிரமணியம் (ஊர்மிலா ஆடையகம் மல்லாவி), சுகாகினி (பிரான்ஸ்), சிவமலர் (சுவிஸ்), குலசேகரம் ஆகியோரின் மைத்துனரும், சுவர்ணா (லண்டன்) தட்சாயினி, சுந்தர், தரிசன் (பிரான்ஸ்), ஆரணி ஆசிகன் (பிரான்ஸ்), சந்தியா, சமீனா, விதுசன் (சுவிஸ்) ஆகியோரின் சித்தப்பாவும், நிஷாந்தன், பிருந்தன் (லண்டன்), ஊர்மிளா, வனிதா, சர்வா, சயீபன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இத்தாலியில் 25.08.2014 இன்று நல்லடக்கம் செய்யப்படும். 25.08.2014 இன்று இல 768, யோகபுரம் மல்லாவியில் அமைந்துள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் துக்கம் பகிர்தல் நிகழ்வு இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(51220)

தகவல்:
குடும்பத்தினர்.

# ஐ.நா.பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றுவாராம் ஜனாதிபதி

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்ற உள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதி உரையாற்றுவதற்கு புலம்பெயர் தமிழர்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ள நிலையிலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் 69ஆம் பொதுச் சபைக் கூட்டம் நியூயோர்க்கில் நடைபெறவுள்ளது. அதில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றவுள்ளார்.

புலம்பெயர் தமிழர்களின் கடுமையான அழுத்தங்கள் காரணமாக கடந்த தடவை நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி பங்கேற்கவில்லை. அதேபோன்று இந்த ஆண்டிலும் ஜனாதிபதிக்கு எதிராகப் பெரும் போராட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்



ளது என்று கூறப்படுகின்றது. எனினும், இந்த முறை போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் என்பவற்றைக் கருத்திற் கொள்ளாது ஜனாதிபதி அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## தொடர்ச்சிகள்

### அரசின்

லக்ஷ்மன் கிரியெல்லவிடம் வினவினோம். அதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஆட்சி பீடமேறியது முதல் இற்றை வரை தமிழ் மக்களை ஜனாதிபதி மஹிந்தவின் அரசு தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றது. தீர்வுப் பொறி முறையாக ஐக்கிய தேசியக் கட்சி முன்வைத்த '13' ஆம் திருத்தத்துக்கு அப்பால் சென்று அரசியல் தீர்வைக் காண்பதற்குத் தயார் என ஜனாதிபதி பகிரங்கமாகவே அறிவித்திருந்தார். இந்த உறுதி மொழி ஏன் இன்னும் நிறைவேற்றப்படவில்லை? அரசு காலம்கடத்து வதால் தான் எமது நாட்டுப் பிரச்சினை இன்று கடல் தாண்டிச் சென்றுள்ளது" என்றும் அவர் சுட்டிக்காட்டி னார்.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் உரிய வகையில் பேச்சு நடத்தி, உள்ளக தீர்வுப் பொதியைப் பயன்மிக்கதாக அரசு மாற்றியமைத்திருந்தால் டில்லியிடம் சென்று பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டவேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏற்பட்டிருக் காது. எனவே, அரசு இனியும் காலம் கடத்துமானால் மேலும் பல நாடுகளி டம் உதவக் கோரி செல்லவேண்டிய நிலை கூட்டமைப்புக்கு ஏற்படும். ஆகவே, கூட்டமைப்புடன் இதயசுத்தியுடன் பேச்சு நடத்தி கௌரவமானதும் - ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான தீர்வைக் காண்பதற்கு அரசு முன்வர வேண்டும். அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் ஒத்துழைப்பு வழங்கும்" என்றும் குறிப்பிட்டார் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல. (ற-சி)

### எங்கு

இது வும் ஒரு காரணம். மாகாணசபை ஆளுநரை மாற்ற வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியதாலேயே நான் ஆளுநரை மாற்றவில்லை. சம் பந்தனும் அவரது கட்சியினரும் எங்கு சென்றாலும் இறுதியில் என்னிடமே வரவேண்டும். என்னிடம் வராவிட் டால் அவர்களால் தீர்வுகள் குறித்து பேச முடியாது என தன்னுடைய பிரதிநிதி ஊடாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

ஆயினும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஜனா திபதியின் இந்த குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. "நான் தமிழ்க் கட்சியின் தலைவர். நாங்கள் அரசியல் தீர்வொன்றுக்காகப் பாடுபடுகிறோம். இந்திய அரசின் அழைப்பின் பேரில் எங்களுடைய நிலைப்பாட்டை தெளிவு படுத்துவதற்காக நாங்கள் அங்கு செல்கிறோம்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆளுநரை மாற்றுவதாக ஜனாதிபதி உறுதியளிப்பதற்கு முன்னரே இதுகுறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டதையும் அவர் சுட் டிக்காட்டியுள்ளார். மேலும் சுப்பிரமணிய சுவாமியின் கருத்துகளையும் சம்பந்தன் கடுமையாக விமர்சித்துள்ளார்.

இதேவேளை, கூட்டமைப்பினரின் இந்தியப் பயணம் குறித்து கொழும்பு சீற்றமடைவதற்கு இன்னொரு காரணமும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியப் பிரதமர் மோடி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தனது பதவி யேற்பு விழாவில் சந்தித்தன் பின்னர் அரச பிரதிநிதி எவரையும் சந்திக்கவில்லை. இந்திய பிரதமரின் முதலாவது உத்தியோகபூர்வ பயணம் இலங் கைப் பிரதிநிதி ஒருவருடனேயே இடம் பெற்றிருக்க வேண்டும் என தான் கரு துவதாக வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை சந்திப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளதன் மூலமாக இந்திய அரசு இலங்கை அரசு 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும், அதற்கு அப்பாலும் செல்ல வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளதாகவும் கொழும்பு கருதுகின்றது. ஆட்சி மாற்றம் இடம் பெற்றாலும், அடிப்படைக் கொள்கைகள் மாறவில்லை என்பதே தெளிவான செய்தி என அரசு கருதுவதாகத் தெரிய வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-சி)

### எதிர்க்கட்சி

குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய கட்சி அரசியலில் ஈடுபடக்கூடாது என தாக்குதல் நடத்தியவர்கள் ரி-56 ரக துப்பாக்கியால் அலுவலகத்துக்குப் பொறுப்பாக இருந்தவரை அச்சுறுத்தியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, மக்கள் விடுதலை முன்னணி, ஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் தேர்தல் அலுவலகங்கள் சிலவும் நேற்றுமுன்தினம் இரவு தாக்கப்பட்டுள்ளன. அதிகாலை 3.10 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் தன்னை அவர்கள் அச்சுறுத்தியதாகவும் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஏ.எம். சமன் குமார குறிப்பிட்டார். ஜனநாயகக் கட்சியின் தொடங்கொல்ல தேர்தல் அலுவலகமும் நேற்று முன்தினம் இரவு தாக்கப்பட்டிருந்தது. (ற)

### பச்சிளம்

கைதுசெய்துள்ளனர். தற்போது விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ள சந்தேகநபர் களுத்துறை நீதிமன்றத்தில் இன்று முன்னிலைப்படுத்தப் படவுள்ளார் என்று பேருவளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (முன்னர் வந்த செய்தி 9 ஆம் பக்கத்தில்) (ற-சி)

### தாமதிக்க

விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. சீன மற்றும் ஜப்பான் நாட்டுத் தலைவர்கள் இலங்கைக்குப் பயணம் செய்ய உள்ளனர் என்றும், இந்தத் தருணத்தில் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இலங்கைக்கு எதிராக கருத்து வெளியிட அனுமதிக்க முடியாது எனவும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

எனினும் அவரது நுழைவிசைவு விண்ணப்பம் நிராகரிக்கப்படவில்லை என்றும், காலம் தாழ்த்தி அது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது. (ற)

### மீனவர்கள்

இந்த யோசனையை இலங்கை அரசு ஏற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டிருந்தார்.

இந்த நிலையில், சுப்பிரமணிய சுவாமி கூறியது போன்ற திட்டத்துக்கு சாத்தியமில்லை என்று இலங்கை மீன்வளத் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன திட்டவட்டமாக நிராகரித்துவிட்டார். (ற)

### தமிழர்களுக்கு

கையின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துள்ளனர். அந்த கட்சியைச் சேர்ந்த சுப்பிரமணியசுவாமி போன்றோர் இலங்கை ஜனாதிபதியை சந்தித்து தமி ழர்களுக்கு விரோதமாக நேர் மாறாக நடந்து கொள்கின்றனர்.

இலங்கைப் பிரச்சினையில் காங்கிரஸ் கட்சியைப் போலவே, பா.ஜ.க. அரசும் செயற்படுகிறது. அதில் சுப்பிரமணியசுவாமி போன்றோர் மிக வேகமாக செயல்படுகின்றனர்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

### இறந்த

வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் மு.மலரவன்.

"ஒருவர் உயிரிழந்தபின்னர் அவரது உடலில் உள்ள உறுப்புகள் பாதிக்கப்படாது இருக்குமேயானால் அவற்றை வைத்தியசாலைக்குத் தானம் செய்யுங்கள். நீங்கள் அவ்வாறு தானம் செய்வது பலர் உயிர் வாழ வழிவகுக்கும்.

கண் தானம் பற்றிய விழிப்புணர்வு தேவையாக உள்ளது. ஒருவர் உயிரிழக்கும் போது இரண்டு கண்கள், சிறுநீரகம் போன்ற உறுப்புகளைத் தானம் செய்தால், அத்தகைய உறுப்புகள் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு அவற்றைப் பொருத்தி அவர்கள் உயிர்வாழ உதவ முடியும்.

கண்தானம் மாத்திரம் இது வரை சுமார் 15 பேர் வரை வழங்கியுள்ளார்கள். ஆனால் அவ்வாறு உடலுறுப்புகள் தானம் செய்வது இங்கு மிகக் குறைவாக உள்ளது. அதனை மாற்றி அமைத்து உடலுறுப்புகளைத் தானம் செய்ய அனைவரும் முன்வர வேண்டும். யாழ். போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் உறுப்புகளைத் தானம் செய்வதற்குப் பொறுப்பாக உள்ளனர். ஒருவர் உயிரிழக்க முன்னர், தான் உயிரிழந்த பின்னர் தனது உறுப்புகளைத் தானம் செய்யச் சம்மதிக்கிறேன் என்று ஒப்பந்தம் எழுதி அதனை மருத்துவ அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் மாத்திரமே உயிரிழந்தவரிடமிருந்து உடல் உறுப்புகளைப் பெற்று ஏனையவர்கள் உயிர்வாழ்வதற்கு உதவ முடியும்.

உயிரிழந்ததன் பின்னர் வீணாகிப் போகும் உடல்உறுப் புகளைத் தானம் செய்ய அனைவரும் முன்வாருங்கள். நீங் கள் அவ்வாறு செய்வதன் மூலமாக பலர் உயிர்வாழ நீங்கள் உதவ முடியும்"- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

### சாட்சியம்

காணாமற்போனவர்களின் பெற்றோரே இவ்வாறு சாட்சியமளித்துள்ளனர். சாட்சியாளர்களை இழிவுபடுத்தும் வகையில் எவரும் கருத்து வெளியிடக் கூடாது. குற்றச்சாட்டுக்கள் உண்மை என்பதனை முடிந்தால் அரசாங்கம் நிரூபிக்கட்டும்.

சட்டத்தரணியான வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்துவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. 1989ஆம் ஆண்டு காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குரல் கொடுத்திருந்தார். தெற்கின் சிங்களத் தாய்மாருக்கு நட்டஈடு கிடைக்கப்பெற்றது. ஆனால் வடக்கின் தமிழ்த் தாய்மாருக்கு எதுவும் கிடைக்க வில்லை"- என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

### மோசமானவர்

யத்தளம் வெளியிட்டுள் ளது. இதுதொடர்பான ஒரு கருத்துக் கணிப்பை அவ்விணையத் தளம் நடத்திவருவதுடன் அதில் பலரும் இணையத்தளம் மூலம் வாக்கெடுப்பில் கலந்து கொண்டு வாக்களித்து வருகின்றனர்.

இந்த மோசமான மனிதர்கள் பட்டியலில் ரஷ்யாவின் மறைந்த தலைவர் ஜோசப் ஸ்டாலின் முதலிடத்தைப் பிடித்துள் ளார். இரண்டாவது இடத்தில் ஜேர்மனியின் மறைந்த சர்வாதிகாரி அடொல்வ் ஹிட்லர் இடம்பெற்றுள்ளார். ஹிட்லர், லட்சக்கணக்கான யூதர்களைக் கொன்று குவித்தவர் எனக் கூறப்பட்டுள்ளது.

அதேபோல சர்வாதிகாரி போபல்பாட் தற்போது 3ஆவது இடத்தில் இருக்கிறார். இடி அமீன் 4ஆவது இடத்தில் இருக்கிறார். அல்கொய்தா நிறுவுநர் ஒசாமா பின்லேடன் 5ஆவது இடத்திலும், சீனத்து மா சேதுங் 6ஆவது இடத்திலும் உள்ளனர். வட கொரியாவின் கிம் ஜோங் 7ஆவது இடத்தில் இருக்கிறார். ஹெய்ன்ரிச் ஹிம்ளர் 8ஆவது இடைத்தைப் பிடித்துள்ளார். அமெரிக்காவால் பிடிக்கப்பட்டு தூக்கிலிட்டுக் கொல்லப்பட்ட ஈராக் தலைவர் சதாம் ஹுசைன் 9ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். 10ஆவது இடத்தில் இத்தாலி சர்வாதிகாரி பெனிட்டோ முசோலினி இருக்கிறார்.

இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 13ஆவது இடத்தில் இருக்கின்றார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷவுக்கு இந்தப் பட்டியலில் 25ஆவது இடம் கிடைத்துள்ளது. சோனியா காந்தி 29ஆவது இடத்தில் இருக்கிறார். தமிழகத்தின் முன்னாள் முதல்வரும் திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவருமான கலைஞர் கருணாநிதி - இந்தப் பெயர் பட்டியலில் 31ஆவது இடத்தில் இருக்கின்றார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பஸில் ராஜபக்ஷ இந்த பட்டியலில் 48 ஆவது இடத்தில் இருக்கின்றார். (ற)

### கூட்டமைப்பு

அமைச்சர், இந்தியா வின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர், இந்தியாவின் முன்னாள் பிரதமர், இந்தியா வின் தற்போதைய பிரதமர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர்.

அதனையடுத்து நேற்று இரு நாடாளுமன்ற உறுப்பினர் கள் தவிர்த்து எஞ்சிய 4 நாடாளுமன்ற உறுப்பினர்க ளும் நாடு திரும்புவர் என்று திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் அவர்களது பயணத் திட்டம் திடீரென மாற்றப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் அறுவர் அணியில் மூவர் தமிழகத்துக்கு நேற்றுப் பயணமாகியுள்ளனர். தமிழகத்தில், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வரும் தமிழக அரசியல் தலைவர்களை கூட்டமைப்பினர் சந்திக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதன் போது தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவையும் சந்திப்பதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளது என்றும் கூறப்படுகின்றது. இருப்பினும் இது இன்னமும் உறுதி செய்யப்படவில்லை. தமிழகத்துக்குப் பயணமாகிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதியே நாடு திரும்புவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### யாழ்.போதனா

யின் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்த ராஜா. ரூபா 15 மில்லியன் பெறுமதியான இந்த நவீன கருவியை ஆஸ்திரேலிய மருத்துவ உதவி நிதியமும், ஆஸ்திரேலிய ரோட்டறிக் கழகமும் இணைந்து வழங்கியுள்ளன. அவர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

"இதுவரை காலமும் இந்தச் சிகிச்சை தேவைப்படும் நோயாளர்கள் கொழும்புக்கே அனுப்பப்பட்டு வந்தனர். ஆயினும் தற்போது வழங்கப்பட்டுள்ள இந்தக் கருவி மூலம் இனிமேல் நோயாளர்களுக்கு கொழும்பு செல்ல வேண்டிய தேவை ஏற்படாது. ஏற்க னவே இந்திய அரசின் உத வியுடன் வழங்கப்பட்ட கண் சத்திர சிகிச்சை உபகரணங் களுடன் பூரணமான கண் சிகிச்சைப்பிரிவாக இயங்க முடியும் என்று வைத்திய சாலை நிர்வாகம் நம்புகிறது. தவிர அடுத்த கட்டமாக குழந்தைகள் கண் நோய் தொடர்பாக கண்டறியும் ஸ்கானர் இயந்திரத்தைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக குழந்தைகளின் கண்நோய் மற்றும் குளுக்கோமா போன்ற நோய்களுக்கு சிகிச்சை அளிக்க முடியும்"- என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதேவேளை போதனா வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் மு.மலரவன் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

"இந்த உதவித் திட்டத்தின் ஒரு கட்டமாக அண்மையில் சுமார் 200 பேருக்கு கற்றாக் வில்லைகளை வழங்கி உதவியுள்ளனர். வடக்கில் பார்வைக் குறைபாடுடைய திறமையான மாணவர்கள் உள்ளனர். அவர்களுக்கு உரிய சாதனங்களை வழங்க வேண்டும்.

யாழ்.மாநகர சபையினால் வழங்கப்பட்ட வைத்திய சாலைக்கு அருகில் உள்ள காணியில் 5 மாடிக்கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டு அதில் முதலில் இரண்டு மாடிகள் கொண்டதாக கட்டடம் அமைக்கப்படவுள்ளது. அதில் நவீன வசதிகளுடன் கூடியதான கண்சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படவுள்ளது"- என்று தெரிவித்தார். (ற-4)

### தேர்

காலை 7.15 மணிக்கு ஆறுமுகசுவாமி, வள்ளி, தெய்வானையுடன் தேரில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலித்தார். கடந்த ஆண்டுகளை விடவும் கந்தனின் அருள்வேண்டி இம்முறை ஆயிரக்கணக்கான பக்தர்கள் அலையெனத் திரண்டிருந்தனர். அரோகரா கோஷத்துடன் அடியார்கள் தேர்வடம் பிடிக்க ஆயிரக்கணக்கான அடியார்கள் மத்தியில் வீதியுலா வந்து அருள்கொடுத்தான் கந்தன்.

பெரும் எண்ணிக்கையான அடியார்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், தீச்சட்டி ஏந்தியும், காவடிகள் எடுத்தும் தமது நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்தனர். குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் காவடிகள் கந்தன் ஆலயத்தை நோக்கி அடுக்காக வந்தவண்ணமிருந்தன.

முற்பகல் 9.15 மணிக்கு தேரடி தரித்தது தேர். அதன் பின்னர் பச்சை சாற்றப்பட்டு இருப்பிடம் சென்ற கண்கொள்ளாக்காட்சி அடியார்களுக்கு பெருவிருந்தாய் அமைந்தது. தேர்த்திருவிழா அமைதியாகப் பக்திபூர்மாக நடைபெற்றது. வழமையாக ஹெலிகொப்டரில் இருந்து பூ சொரியும் செயற்பாடுகள் எவையும் இம்முறை நடைபெறவில்லை. இன்று தீர்த்தத் திருவிழாவாகும். (ற-7.10.21.86.17.135)

## நோயாளியின் கைப்பையை கையாடினார் கைதடிப் பெண்

*சாவகச்சேரி ஆஸ்பத்திரி சிற்றுண்டிச்சாலையில்*

தென்மராட்சி, ஓக. 25

நோயாளியின் கைப் பையைத் திருடிய கைதடியைச் சேர்ந்த பெண் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சாவகச்சேரி மருத்துவமனையில் இடம்பெற்றது.

மருத்துவமனை சிற்றுண்டிச்சாலையில் உணவருந்த வந்த நோயாளி மேசை அருகில் தனது கைப்பையை வைத்து விட்டு உணவருந்திக் கொண்டிருந்தார். உணவருந்திய பின்னர் பார்த்தபோது கைப்பையைக் காணாததால் தேடியபோது சிற்றுண்டிச்சாலையில் சுடுதண்ணீர் வாங்க வந்த பெண் எடுத்துச் சென்றதாக அங்கு நின்ற ஒருவர் தெரிவித்தார்.

இந்த விடயம் மருத்துவ மனை நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பார்வையாளர்களைப் பரிசோதனை செய்யுமாறு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

நோயாளரைப் பார்த்துவிட்டு வந்த பெண் கொண்டு வந்த பையை சோதனையிட்ட போது காணாமற்போன கைப்பை அதனுள்ளிலிருந்து மீட்கப்பட்டது.

இந்த விடயம் மருத்துவமனை பொலிஸ் உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டு அந்தப் பெண் அவரிடம் ஒப்படைக்கப்பட்டார். பின்னர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அந்தப் பெண் கொண்டு செல்லப்பட்டார்.

**விடுதிகளுக்கு இனி குறித்த நேரத்தில் மட்டுமே செல்லலாம்**

இதேவேளை சாவகச்சேரி மருத்துவமனையில் பார்வையாளர் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் பார்வையாளர்கள் விடுதிக்குச் செல்வது இன்று திங்கட்கிழமை தொடக்கம் தடைசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் பார்வையாளர் நேரத்துக்கு முன்னதாக வருவோரை வெளிநோயாளர் பிரி வில் தங்காமல் பார்வையாளர் மண்டபத்தில் தங்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நோயாளியின் கைப்பை திருட்டுச் சம்பவத்தை அடுத்தே இந்த நடவடிக்கை நிர்வாகத்தினால் எடுக்கப்படுகிறது. பார்வையாளர் நேரம் முடிவடைந்த பின்னர் உணவு கொடுக்க வருவோரை இதுவரை காலமும் உள்ளே சென்று வர அனுமதி வழங்கப்பட்டு வந்தது. இனிமேல் குறித்த நேரத்துக்கு பின்னர் விடுதிகளுக்குள் செல்ல அனுமதி வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-9)

## வெள்ளக் காடாகி விடும் வீதி மாரி கா ந்தில்

*கொழும்புத்துறையில் வாய்க்கால் புனரமைக்கப்படாததால்*



*புனரமைக்கப்படாத கால்வாய்*

கொழும்புத்துறை, ஓக. 25

கொழும்புத்துறை சுவாமியார் வீதிச் சந்திப் பகுதியில் உள்ள வெள்ள வாய்க்கால்களில் ஒன்று புனரமைக்கப்பட்டும் இன்னொன்று கவனிப்பின்றி கைவிடப்பட்டும் உள்ளமையால் ஒரு பகுதியில் மழை நீர் தேங்கி நிற்கக்கூடிய நிலை காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுவாமியார்வீதி வெள்ள வாய்க்காலும் கொழும்புத்துறைவீதி வெள்ளவாய்க்காலும் ஒரே வெள்ளப்போக்கி (போக்) வழியாக மழைநீரை பிரதான கால்வாய்க்கு எடுத்துச் செல்கின்றன.

இந்த நிலையில் சுவாமியார் வீதி கால்வாய் யாழ். மாநகர சபையால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும் கொழும்புத்துறைவீதி கால்வாய் திருத்தம் செய்யப்படாது கவனிப்பாரின்றி தூர்ந்து போய்க் காணப்படுகிறது.

எதிர்வரும் மழைகாலத்தில் இந்தக் கால்வாய் நீரோட்டமின்றி தேங்கிநிற்கும் அபாய நிலை காணப்படுகிறது. அவசர தேவையாக மண் தூர்வைகளை அகற்றி அந்தப் பகுதியில் உள்ள விற்பனை நிலையத்தின் முன்பாக மூடிய நிலையில் உள்ள கால்வா யைத் திருத்தம் செய்து நீர் வழிந்தோட வழி செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அதேவேளை - கொழும்புத்துறை வீதியில் பாண்டியன் தாழ்வுப் பகுதியில் உள்ள வெள்ள நீர் கால்வாய் மண் தூர்வையால் பல இடங்களிலும் அடைபட்டுக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-135)

## நூலிழையில் தப்பிய படகுப் பயணிகள்

யாழ்ப்பாணம், ஓக.25

குறிகாட்டுவான் துறைமுகத்தில் இருந்து சுமார் நாற்பதுக்கும் அதிகமான பயணிகளுடன் நெடுந்தீவுக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் புறப்பட்ட தனியார் படகு நெடுந்தீவு மலையடிப் பகுதியில் பெரிய விபத்துக்குள்ளாக இருந்த நிலையில் நெடுந்தீவுக்கான அரச படகு குமுதினி மற்றும் கடற்படைப் படகின் உதவியுடன் காப்பாற்றப்பட்டது.

குறிகாட்டுவானில் இருந்து நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு புறப்பட்ட குறிப் பிட்ட படகு நெடுந்தீவு மலையடி கடல் பகுதியில் சென்று கொண்டிருந்த போது திடீரென படகின் கரைப்பகுதிக்குள் கடல் நீர் உட்புகத் தொடங்கியது.


படகு ஊழியர் ஒருவர் நீர்வரத்துள்ள ஒரு பகுதியை துணியால் அடைத்துப் பிடித்தபடி இருந்தபோது ஏனைய பகுதிகளாலும் கடல் நீர் உட்புகுந்தது. பீதியடைந்த பயணிகள் கூச்சலிட்டு அல்லோகல்லோலப் பட்டதுடன் நயினாதீவுக் கரையிலாவது இறக்கி விடுங்கள் என்று கூறி சத்தம் போட்டதாகவும் பயணிகள் தெரிவித்தனர்.

தற்போது வீசும் பலத்த காற்று, கடல் கொந்தளிப்பு காரணமாக படகைத் திருப்பிக் கொள்ள முடியாத நிலையில் படகு பெரும் இக் கட்டான நிலைக்குள்ளானது.

இந்த நிலையில் பயணிகளுடன் வந்த அரச படகு குமுதினி குறித்த தனியார் படகைக் காப்பாற்ற படகை நோக்கி விரைந்ததுடன் கடற்படையினரும் நிலைமையை அவதானித்து உடனடியாக விரைந்து படகைக் காப்பாற்றி மீண்டும் குறிகாட்டுவானில் சேர்த்ததாகவும் பொது மக்கள் தெரிவித்தனர். (வ-7)

# மரண அறிவித்தல்

## பொன். நல்லையா



வளர்மதி வீதி, மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன். நல்லையா அவர்கள் கடந்த (21.08.2014) வியாழக்கிழமை அதிகாலை 6 மணியளவில் இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னன் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருகமகனும் வசந்தாதேவியின் (தேவி) பாசமிகு கணவரும் சுதாகரன் (சுவிஸ்), டினேஸ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பொன். நாகமணி, பொன். சின்னத்துரை மற்றும் பொன். கந்தையா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனபாலசிங்கம், கனகராசா, விக்னேஸ்வரன், ஜெயரத்தினம், தில்லைநாதன், லலிதாதேவி, கமலாதேவி, செல்வராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் தெய்வீகன், காண்டீபன், பிரதீபன், பார்த்திபன், காலஞ்சென்ற மதுசீலன் மற்றும் காஞ்சீபன், பிருந்தாபன், சிந்துஜன், சிந்து, சிவ கரன், ஹரிஹரன், செந்தூரன், சஞ்சீவன், நிக்ஷன், கோபிநாத், சயனுகா, கிருத்திகா, வஸ்ரிகா, ஜெயசுதா, சுஜாத்தா, வினோத்குமார், றெஜித்ரா (சுவிஸ்), ஷாமினா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் பூரணம், செல்லமுத்து (மணி - கனடா), சிவபதி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கருணைநாதனின் (கரன் - கனடா) அன்புச் சித்தப்பாவும் கவிப் பிரியா (கனடா), அனுசுதன் (கனடா), கார்த்திகா (கனடா), அனுரதன் (கனடா) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.08.2014) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சின்னத்தூ இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வளர்மதி வீதி,**
**மட்டுவில் தெற்கு.**

(51224)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# கடல் பாதுகாப்பை அதிகரிக்க இலங்கைக்கு ஜப்பான் உதவி

கொழும்பு, ஓக.25

இலங்கை அதன் கடலோர கண்காணிப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துவதற்கு உதவியாக கண்காணிப்புக் கப்பல்களை வழங்குவது குறித்து ஜப்பான் ஆராய்ந்து வருகிறது என்று அந்நாட்டு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய பிரதமர் சின்சோ அபே செப்ரெம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும்போது இது குறித்து இலங்கை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவார் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

ஜப்பானிலிருந்து மத்திய கிழக்குக்கு செல்லும் எண்ணெய்க் கப்பல்கள் இந்து சமுத்திர கடற்பாதையூடாகவே செல்கின்றன என்றும் அவற்றின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டே இந்தக் கண்காணிப்புக் கப்பல்கள் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன என்று கூறப்படுகின்றது.

> ஜப்பானிய பிரதமர் சின்சோ அபே செப்ரெம்பர் மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும்போது இது குறித்து இலங்கை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவார்

ஜப்பானியப் பிரதமரின் இலங்கைப் பயணத்தின் பின்னரே எத்தனை கப்பல்களை வழங்குவது என்பது குறித்து தீர்மானிக்கப்படும் என்று தெரிவித்துள்ள ஜப்பானிய அதிகாரிகள், புதிதாக கட்டப்பட்ட கப்பல்களை வழங்குவதா அல்லது பயன்படுத்தப்பட்ட கப்பல்களை வழங்குவதா என்பது குறித்து இரு நாட்டு அதிகாரிகளும் கலந்தாலோசித்து முடிவெடுப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளனர். (ற)



மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் திருவிழாவில் கலந்துகொண்டு விநாயகர் அருள் வேண்டியதுடன், தமது நேர்த்திக் கடன்களையும் செலுத்தினர். (ற-86)


## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் ஜய வருஷம் ஆவணி மாதம் 2 ஆம் நாள் (18.08.2014) திங்கட் கிழமை கந்தன் கழல் சேர்ந்த எங்கள் குல விளக்கு ஐயாத்துரைக் குருக்கள் அனந்த சர்மா (அசோக் ஐயா) அவர்களின் ஆத்மா சாந்தி கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

- 27.08.2014 புதன் காலை 10 மணி தசாகம்
- 28.08.2014 வியாழன் ஏகோதிஷ்டம், மாசிகம்
- 29.08.2014 வெள்ளி சபிண்டீகரணம்
- 30.08.2014 சனி பகல் 12 மணி கிருஹகயக்ஞம் (மதிய உணவு)

இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

கைதடி வடக்கு, கைதடி — குடும்பத்தினர்.


# மருத்துவவியல் தொழில்வல்லுநர்கள் இன்று தொடக்கம் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஓக 25

யாழ்ப்பாணம் உட்பட நாடளாவிய ரீதியில், வைத்தியசாலைகளில் பணிபுரியும் நிறைவு காண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்களின் ஒன்றியத்தினர் நாளை செவ்வாய்க்கிழமை காலை மணி தொடக்கம் கால வரையற்ற பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மருந்து வழங்குபவர்கள், மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்கள், எக்ஸ்றே கதிர்ப் பிரிவினர் மற்றும் இயன் மருத்துவர் (பௌதீக சிகிச்சைப் பிரிவினர்) ஆகியோரே தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். எனினும் அவசர சிகிச்சைகளை மாத்திரமே செய்வர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலாம் வகுப்பு உயர்வகுப்பு பதவிகளை நிர்ணயிக்கப்பட்ட கால அடிப்படையில் வழங்க வேண்டும், டிப்ளோமா ஆள் சேர்ப்பை நிறுத்தி பட்டதாரிகளை நியமனம் செய்தல் வேண்டும், மருந்துக் கலவையாளர் நியமனத்தை நிறுத்தி மருந்தாளர்களை நியமித்தல் வேண்டும் உட்பட 10 கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-4)


## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

கற்பதற்கு FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் முதல்தர் சர்வதேச நிறுவனம் AF மட்டுமே (யாழில் 1976 முதல்). 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், சரியான உச்சரிப்பு, CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. யாரும் படிக்கலாம் இன்றே பதிவுசெய்யுங்கள்



**021 222 8093** 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## NEW SCIENCE HALL

KANNATHIDDY — JAFFNA

### 2015 A/L DAY CLASS

(2014 A/L பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது)

திங்கள் தொடக்கம் வெள்ளி வரை

**PHYSICS**
திரு.S. சோதிலிங்கம்
திரு. G. பிரபா

**CHEMISTRY**
திரு.K. சிவத்திரன்
திரு. T.சுசாந்தன்

**BIOLOHY**
வழமையான ஆசிரியர்
திரு. T. கெங்காதரன்

**COM. MATHS**
திரு. S. செந்தில் ராஜ்
திரு.P. செந்தில்நாதன்
திரு. S. சிவகரன்

ஆரம்பம்:- 01.09.2014 திங்கட்கிழமை காலை 7.00 மணி

### EVENING CLASSES

PHYSICS - திரு.K. செல்வன், திரு. M. கபிலன்

CHEMISTRY - திரு.G. BENO, திரு. து. றஞ்சித்காந்

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

## INFORMATION TECHNOLOGY PARK

Jaffna, Sri Lanka.

Under the purview of the Ministry of Telecommunication & Information Technology

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka.

Office : 021 222 3641
Fax No : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

SEPTEMBER BATCH
- Dip.in Microsoft Office
- Dip.in Desktop Publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming

Online Course
- Dip.in PC Application & Office Management

Languages
- VB.Net
- PHP
- C Sharp
- Java

Workshops
- Internet & e-mail
- Webpage Designing & Development

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 19-09-14
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம 20-09-14

CENTRE FOR INFORMATION TECHNOLOGY
-Executive Officer-


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.